21 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978

RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்



**Jey Ahamparam** P.F.P
Insurance Advisor
**RBC** காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

**Call: 416.301.1733**

*To Join Our Brokerage / Fou your Real Estate Needs*



**Raja Mahendran,** P.Eng.
Contact: 416.315.9397

நதி 21 | பாலம் 22 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 15, 2011

# நோர்வேயின் சமாதான முயற்சிகளின் தோல்வி நான்கு அடிப்படைக்காரணங்கள்!

சர்வதேச ஆதரவுடன் இலங்கையில் அமைதி ஏற்படுத்த நோர்வே அரசு மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது ஏன் என்பது பற்றி ஆராய நோர்வே அரசு அமைத்த குழு தனது அறிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளது. நோர்வே அரசின் பணிப்பின் பேரில் தயாரிக்கப்பட்ட 208 பக்கங்களைக் கொண்ட, 'அமைதியின் பகடைகள்' என்ற தலைப்பிலான இந்த அறிக்கை, நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் வெளியிடப்பட்டது.





சிறிலங்காவில் அமைதி முயற்சி தோல்வியடைந்ததற்கு நான்கு காரணங்களை முக்கியமானவை என்று இது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த மக்கெல்சன் இன்ஸ்ரிரியூட்டைச் சேர்ந்த குன்னர் சோர்போ தெரிவித்துள்ளார். இந்தக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட அவர், அறிக்கையின் முக்கிய அம்சங்களை ஒஸ்லோவில் விவரித்தபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

"சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் இந்த அமைதி முயற்சிகளில் இறங்கிய போது கூட, தங்களது இலட்சியங்களை-நிலைப்பாடுகளை கைவிடாமலேயே இருந்து வந்தனர். இதனால் அவர்கள் ஒரு அரசியல் தீர்வைக் காணும் முயற்சியில் உளச்சுத்தியுடன் ஈடுபடவில்லை என்று கூறிவிட முடியாது. ஆனால் இந்த அமைதி முயற்சி எப்படி அரசியல் ரீதியாக முடிய வேண்டும் என்று இந்த இரு தரப்புகளுமே அவர்கள் வரையறுத்துக் கொண்ட நிலையிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் எந்த ஒரு மாற்றத்தையும் செய்யவில்லை" என்பது முதலாவது காரணம்.

"சிறிலங்கா நாடு மற்றும் அரசியலில் இருந்த கட்டமைப்பு ரீதியான அம்சங்கள் இந்த அமைதி வழிமுறையைப் பாதித்தது"- இது இரண்டாவது காரணம்.

"சிறிலங்காவில் நிலவும் பரம்பரை அரசியல், உட்கட்சி போட்டிகள், வேண்டியவர்களுக்கு அனுகூலம் செய்யும் அரசியல், தேசியவாத அரசியல் அணிதிரட்டல் ஆகியவை நாட்டை சீர்திருத்துவதற்கும் சர்வதேச நாடுகள் தலையிடுவதற்கும் இடையூறாக இருந்தன." இதனால் "பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு இருந்த வாய்ப்பு மிகவும் குறுகியதே." - இது மூன்றாவது காரணம்.

"அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான சமநிலை இருக்கும் ஒரு நிலை, மேற்கு நாடுகளோடு ஒத்த கருத்துணர்வில் இயங்கும் ஒரு அரசு இருப்பது, பல தரப்பட்ட அனைத்துலக நாடுகளின் ஆதரவு பேச்சுகளுக்கு இருந்தது என்று ஒரு சாதகமான சூழ்நிலை போன்றவை மிக விரைவிலேயே மாறிவிட்டன. மிக முக்கியமாக, 2004ம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் பிளவுபட்டது, (கருணா குழு விலகியது) இராணுவ சமநிலையை, அரசுக்குச் சாதகமாக மாற்றியது. இந்த பிளவுக்குப் பிறகு, இரண்டு தரப்புகளுமே மற்றத்தரப்புக்கு குறிப்பிடத்தக்க சலுகைகளைக் காட்ட வேண்டியதற்கான தேவையைக் குறைத்து விட்டது. ஐக்கிய

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

## இலங்கையின் கொலைக்களங்கள் - பகுதி 2
## ஜனவரி 2012 இல் சனல் 4 இல்!

இலங்கையின் கொலைக்களங்கள் என்ற விவரணச் சித்திரத்தை தயாரித்த சனல் 4 அதன் தொடர்ச்சியாக இன்னொரு விவரணச் சித்திரத்தை தற்போது தயாரித்துக்கொண்டு இருக்கிறது. இந்தப் புதிய விவரணச் சித்திரம் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சனல் 4 இல் ஒளிபரப்பப்படும் என சனல் 4 இல் செய்திகள் மற்றும் நடப்பு விடயங்கள் (News & Current Affairs) பகுதிக்கு தலைவராக இருக்கும் Dorothy Byrne தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த புதிய விவரணச் சித்திரத்தில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மிகவும் ஆதாரங்களுடன் காட்டப்படும் என்றார். இப்புதிய விவரணச் சித்திரத்திற்கு 'தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' என சனல் 4 பெயரிட்டுள்ளது.

"இலங்கையின் கொலைக்களம்" நிகழ்ச்சியை தயாரித்த Jon Snow தெரிவிக்கையில் இதன் தொடர்ச்சியாக தன்னால் தற்போது தயாரிக்கப்படும் நிகழ்ச்சியில் கண்ணால் கண்ட சாட்சியங்களின் பேட்டி, படங்கள் மற்றும் செல்பேனால் போர் நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது எடுத்த படங்கள் என்பன அடங்குகின்றன என்றார். புதுவருடத்தில் ஒளிபரப்பாக விருக்கும் இந்த நிகழ்ச்சி உலகில் உள்ள மக்களை மேலும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் என்று தான் நம்புவதாக அவர் தெரிவித்திருந்தார்.

இந்த புதிய ஒளிப்பதிவில் நாங்கள் போர்க்குற்றங்கள் பற்றி மேலதிக விசாரணை களை செய்துள்ளோம். போர்குற்றங்களுக்கு யார் பொறுப்பு என்று கூறியுள்ளோம். இலங்கையில் நடைபெற்ற இந்த போர்க் குற்றங்கள் பற்றி யார் யாருக்கெல்லாம் தெரியும் என்று கூறியுள்ளோம். அதைவிட இந்த போர்குற்ற நிகழ்வை உலகம் ஏன் தடுக்க தவறி விட்டது எனவும்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்





RBC Royal Bank®

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்

Gteat Options for all your Mortgage needs

- Lowest interest rates and best prepayment options.
- 1st time Home buyers.
- Pre-approvals.

சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்



**Paskaran K. (Paski)** Mortgage Specialist
**416.569.3099 /416.288.9855**
E-mail: paski.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker



Cell: 416-262-4176
Bus: 416-298-3200

**HomeLife/Today Realty Ltd.,**
Brokerage*
**31 Progress Ave. Suite 210, Toronto**
*Independently owned and operated

Sales & LEASING

MARKVILLE TOYOTA





**KUMAR JEGASOTHY**
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565

கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்

>குமார் ஜெகசோதி <

8 ஆண்டுகள் அனுபவம்

E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

# துரித பணமாற்றுச் சேவை

- 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை





**மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்**

3228 Eglinton Ave. E. #3
416.267.8221

3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்

**DENTAL OFFICE**



**DR. Iru VIJAYANATHAN,** BDS, FAGD
DENTAL SURGEON

- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (*White Filling / Silver Filling*)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (*Root Canal*) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# நோர்வேயின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தேசிய கட்சி அரசு இந்த அமைதி வழிமுறையை, பாதுகாப்பு உத்தரவாதங்கள், அனைத்துலக கொடை வழங்கும் நாடுகளிடம் நிதி உதவி, மற்றும் அரசியல் ரீதியாக சிக்கலான பொருளாதார சீர்திருத்தங்கள் ஆகியவை மூலம், அனைத்துலக மயமாக்க எடுத்த முயற்சிகள் சிங்கள தேசியவாத எதிர்வினையைத் தான் தூண்டின.” இது நான்காவது காரணம்.

“இதன் விளைவாக, ஒரு தேசியவாத முனைப்புள்ள கட்சி இலங்கையில் ஆட்சிக்கு வர உதவியது. மகிந்த ராஜபக்ச தலைமையிலான புதிய அரசு ஆசிய நாடுகளின் ஆதரவுடன் புதிய அனைத்துலக பாதுகாப்பு வளையத்தைத் தனக்கு ஆதரவாக அமைத்துக் கொண்டு, விடுதலைப் புலிகள் மீது மேலும் கடுமையான ஒரு அணுகுமுறையை எடுக்கவே உதவியது. இதன் மூலம் மகிந்த ராஜபக்ச அரசு இந்த மோதலுக்கு இராணுவ ரீதியான தீர்வை முன்னெடுக்க வழி பிறந்தது. ஒரு பலவீனமான, மென்மையான நோர்வேயால், இந்த இயங்கு சக்திகளை எதிர்க்க முடிய வில்லை.” என்றும் குன்னர் சோர்போ தெரிவித்துள்ளார்.

ஒரு கேந்திர தொலைநோக்குத் திட்டம் இல்லாமல், துடிப்புடன் செயல்படக் கூடிய சர்வதேச வலையமைப்பு இல்லாமல், இந்த அமைதி வழிமுறை பாதிக்கப்பட்டது. இருதரப்புகளும், பின்வாங்க முடியாத விட்டுக்கொடுப்புகளையும், உறுதிமொழி களையும் தரவைப்பதற்கும், அவற்றை இருதரப்பும் கடைப்பிடிக்கச் செய்வதற்கும் நோர்வேயால் இயலாமல் போனது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா அரசியலில் ஒரு சதுரங்கப் பகடையாக பயன்படுத்தப்படுவதை உணர்ந்து, நோர்வே அதை தடுத்திருக்க வேண்டும். 2006 ஆம் ஆண்டு ஜெனிவா பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த போது, நடுநிலை முயற்சிகளிலிருந்து நோர்வே விலகிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் குன்னர் சோர்போ தெரிவித்துள்ளார்.

## சமாதான ஒப்பந்தத்துக்கு முன் இந்தியா-புலிகளுக்குடையில் இரகசிய சந்திப்பு!

2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளும் இந்தியாவும் இரகசியமாக சந்தித்ததாக நோர்வேயின் சுற்றாடல் மற்றும் சர்வதேச விவகார அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். எனினும் இச்சந்திப்பில் இருதரப்பிலும் யார் யார் பங்கு பற்றினார்கள் என்பது குறித்தோ, எங்கு நடைபெற்றது என்பது குறித்தோ அவர் வெளியிட மறுத்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நோர்வேயில் இந்தியாவின் ஐ.ஏ.என்.எஸ் செய்தி சேவைக்கு அவர் அளித்த செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும், இத்தகவல் உண்மையானால் ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தையடுத்து



1992ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளை இந்தியா தடை செய்த பின்னர் அவ்வமைப்புடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தியது இதுவே முதல் தடவையாக இருக்கும்.

அத்துடன், பலர் எண்ணுவதற்கு முரணாக போர் நிறுத்த ஒப்பந்தத்தை உருவாக்குவதில் திரைமறைவில் இந்தியா முக்கிய பாத்திரம் வகித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பிரபாகரன் இராணுவ மேதையானாலும் சர்வதேச அரசியலில் அரிச்சுவடி!

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இராணுவ மேதையாக விளங்கிய போதிலும் சர்வதேச அரசியல் விவகாரத்தில் அரிச்சுவடி என சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். அதேவேளை இந்தியப்பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தை 2006ஆம் ஆண்டில் மறைந்த, தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் புரிந்து கொண்டிருந்ததாகவும் இந்தியாவுக் கெதிராக எதனையும் செய்ய முடியாது எனவும் செய்தால் அது பலனளிக்காது எனவும் அவர் கூறிச் சென்றதாகவும் சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார். ராஜீவ் கொலையில் தமக்கு பங்கில்லை என விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் அவ்வமைப்பின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானும் பல மாதங்க ளாக கூறி வந்ததாக தன்னிடம் அன்ரன் பாலசிங்கம் புகாரிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் தமக்குப் பங்கில்லை என அன்ரன் பாலசிங்கத்தை அவர்கள் நம்பவைக்க முயற்சித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளது டன் அன்ரன் பாலசிங்கம் அதனை நம்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார். எரிக் சொல்ஹெய்ம் பிரபாகரனை 2001ஆம் ஆண்டு முதல் 10 தடவை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## நோர்வேயின் அறிக்கையில் இந்தியா!

இந்த அறிக்கையில் சமாதான முயற்சிகள் முறிந்து போக இந்தியா எவ்வாறு காரணமாக இருந்தது என்பது பற்றி பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2003-2004 ஆண்டுகளில் சமாதான முயற்சிகள் மெதுவாக அவிழத் தொடங்கிய போது கொழும்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களை இந்தியா அனுதாபத்துடன் அணுகியதாக இந்த அறிக்கை கூறியுள்ளது. ஆனால் 2004இல் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், தமிழர்களின் அபிலாசைகளை பாதுகாப்பதாக கூறிக்கொண்டாலும், மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தினது இராணுவத் தீர்வு முயற்சிக்கு எதிராக எந்தவொரு அழுத்தமும் இந்தியா கொடுக்கவில்லை என்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தனிப்பட்ட சந்திப்புகளில் நோர்வேயை ‘புலிகளின் நண்பர்’ என்று இந்தியா விமர்சித்ததாகவும், ‘புலிகளை அவர்களின் இடத்தில் வைக்க வேண்டும்’ என்று கூறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா படைகளுக்கு இந்தியா ரேடர்கள், புலனாய்வுத் தகவல்களை வழங்கியது. சிறிலங்காவுக்கு தாக்குதல் போர்த்தளபாடங்களை வழங்குவதில்லை என்ற கொள்கையை புதுடெல்லி கடைப்பிடித்தாலும், வேறு எவரிடம் இருந்தும் ஆயுதங்களை சிறிலங்கா கொள்வனவு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. விடுதலைப் புலிகள் மீதான இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு, சிறிலங்காவுக்கு போரை நடத்துவதற்கு உந்துதலாக அமைந்தது.

2004இல் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபோது, விடுதலைப் புலிகளால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட ராஜிவ் காந்தியின் துணைவியார் சோனியா காந்தி, இந்தியாவின் சக்திவாய்ந்த நபராக மாறியது திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2008 இறுதியில் பொதுமக்களின் இழப்புகளை மட்டுப்படுத்துமாறு புதுடெல்லி கோரிய போதிலும் கூட, இராணுவ நடவடிக்கையைத் தொடர்வதற்கும், விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கும் ஆதரவு வழங்குவதில் இந்திய அரசாங்கம் மிகவும் தெளிவாக இருந்தது.

விடுதலைப் புலிகளின் இறுதி நாட்கள் பற்றி குறிப்பிடும் இந்த அறிக்கையில், புலிகள் மிக நெருக்கமாக சுற்றிவளைக்கப்பட்ட நிலையில், விடுதலைப் புலிகள் சரணடைவதற்கு கொழும்பு மிகக் குறைந்தளவு ஆர்வமே காட்டியது. போரின் இறுதியில் விடுதலைப் புலிகள் தப்பித்துக் கொள்வதற்கு இந்தியா ஆர்வம் காட்டியிருக்குமா என்பது சந்தேகமாகவே இருந்தது.

சமாதான முயற்சிகளில் இந்தியா கூடுதல் பங்கு வகிக்குமாறு 2007இல் நோர்வே தொடர்ச்சியாக வலியுறுத்திய போதும் புதுடெல்லி அதை நிராகரித்து விட்டது. இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்த போது தாக்குதலை நிறுத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கப் போவதில்லை என்பதும் தெளிவாகியது.

போரின் இறுதிக்கட்டத்தில் இந்தியாவில் நடந்த பொதுத்தேர்தல் குறித்து சிறிலங்கா கவலை கொண்டிருந்தது. காங்கிரஸ் கட்சி தூக்கியெறியப்பட்டு வேறு யாரும் பதவிக்கு வந்தால் புலிகளுக்கு உதவி கிடைக்கலாம் என்ற கவலை சிறிலங்காவுக்கு இருந்ததாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் போரின் இறுதிக்கட்டத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் தொடர்பு கொண்டு, முன்வரைவு அறிக்கையை ஏற்று ஆயுதங்களை கீழே போட இணங்குமாறு ஆலோசனை கூறியதாகவும், ஆனால் இந்த நகர்வு புலிகள் ஆதரவு அரசியல்வாதியான வைகோவுக்கு கசிந்ததும், இது காங்கிரசின் தந்திரம் என்று நிராகரிக்குமாறும், தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியைப் பிடிக்கும் என்றும் புலிகளை மீட்கும் என்றும் அவர் உறுதி கூறியதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அது நடக்கவில்லை. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த நேரத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தார் என்றும் நோர்வேயின் மீளாய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜே பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# இலங்கை இந்திய அரசுகளை நிலைகுலையச் செய்துள்ள நோர்வேயின் அறிக்கை மோசமடைந்துள்ள அரசியல் நிலைமையை மாற்றியமைக்க வழிசமைக்குமா?

---இலங்கையிலிருந்து மங்களநாதன் அரவிந்தன்---

இலங்கையில் தோல்வியடைந்த அமைதி வழிமுறை குறித்த நோர்வேயின் அறிக்கையானது இலங்கை இந்திய அரசாங்கங்களை சங்கடத்தில் ஆழ்த்தும் வகையில் வெளியாகியுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கு இந்த அறிக்கை யின் மூலம் ஏற்பட்டுள்ள சங்கடத்திற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன.

எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி திடீரென இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது.

விடுதலைப்புலிகளுடன் கடந்த 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் ஏன் தோல்வியடைந்தது என்பது பற்றி ஆராய்ந்துள்ள கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை இன்னும் சில தினங்களில் வெளியிடப்படவுள்ள வேளையில் நோர்வேயின் அறிக்கை வெளிவந்திருக்கின்றது.

மூன்றாவதாக இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு செய்த அதே வேலை குறித்தே நோர்வேயின் அறிக்கையும் ஆராய்ந்துள்ளது. அப்படியான-ால், நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் அறிக்கையை குழப்புவதற்காகத்தான் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றதா? இந்த அறிக்கையை நோர்வே அரசு அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்கின்றதா? என்ற கேள்வி களை இலங்கை அரசு எழுப்பியிருக்கின்றது.

இந்திய அரசாங்கத்தைப் பொருத்தமட்டில், இலங்கையின் சமாதான முயற்சிகள் தோல்வியடைவதற்கு அது எந்த வகையில் காரணமாக இருந்தது என்பது பற்றியும் நோர்வே அறிக்கை மிக விரிவாகத் தெரிவி த்திருக்கின்றது. இதன் மூலம் அண்டை நாடாகிய இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதில் பாராமுகமாக இருந்த இந்தியாவின் புதிரான போக்கு குறித்த அதிகாரபூர்வமான தகவல்கள் அதற்கு நிச்சயமாகச் சங்கடத்தை மட்டுமல்லாமல், தலைக்குனிவையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்றே கூற வேண்டியுள்ளது.

நோர்வேயின் அமைதிக்கான அடமானங்கள் என்ற அறிக்கை இலங்கையின் இன முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் எடுக்கப்பட்ட முயற்சிகள், அவற்றின் பின்னணி, இறுதி யுத்த நேரத்தில் என்ன நடந்தது என்பது பற்றியெல்லாம் விரிவாக ஆராய்ந்துள்ளது. இதில் குறிப்பாக இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் சார்பில் சமாதான தூதுவராகக் கடமையாற்றிய எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பது இலங்கைக்கு பெரும் சிக்கலைக் கொடுத்திருக்கின்றது என்றே சொல்ல வேண்டும்.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் எவ்வாறு உருவாகியது, எவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்தது, என்னென்ன தடைகள் ஏற்பட்டன, இறுதி யுத்தத்தம் எவ்வாறு ஏற்பட்டது, இறுதி யுத்தத்தின்போது பொதுமக்கள் கொல்லப்பட்டமை, விடுதலைப் புலிகளைச் சரணடையச் செய்வது தொடர் பில் எடுக்கப்பட்ட முயற்சிகள் உள்ளிட்ட பல விடயங்கள் சர்வதேச இராஜதந்திர மட்டத்திலும், அதன் பின்னணியிலும் வைத்து



இந்த அறிக்கையில் ஆராயப்பட்டிருக்கின்றன.

ஆனால் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கை கள் அவ்வாறில்லை. இந்த ஆணைக் குழுவின் முன்னால் பொதுமக்களும், இலங்கை அரசாங்கத்தின் சார்பிலானவர் களும் மட்டுமே சாட்சியமளித்திருக்கின்றார் கள். இறுதி யுத்தத்தில் சிக்கியிருந்தவர்கள், இறுதி யுத்தத்தை நேரடியாகக் கண்ட கண்கண்ட சாட்சிகள் பலர் இந்த ஆணைக்குழு முன்னிலையில் தோன்றி சாட்சியமளித்த போதிலும், இறுதி நேர யுத்தச் செயற்பாடுகள் குறித்து விரிவாக எதனையும் தெரிவித்தாகத் தகவல் இல்லை.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது, இலங்கை அரசாங்கத் தினால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவாகும். அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தவர்களும் நடுநிலையாகச் செயற்படுவார்களா என்ற சந்தேகம் பரவலாக எழுந்திருந்தது. இந்த சந்தேகத்தை வலுப்படுத்துவது போல அந்தக் குழுவினர் சாட்சிகளிடம் இறுதி நேர யுத்தத்தின்போது விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறிய நடவடிக்கை கள் தொடர்பான விடயங்களை அறிவதற்கா கவே துருவித் துருவி கேள்விகளைக் கேட்டிருந்தார்கள். மொத்தத்தில் பொதுவா கவே இந்த ஆணைக்குழு நடுநிலையானது தானா என்ற சந்தேகம் வெளிப்படையாகவே மக்கள் மத்தியில் குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் நிலவியது. இந்த நம்பிக்கையீனத்தை அந்தக் குழுவின் முன்னால் சாட்சியமளித்த பலர் நேரடியா கவே குழு உறுப்பினர்களிடம் தெரிவித்திருந் தார்கள். எனினும் இந்த சந்தேகத்தைப் போக்குவதற்கும் குழுவின் நடுநிலைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் அதன் உறுப்பினர்களும் அல்லது அரசாங்கமும்கூட எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இறுதி யுத்தத்தின்போது இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மனித உரிமைகளையும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களையும் மீறிச் செயற்பட்டார்கள், படுகொலைகள் செய்யப்பட்டன. அரச படைகள் இனப்படுகொலையொன்றைத் தமிழ் மக்கள்மீது அப்போது செய்திருநதது என்ற குற்றச்சாட்டுக்கள் சர்வதேச ரீதியில் பகிரங்கமாக சுமத்தப்பட்டிருந்தன. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெளிப்படை யான, நம்பகத்தன்மை மிக்க விசாரணை-யொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சர்வதேச நாடுகளினாலும், சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களினாலும், மனித உரிமை அமைப்புக்கள், செயற்பாட்டாளர் களினாலும் வலியுறுத்தப்பட்டு வந்தது.

சர்வதேச மட்டத்தில் அலையலையாக எழுந்திருந்த இந்த குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு மூர்க்கத்தனமாக மறுத்தது. 'அரச படைகள், பயங்கரவாதிகளான விடுதலைப்புலிகளின் பிடியில் சிக்கியிருந்த அப்பாவித் தமிழ் மக்களை விடுவிப்பதற்கான மனிதாபிமாச் செயற்பாட்டையே மேற்கொண்டி ருந்தன. பொதுமக்கள் எவரையும் படையினர் கொல்லவில்லை. அவர்கள் ஒரு கையில் மனிதாபிமானத்தையும், மறுகையில் பயங்கர வாதிகளுக்கு எதிரான தாக்குதலுக்கான ஆயுதத்தையுமே ஏந்தியிருந்தார்கள். மனித உரிமை மீறல்களில் எமது படைகள் ஈடுபடவில்லை' என்று தொடர்ச்சியாகவும், பிடிவாதமாகவும் இலங்கை அரசு கூறி வந்தது. எனினும் இறுதி நேர யுத்தச் செயற்பாடுகள் தொடர்பான விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற சர்வதேசத்தின் கோரிக்கை மேலும் மேலும் வலுப்பெற்று வந்ததையடுத்து, வெளியார் எவருமின்றி, அந்த விசாரணையை அரசாங்கம், தானே செய்யப்போவதாகத் தெரிவித்து கற்றிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற குழுவை நியமித்தது.

மொத்தத்தில் இறுதி நேர யுத்தம் தொடர்பான சர்வதேச விசாரணை தேவை என்ற சர்வதேசத்தின் வற்புறுத்தலைச் சமாளிப்பதற்கான நடவடிக்கையாகவே கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அதற்கென வழங்கப்பட்டிருந்த ஆணையும் சர்வ தேசத்தின் வேண்டுகோளை நிறைவேற்றத் தக்கதாக அமையவில்லை.

இந்த வகையில் சர்வதேசத்தின் வேண்டு கோளை இழுத்தடித்து இழுத்தடித்து, யுத்தம் முடிவடைந்து ஒரு வருட காலம் முடிவடைந்த பின்பே யுத்தச் செயற்பாடுகள் தொடர்பான விசாரணைக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது. சர்வதேசத்தின் வற்புறுத்தல் தொல்லையைத் தாங்க முடியாமல் ஒரு கண்துடைப்பு நடவடிக்கை யாகவே அரசாங்கம் இதனை மேற்கொண்டிருந்தது. இதன் மூலம் பல விடயங்களைத் தனக்கு சாதகமான முறையில் இந்தக் குழுவின் மூலம் வெளிப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டி ருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே, இத்தகைய ஒரு சூழ்நிலையில் நோர்வே திடீரென்று அமைதிக்கான அடமானங்கள் என்ற அறிக்கையை வெளியிட்டிருப்பது இலங்கை அரசாங்கத்தை நிலைகுலையச் செய்திருக்கும் என்றுகூடச்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# கர்மவினை மீது பழி போடாதீர்கள்!



## சத்குரு வாசுதேவ்

என்னிடம் பலரும் கேட்கிற கேள்வி இது... “சத்குரு! விபத்துகள் ஏன் நிகழ்கின்றன? தொழில்நுட்ப வளர்ச்சி காரணமா? அல்லது கர்மவினைகள் காரணமா?”

அவர்களுக்கு என் பதில், “மோசமாக ஓட்டுபவர்கள்தான் காரணம். மோசமாக ஓட்டுவதென்பதே ஒரு மோசமான செயல்தானே!”

உடனே அவர்கள் கேட்பார்கள், “ஆனால், அடிபட்டவர் வெறுமனே நடந்து போய்க்கொண்டுதானே இருந்தார்?”

ஆம், ஆனால்... கர்மவினை என்றால், நீங்கள் செய்யும் செயலாக மட்டும் இருக்க வேண்டியதில்லை. உங்களைச்சுற்றி நிகழ்வதாகக்கூட இருக்கலாம்.

“நான் சரியாக இருக்கிறேன். முறையாக வாழ்கிறேன். விதிமுறைகளைப் பின்பற்றுகிறேன்” என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், உங்கள் வீட்டில் வசிப்பவர்கள் வேறுவிதமாக வாழ்ந்தால், அந்தப் பாதிப்பு உங்களுக்கும் வரும்தானே?

சில ஆண்டுகளுக்கு முன்னால், மொரீஷியஸ் தீவிலிருந்து சில பேர் இந்தியா வந்தார்கள். ஐந்து தலைமுறைகளுக்கு முன்னர் அவர்களுடைய முன்னோர்கள் தமிழ் நாட்டிலிருந்து மொரீஷியஸிற்குக் கொத்தடிமைகளாகப் புலம் பெயர்ந்தவர்கள். தங்கள் பாரம்பரியத்தின் ஆணிவேரைப் பார்க்க வேண்டுமென்று தாயகம் வந்தவர்கள், கோவில் கோவிலாக ஒரு வாரம் முழுவதும் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் போய்விட்டு, கோவைக்கு வந்தார்கள்.

“125 ஆண்டுகளுக்கு முன் உங்கள் முன்னோர் வசித்த தேசத்துக்கு வந்திருக் கிறீர்களே. இந்த அனுபவம் எப்படியிருக் கிறது?” என்று அவர்களிடம் கேட்கப்பட்டது.

மிகவும் சுவாரசியமான பதில் ஒன்று வந்தது.... “இந்தியாவில் கடவுள் ஓவர் டைம் வேலை பார்க்கிறார் என்று தோன்றுகிறது. இங்கே உள்ள வீதிகள், நீங்கள் வாகனங் களை ஓட்டுகிற முறை, குழந்தைகள் உங்கள் கார்களின் கீழே ஒரு பக்கம் நுழைந்து மறுபக்கம் வெளியேறிவிடுகிற விசித்திரம், வீதிகளிலேயே குடும்பம் குடும்பமாக பலர் வசிக்கிறார்கள். வாகனங்கள் வெறித்தனமான வேகத்தில் ஓடுகின்றன. ஆனால், யாரும் கொல்லப்படுவதில்லை” என்றார்கள். கொல்லப்படுவதில்லை என்று சொல்ல முடியாது. விபத்தில் பலர் சாகிறார்கள். ஆனால், நம் மக்கள்தொகை நூறு கோடிக்கு மேல் இருப்பதால் அதனை நாம் சரியாகக் கவனிப்பதில்லை. எண்ணிக்கையின் அளவு எல்லை மீறிப்போகிறபோது எண்ணிப் பார்க்க முடியாதில்லையா? எனவே, அவர்கள் சொன்னார்கள். “கடவுள் இங்கே ஓவர் டைம் பார்க்கிறார்” என்று. எப்போதோ சில நேரம் விடுமுறையும் எடுத்துக் கொள்வார் போலும்!

விபத்துகள் எல்லா இடங்களிலும் நிகழ்கின்றன. ஆனால், இங்கே நிகழ்வது போல் எங்கும் ஏற்படுவதில்லை. இங்கே நீங்கள் பத்திரமாக வீடு போய்ச் சேர்ந்தால் அதுதான் விபத்து. போக்குவரத்தில் இருக்கிற நெரிச்சலையும் முந்திக் கொள்வதில் மக்கள் காட்டுகிற அவசரத்தையும் பார்க்கும்போது, காரில் சிறு கீறல்கூட இல்லாமல் வீடு போய்ச் சேர்ந்தால் அதுவே பெரிய அதிசயம்.

இந்தியாவின் மிகப் பெரிய பிரச்சனை இதுதான். ஒரு மனிதன் செத்து விழுந்தால், உடனே, அவனது பழைய கர்மவினைகள் அன்று அவன் மீது எப்படியெல்லாம் செயல்பட்டன என்பதற்கு அபாரமான விளக்கங்களையெல்லாம் அள்ளி வீசுவீர்கள். சாலையோரங்களில் தூங்கிக் கொண்டு இருக்கும் யார் மீதாவது வாகனங்கள் மோதினால், உடனே அதற்குக் காரணம் அவர்களது கர்ம வினைதான் என்று கதை சொல்வீர்கள். “அவர்கள் ஏதேனும் தீய விஷயத்தைக் கனவு கண்டிருப்பார்கள். அதனால்தான் கடவுளே குடிகார இளைஞனின் ரூபத்தில் காரை ஓட்டிக் கொண்டு வந்து அவர்கள் உயிரை வாங்கிவிட்டார்” என்றெல்லாம் சொல்வீர்கள்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

அந்தச் சம்பவம் ஏன் நடந்தது என்று பார்ப்பதில்லை. அதற்காக ஏதும் செய்வ தில்லை. ஏனென்றால், எல்லாம் கர்மவினை யின் சுழற்சி. கடவுளின் விருப்பம். தெய்வ சங்கல்பங்களை நாம் மாற்ற முயலக்கூடாது. அது நல்லதல்ல என்றெல்லாம் சொல்லி தப்பித்துக் கொள்வீர்கள் இல்லையா?

நான் உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சோகத்துக்கு உவகை சேர்க்காதீர்கள். உங்கள் வாழ்க்கைக்கும் உங்களைச் சுற்றி நடைபெறுகிற வாழ்க்கைக்கும் ஏதாவது செய்யுங்கள். இது மிகவும் முக்கியம். யாரேனும் உயிரிழக்கிறார்கள் என்றால் அது துரதிருஷ்டமா?

விஜயநகர சாம்ராஜ்யத்தில் ஒருமுறை இப்படி நடந்தது. ரெட்டப்பா என்ற பெயரில் ஒரு நாவிதர் இருந்தார். அதிகாலையில் முதன்முதலாக ஒரு சவரத் தொழிலாளி அல்லது சலவைத் தொழிலாளியின் முகத்தில் விழிக்க நேர்ந்தால், அது தீய சகுனம் என்றொரு மூடநம்பிக்கை இருந்த காலம். குறிப்பாக, “ரெட்டப்பாவின் முகத்தைப் பார்த்தால் அன்று நிச்சயம் ஏதாவது தீமை நடக்கும்” என்ற கருத்து பரவி இருந்தது. ஏன் வம்பு என்று ரெட்டப்பா காலை நேரங்களில் வீட்டை விட்டு வெளியே வருவதே இல்லை. “முட்டாளே! ஏன் எங்கள் முன்பு வந்தாய்? போகிற காரியம் உருவப்பட்ட மாதிரிதான்!” என்று ஏசுவார்கள் என்ற பயம்.

ஒருமுறை அரசர், வேட்டையாடுவதற்காக அருகிலிருந்த வனப்பகுதியில் முகாமிட்டிருந்தார். அதிகாலையில் ரெட்டப்பா தன் காலைக் கடன்களைக் கழிப்பதற்காக வனத்துக்குள் போக, அரசரும் அதே காரணத்துக்காக எதிரே வந்தார். இருவரும் நேருக்கு நேராகச் சந்திக்குக் கொண்டார்கள். அரசர் அலறினார். “அடக் கடவுளே! காலையில் முதலில் உன் முகத்தில்தான் விழித்துவிட்டேனே. என்ன தைரியம் இருந்தால் என் முன்னே வருவாய்?” என்று பொரிந்து தள்ளினார். அரசருக்கு எதிரே வந்ததால், அவருக்கு துரதிர்ஷ்டத்தைத் தந்ததால், ரெட்டப்பாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தக் கொடுரமான அநீதி குறித்து தெனாலிராமனுக்குத் தெரிய வந்தது. எனவே, “அரசர் விதித்த தண்டனையின்படி அரசரே மரண தண்டனைக்கு ஆளாகப் போகிறார்” என்று சில சுவரொட்டிகளைத் தயார் செய்து தன் கையொப்பத்தோடு எல்லாப் பக்கங்களிலும் ஒட்டிவிட்டார் தெனாலிராமன். தகவல் தெரிந்ததும் அரசருக்குக் கோபம் தலைக்கேறியது.

தெனாலிராமனை அழைத்து, “என்ன இது பைத்தியக்காரத்தனம்?” என்று கேட்டார். “அரசே! காலையில் நீங்கள் ரெட்டப்பாவின் முகத்தில் விழித்தீர்கள். அதனால் சில சிறிய தீமைகள் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும். ஆனால், ரெட்டப்பா உங்கள் முகத்தில் விழித்ததால் அவருக்கு மரண தண்டனையே கிடைத்தது. எனவே, யாருடைய முகம் அதிகத் துரதிர்ஷ்டம் வாய்ந்தது?” என்று கேட்டார். தெனாலி, ஒருவர் முகத்தில் விழித்தால், மரண தண்டனை வருகிறதென்றால், அந்த முகம் தானே அதிகத் துரதிர்ஷ்டம் கொண்டது.

ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எந்த அளவுக்கு நீங்கள் நிர்வகிக்கிறீர்களோ, அந்த அளவுக்கே வாழ்க்கை நன்றாக நடக்கும். சரியாக நிர்வகிக்கவில்லை என்றால், எல்லாமே தவறாகத்தான் போகும்.

வேதாந்தங்கள் எல்லாம் மனித மனத்தின் பொழுது போக்குகள். அவற்றை 100% நம் வாழ்க்கைக்குள் கொண்டு வந்தால், அவை போலியானவை என்று ஒரே நாளில் உங்களுக்குத் தெரிந்துவிடும்.

இந்தச் சம்பவமும்கூட, கிருஷ்ண தேவராயருக்கும், தெனாலிராமனுக்கும் இடையில் நடந்ததுதான். படையெடுக்க வந்த மொகாலய அரசர்கள் கோதாவரி நதியின் மறு கரையில் முகாமிட்டிருந்தார் கள். நதி நிரம்பி வழிந்து கொண்டு இருந்ததால், கடக்க முடியவில்லை. வெள்ளம் வடிந்து நதியைக் கடந்தால், அவர்களால் கிருஷ்ண தேவராயரின் படை களை அழித்து நாட்டைச் சூறையாட முடியும். என்ன செய்ய... வெள்ளம் வடிய இரண்டு மாதங்களாவது ஆகும் என்கிற நிலை.

ஆனால், நதியின் சில இடங்களைக் கடக்க முடியும் என்பது இந்தப் பக்கம் உள்ளூர்க்காரர்களுக்குத் தெரியும். எனவே, கிருஷ்ண தேவராயரிடம் “மொகலாயர்கள் அசந்திருக்கிற இந்த நேரத்தில், நாம் நதியைக் கடந்து போய் அவர்களை அழித்துவிடலாம்” என்று ஆலோசனை சொன்னார் தெனாலிராமன். அரசருக்கு ஆருடம் சொல்கிற ஜோதிடரோ, மொகலாய அரசரிடம் லஞ்சம் வாங்கியிருந்தார். அவர், அரசரைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு, “நாளும், கோளும் நன்றாக இல்லை. இப்போது போருக்குச் சென்றால் அரசருக்கு ஆபத்து” என்றார்.

தெனாலிராமன், அரசரிடம், “அவர் ஒரு ஜோதிடர். அவ்வளவுதான். யுத்தம் நடத்துவதற்கான வியூகத்தை அவர் முடிவு செய்யக்கூடாது. அவர் நட்சத்திரங்களையும், கிரகங்களின் சூழலையும் பார்க்கட்டும். நீங்கள் யுத்தச் சூழலைப் பாருங்கள். தாக்குதல் நடத்த இதுவே சரியான தருணம்” என்றார். அரசர் தயங்கினார். உடனே தெனாலிராமன், அந்த ஜோதிடரை அழைத்து வரச் சொல்லி, அவரோடு வெகுநேரம் வாதிட்டார். “அதெல்லாம் முடியாது. நாள் நட்சத்திரம் நன்றாக இல்லை. இப்போது போருக்குப் போனால் அரசர் இறந்துவிடுவார்” என்றார் அவர் பிடிவாதமாக.

ஜோதிடரிடம், “உங்களுக்கு எதுவரை ஆயுள்? என்று தெனாலிராமன் கேட்க, “84 வயது வரை வாழ்வேன்” என்றார். அவர், உடனே உடைவாளை உருவிய தெனால-ராமன், “இல்லை! இப்போதே நீ சாகப்போகிறாய்” என்றதும் நடுங்கினார் ஜோதிடர். “ஏன் பயப்படுகிறாய்? எப்படியும் நீ சாக மாட்டாய். உன் தலையை மட்டும்தான் வெட்டப்போகிறேன். நீதான் 84 வயது வரை வாழ்வாயே!” என்றார். பிறகு ஜோதிடர் சிறைப்படுத்தப்பட்டார். கிருஷ்ண தேவராயர், மொகாலயப் படைகளைத் தாக்கினார். பின்னொரு காலத்தில் மொகலாயப் படை அவரை வெற்றி கொண்டது என்றாலும், அந்த யுத்தத்தில் கிருஷ்ண தேவராயர் வென்றதற்குக் காரணம் சரியான நேரத்தில் எதிரிகளைத் தாக்கியதுதான்.

ஆம், உங்களைப் படைத்தவர் அறிவைக் கொடுத்ததன் காரணம், அதை உறைந்து போக விடுவதற்கல்ல. உரிய நேரத்தில் பயன்படுத்துவதற்கே!

மனிதர் தங்கள் மூளையின் 12% மட்டும்தான் பயன்படுத்துவதாக மருத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள். அப்படியானால், மூளையின் பெரும்பகுதியை உறைய விட்டிருப்பதாக அர்த்தம். அப்படி உறைய விட்டிருப்பதற்கான காரணங்களில் ஒன்று, வாழ்க்கை குறித்து உங்களுக்கிருக்கும் முட்டாள்தனமான அபிப்பிராயங்கள்தான். அவற்றைப் புறந்தள்ளுவீர்களென்றால், உங்கள் அறிவு துடிப்போடும், விழிப்போடும் இயங்கத் தொடங்கும்.

எப்போதும் எல்லாவற்றுக்கும் தயாராக ஏதாவது சில காரணங்களை வைத்திருப்ப தாலேயே உங்கள் மூளையைத் தூங்க விட்டு, அதன் 88% அளவை உறையவிட்டு, மனிதனாகப் பரிணாமக் கொண்டதை விரயமாக்குகிறீர்கள்.

இதன் மூளை உருவாகப் பல லட்சம் ஆண்டுகள் ஆயின. ஆனால் மனிதர் அதை முழுமையாகப் பயன்படுத்துவதில்லை. அடுத்து வரும் தலைமுறைகளுக்காகப் பாதுகாத்து வைக்கிறீர்களா என்ன?

உங்கள் மூளையை இப்போது பயன்படுத்தி னால்தான் வருங்காலத் தலைமுறைக்கென்று இந்த பூமி இருக்கும். இல்லையென்றால், எதிர்காலத் தலைமுறைக்கென்று எதுவும் இருக்காது.

# 99க்கு ஒன்று

வோல் வீதியை ஆக்கிரமிப்போம் என்ற கோரிக்கையுடன் தொடங்கிய போராட்டம் தொடர்ந்து அமெரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களில் சுமார் 175க்கும் அதிகமான நகரங்களில் தொடர்கின்றது. கனடாவின் ADBUSTERS என்ற ஊடக நிறுவனம் முதன் முதலாக வோல் வீதிக்கு எதிராக போராட்டங்கள் தொடர வேண்டும் என கோரிக்கை விடுத்தது. இச்சஞ்சிகை 1989ம் ஆண்டு வன்கூவர் நகரில் தொடங்கப்பட்டது. இச் சஞ்சிகையை மார்க்கம், ரொரண்ரோ நூலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். செப்ரம்பர் 17, 2011 இல் இப்போராட்டம் தொடங்கப்பட்டது.

இவர்களது சுலோகங்களில் முக்கியமானது 'நாங்கள் 99 வீதம்'. அதாவது ஒரு வீதமானவர்கள் அமெரிக்க செல்வத்தை அனுபவிக்கின்றார்கள் என்பதே நேரடிக் கருத்து. இந்த 99 வீதத்தில் மத்திய வர்க்கமும் அடங்கும். ரொரண்ரோவில் நடைபெறும் இப் போராட்டத்தில் பலரை சந்தித்த லிபரல் கட்சித் தலைவர் பொப் ரே இதனை உறுதிப்படுத்துகின்றார். இப்போராட்டத்தில் பல பொறியியலாளர்கள், கணக்காளர்கள் போன்றோரும் பங்குபவற்றுவதை உறுதிப்படுத்தியுள்ளார். அமெரிக்காவில் 1979-2007க்குட்பட்ட காலப்பகுதியில் மேற்குறிப்பிட்ட ஒரு வீதமானோரின் வருமானம் 275 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதாவது 700,000 டொலர்களால் அதிகரித்துள்ளது. மிகுதி 99 வீதத்தில் 90 வீதமானோரின் வருமானம் 900 டொலர்களால் குறைந்துள்ளது. அமெரிக்க மக்கள் உணவு முத்திரையிலும் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அமெரிக்கா வில் உணவு முத்திரையா? ஆச்சரியமல்ல! உண்மை. சுமார் 9 வீதமான அமெரிக்க மக்கள் இந்த உணவு முத்திரையில் தங்கியுள்ளனர். 1939ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டம் அவ்வப்போது பல மாற்றங்களை பெற்றுள்ளது. சராசரியாக 24 டொலர்கள் கொண்ட உணவு முத்திரைகள் வழங்கப்படும். இதனை பலசரக்கு கடை களில் மாற்றிக் கொள்ளலாம்.

இவர்கள் யாரை குறிவைத்து இதனை நடத்துகின்றார்கள்? ஏன் என்பதற்கான சுருக்கமான பதில் மேலே உள்ளது. இவர்களது முதலாவது குறி வோல் வீதி. வோல் வீதி பங்குச் சந்தைகளும் அங்கு நடைபெறும் மாயங்களும் திருத்தப்பட வேண்டும். இரண்டாவது குறி வோசிங்டன். அதாவது அமெரிக்க அரசு. ADBUSTER சஞ்சிகையின் ஆசிரியர் Kalle Lasn பின்வருமாறு கூறுகின்றார் "to end the influence of money on over our representatives in Washington." அதாவது பணப் புழக்கத்தின் மேல் அமெரிக்க அரசின் பிரதி நிதிகள் வைத்திருக்கும் ஆதிக்கத்தை நிறுத்தல் வேண்டும். இதனையே தாங்கள் முதலில் முக்கிய நோக்கமாக அறிவித்தாக கூறுகின்றார். அதிபர் ஒபாமாவால் இதனை நிறுத்த முடியாது என இவர் மேலும் தெரிவிக்கின்றார். மூன்றாவது நிதி நிறுவனங்கள் வங்கிகள். கடந்த கடைசி மூன்று மாதங்களில் மாத்திரம் அமெரிக்க வங்கிகள் 6.2 பில்லியன் லாபத்தை பெற்றுள்ளன. அதேசமயம் பொருளாதார வீழ்ச்சிப் படியென அரசிடமிருந்து 45 பில்லியன் டொலர்களைப் பெற்றுள்ளன. (ஜே பி மோர்கன் வங்கி கிறீசுக்கு 45 பில்லியன் டொலர்களை கடனாக கொடுத்துள்ளது. இதனால்தான் அமெரிக்க அரசு கிறீசில் ஆட்சி மாற்றத்தை வலியுறுத்தியது.) அதேசமயம் வங்கிகள் மக்களிடம் அதிக கட்டணங்களை வசூலிக்கின்றன. நான்காவது CEO – Chief Executive Officer – தலைமை நிறைவேற்று அதிகாரி. இவர்களது வருமானங்கள் தலையை பிய்க்கின்றன. ஒரு தொழிலாளரை விட 343 மடங்கு அதிக சம்பளம் பெறுகின்றார். இவற்றை விட பங்குகள், அவர்களுக்கு பல தாராளங்களும் கிடைக்கின்றன. ஐந்தாவது Federal Reserve அமெரிக்க மத்திய வங்கி. மேற்குறிப்பிட்ட அனைத்தையும் பார்த்தும் பாராமலும் நடத்திச் செல்வது இந்த அமைப்பு. பணத்தை கட்டுப்படுத்த வேண்டியவர்கள் பணக்காரர்களின் சொற்படி நடக்கின்றார்கள்.




அமெரிக்க பொருளாதாரம் முதலுக்கு நட்பானது. இதனால் உற்பத்திக்கும், தொழிலாளர்களுக்குமிடையிலான உறவு நேர் எதிரானது. இதனை சமாளிக்க வேண்டுமாயின் பொருள் விநியோகத்தை அதிகரிக்க வேண்டும். தேவை அதிகரிப்பு (Demand) இன்றி, பொருட்களை விநியோகிக்க முடியாது. அதிகரித்த பொருளை வாங்குவதற்கு மக்களிடம் பணம் தேவை. உருவாக்கினார்கள் கடன் அட்டைகள். இருக்கவே இருக்கிறது கடன் அட்டைகள் ஒன்றா, இரண்டா. சீனி வாங்குவதற்கும் கடன் அட்டைகள். வட அமெரிக்க மத்திய வர்க்க மக்கள் வாங்கும் சம்பளத்தில் 75 வீதத்தை கடனை மீள கட்டுவதில் செலவிடுகிறார்கள். தொடர்ச்சியாக கடனில் ஓட முடியாது. இதனை அமெரிக்க ஒரு பொழுதும் திருத்த முற்படவில்லை. வாக்கு வங்கிகளுக்கு முதலீடு செய்பவர்கள் இந்த பெரும் நிறுவனங்கள். இந்த நிறுவனங்களை திருப்திப்படுத்துவதிலேயே பல அரசு முகவர்கள் கவனஞ் செலுத்தினர். இவர்கள் நடைமுறைப்படுத்திய பின்வரும் விடயங்கள் பொருளாதாரத்தை மிக அதிகமாக பாதித்தது

1) அரசு நாட்டின் பொருளாதாரத்துக்கு சுதந்திரமளித்து, பொருளாதாரத்தை தன்னிச்சையாக விடுதல். பொருளாதாரத்தை கட்டுப்படுத்த வேண்டிய அரசுகள் நிறுவனங்களின் கைகளில் பொருளாதாரத்தை விட்டு விட்டது.

2) தனியார், கூட்டுத்தாபன வரி விகிதங்களை குறைத்தல் மதில் வழி (Wall Street) வங்கியாளர்கள் ('ஆசிர்வதிக்கப்பட்ட செல்வந்தர்கள்') மிக, மிக குறைந்த வரியையே கட்டியுள்ளார்கள். கோல்ட்மன் நிறுவனம் ஒரு வீத வட்டியையே கட்டியுள்ளார்கள். PRE – Permanently Reinvested Earnings – அமெரிக்க நிறுவனங்கள் வெளிநாடுகளில் நிறுவனங் களை தொடங்குகின்றார்கள். இதனை subsidiary துணை நிறுவனம் என்பார்கள். இந்த துணை நிறுவனத்தால் பெறப்படும் லாபம், பணம் என்பவற்றிற்கு வரி கட்டத் தேவையில்லை. இதற்கான காரணம் அமெரிக்க நிறுவனத்தின் intellectual property ஐ துணை நிறுவனங்கள் பயன்படுத்துகின்றது. இது ஒரு உதாரணம். இவ்வாறு பல வரிச் சலுகைகள் மிகப் பெரிய நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன

3) செலவைக் குறைத்தல் என்ற பெயரில் மக்களுக்கு வழங்கப்படும் மானியங்களை குறைத்தல்.

4) வங்கிகளையும், முதலாளிகளையும், நிறுவனங்களையும் மிகக் குறைந்த கட்டுப்பாடுகளுடன் சுதந்திரமாக இயங்க விடுதல்

5) நிதி நிறுவனங்களுக்கு எதிரான சட்டங்களை அகற்றல். அவர்களுக்கு சாதகமான புதிய சட்டங்களை இயற்றல்.

6) வட அமெரிக்க சுதந்திர வலயத்தினால் மெச்சிக்கோ பெரிதும் பாதிக்கப்பட்டது. அமெரிக்க நிறுவனங்களின் தேவைகளை திருப்திப்படுத்த ஏற்பட்ட தேவைகளுக்கு அமெரிக்க வங்கிகளிடம் பெற்ற அதி உயர் வட்டி விகிதத்தால் மெச்சிக்கோ பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சியடைந்தது. இது போன்ற சுதந்திர வர்த்தக வலயங்கள் ஏழை நாடுகளை மேலும் வறுமையில் தள்ளுகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தின் உருவாக்கம் பொருளாதார ரீதியானது. மக்கள் நலனற்றது.

இதன் தொடர்ச்சியாக ரொரண்ரோவில் occupy Toronto ஒக்ரோபர் 15, 2011 ல் குளிரும் சுழல் காற்றும் மழையும் கூடிய நாளில் தொடங்கப்பட்டது. பரிசுத்த ஜேம்ஸ் பூங்காவில் ஆரம்பமானது. கிங் வீதிக்கும் பே வீதிக்கும் அருகில் உள்ளது ஜேம்ஸ் பூங்கா. ஆரம்பத்தில் என்.டி.பி பெகி நாஸ், CUPE பிரெட் கான் போன்றோர் கலந்து

**- ரதன் -**

தொடர்ச்சி 12ஆம் பக்கம்


## LICENCE IN 3 WEEKS

**(IF QUALIFIED)**




*Free 1st Lesson for beginners Only*

**Learn To Drive Safely By Licenced Instructor.**

| | |
|---|---|
| Package A $95<br>1 Lesson + Car Rental<br>for G2 Road Test | Package B $115<br>2 Lesson + Car Rental<br>for G2 Road Test |
| Package C $165<br>4 Lesson + Car Rental<br>for G2 Road Test | Package D $130<br>2 Lesson + Car Rental<br>for G2 Road Test |

**$25 Lesson for G2**

**$30 Lesson for G**

**Call: Vicky - 647.284.5373**

# ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் புதிய விதிகள்

## விளையாட்டுத் தகவல்கள் 318

ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் புதிதாக அமல்படுத்தப்பட்டுள்ள விதிகள் குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இந்தியா - இங்கிலாந்து ஒருநாள் தொடரில் இருந்து ஒரு நாள் போட்டியில் சில புதிய விதிகளை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) சேர்த்துள்ளது. இதன்படி ஒவ்வொரு இன்னிங்ஸிலும் புதிய பந்து பயன்படுத்தப்படும். ரன் எடுக்கும் போது களத்தடுப்பு செய்பவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் துடுப்பாட்டக்காரர்கள் நடந்து கொண்டால் ஆட்டமிழப்பு வழங்கப்படும். ரன்னர் கிடையாது. முதல் 16 ஓவர், அடுத்தது 40-வது ஓவருக்குள் “பவர் பிளே” ஓவர்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது உள்ளிட்ட முக்கிய விதிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன்படி 16, 40 வது ஓவரில் இரண்டாவது மூன்றாவது பவர்பிளேயை எடுக்க வேண்டும் என்பதால் இனி வித்தியாசமான முறையில் அணிகள் திட்டமிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முன் இலக்கை துரத்தும் அணிகள் கடைசி ஐந்து ஓவர்களில் துடுப்பாட்ட பவர்பிளேயை பயன்படுத்துவதை வழக்கமாக கொண்டிருந்தன. இப்போது புதிய விதிகள் காரணமாக வேறுசில தந்திரங்களை பயன்படுத்த வேண்டியதுள்ளது. ஒரு இன்னிங்சில் இரண்டு புதிய பந்துகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற புதிய விதிமுறை வேகப்பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக உள்ளது. முன்னதாக ஐந்து முதல் ஆறு ஓவர்கள் வரை புதிய பந்தில் சுவிங் செய்யலாம். தற்போது இரண்டு புதிய பந்துகள் பயன்படுத்தப்படுவதால் பத்து முதல் பன்னிரண்டு ஓவர்கள் வரிசை சுவிங் செய்ய முடிகிறது. இதனால் எதிரணியின் ரன் வேட்டை தடுக்கப்பட்டு விக்கெட் வீழ்த்த செய்யலாம். இதில் ஒரு இன்னிங்சில் இரண்டு புதிய பந்துகள் என்ற விதிமுறை வேகப்பந்துவீச்சாளர்களுக்கு கை கொடுக்கிறது. இந்நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய அணி டில்லி வந்துள்ளது. புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி குழப்பமாகவே இருந்தது. முக்கியமாக ரன் அவுட் விதிகள் தெளிவாக இல்லை. பூவா தலையாவில் வெற்றி பெறுவதும் முக்கியப் பங்கு வகிக்கும. இரவில் பனி பெய்வது துடுப்பாட்டம் செய்யும் அணிக்கு சாதகமாக இருக்கும். ஆனால் இப்போதைய சூழ்நிலையில் காலநிலை மாறுவதைக் மிகச்சரியாக கணிக்க முடியாது. இதற்கு முன் இலக்கை துரத்தும் அணிகள் கடைசி ஐந்து ஓவர்களில் துடுப்பாட்ட பவர்பிளேயை பயன்படுத்துவதை வழக்கமாக கொண்டிருந்தன. பழைய பந்துகளை பயன்படுத்தும் போது 35 ஓவர்களுக்குப் பின் ரிவர்ஸ் சுவிங் செய்ய ஏதுவாக இருக்கும். தற்போது இரண்டு புதிய பந்துகளை ஒரே நேரத்தில் பயன்படுத்துவதால் இதற்கும் வழியில்லாமல் போயுள்ளது. வேறுவழியின்றி மைதானத்தின் தன்மைக்கு ஏற்ப பந்தின் வடிவத்தில் மாற்றம் ஏற்படுவதைப் பொறுத்து இனி ரிவர்ஸ் சுவிங்கை எதிர்பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

### அவுஸ்திரேலியாவிற்கு எதிரான வெற்றி வரலாற்று சிறப்பு வாய்ந்தது

தென்ஆப்பிரிக்கா - அவுஸ்திரேலியா அணிகள் மோதிய முதல் டெஸ்டில் தென் ஆப்பிரிக்கா 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. தென் ஆப்பிரிக்காவின் இந்த வெற்றி சிறப்பானதாகும். ஏனென்றால் அந்த அணி முதல் இன்னிங்சில் 96 ரன்னில் இருந்தது. முதல் இன்னிங்சில் 96 ரன்னில் ஆல்-அவுட் ஆகி டெஸ்டில் வெற்றி பெற்ற 9-வது நிகழ்வாகும். தென் ஆப்பிரிக்கா இதற்கு முன்பு 1905-ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக முதல் இன்னிங்சில் 91 ரன் எடுத்து வெற்றி பெற்று இருந்தது. 236 ரன் இலக்கை தென் ஆப்பிரிக்கா 2 விக்கெட்டை இழந்து எளிதில் எடுத்தது. கப்டன் சுமித்தும் (101 ரன்), ஹசிம் அம்லாவும் சதம் அடித்து அணியை வெற்றி பெற வைத்தனர். இந்த வெற்றி குறித்து தென் ஆப்பிரிக்கா கப்டன் சுமித் கூறியதாவது: டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் இது சிறப்பு வாய்ந்த வெற்றியாகும். மோசமான நிலையில் இருந்த நாங்கள் எழுச்சி பெற்று இந்த வெற்றியை பெற்றது சிறப்பானதாகும். அவுஸ்திரேலியாவை 2-வது இன்னிங்சில் 47 ரன்னில் சுருட்டியதால் 236 ரன் இலக்கு கிடைத்தது. இதற்கு சிறப்பான பந்து வீச்சே காரணம். அந்த அணி ஒரு கட்டத்தில் 9 விக்கெட் இழப்புக்கு 21 ரன் என்ற நிலையில் இருந்தது. கடைசி விக்கெட் 26 ரன் சேர்க்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த வெற்றி தென் ஆப்பிரிக்கா கிரிக்கட்டில் புதிய அத்தியா யத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த வெற்றி மூலம் 2 டெஸ்ட் போட்டிக்கொண்ட தொடரில் தென் ஆப்பிரிக்கா 1-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் வருகிற 17-ந் திகதி ஜோகன்ஸ்பர்க்கில் தொடங்குகிறது.

### ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை : சங்கக்கார முதலாம் இடத்திற்கு முன்னேற்றம்

பாகிஸ்தான் அணியுடன் நடைபெற்று முடிந்த டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயற்பட்ட இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரா டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். ஐ.சி.சியின் புதிய தரப்படுத்தலுக்கு அமைய 880 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட குமார் சங்கக்கார டெஸ்ட் வீரர்களுக்கான தரப்படுத்தலில் முன்னிலையில் திகழ்கின்றார். இந்த தரப்படுத்தலில் 873 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட தென்னாப்பிரிக்க வீரர் ஜக்ஸ் கலிஸ் இரண்டாமிடத்திலும், 823 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணியின் தலைவர் அலிஸ்டயர் குக் மூன்றாம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளார். இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டென்டுல்கர் 806 புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்தில் காணப்படுகின்றார்.

அத்துடன் இங்கிலாந்தின் 4 வீரர்களும், தென்னாப்பிரிக்காவின் 3 வீரர்களும், இலங்கை, இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணியின் ஒவ்வொரு வீரரும் முதல் 10 இடங்களிற்குள்ளும் இடம்பிடித்துள்ளனர். டெஸ்ட் போட்டியில் 500 கேட்ச்சுகள்: தென் ஆப்ரிக்கா விக்கெட் கீப்பர் பவுச்சர் சாதனை மைக்கேல் கிளார்க் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கட் அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கட் போட்டி கேப்டவுனில் தொடங்கியது. மழை காரணமாக மைதானம் ஈரப்பதமாக இருந்ததால் ஆட்டம் தாமதமாக தொடங்கியது. டொஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணி, அவுஸ்திரேலிய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது. இதன்பின் ஆப்பிரிக்க அணியில் இம்ரான் தாஹிர், பிலான்டர் ஆகியோர் அறிமுக வீரர்களாக களம் கண்டனர். முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சி காத்து இருந்தது. ஷேன் வாட்சன் 3 ரன்னிலும், பில் ஹியூக்ஸ் 9 ரன்னிலும், ரிக்கி பாண்டிங் 8 ரன்னிலும் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். 4 வது விக்கெட்டுக்கு கப்டன் மைக்கேல் கிளார்க், ஷான் மார்ஷுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் அணியை சரிவில் இருந்து மீட்டனர். அணியின் ஸ்கோர் 143 ரன்னாக உயர்ந்த போது ஷான் மார்ஷ் (44 ரன்) ஸ்டெயின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ ஆனார்.

அதன் பின்னர் களம் இறங்கிய மைக் ஹஸ்ஸி (1 ரன்), பிராட் ஹேடின் (5 ரன்), ஜான்சன் (20 ரன்) அடுத்தடுத்து அவுட் ஆனார்கள். ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் மறுமுனையில் கப்டன் மைக்கேல் கிளார்க் சதம் அடித்தார். அவர் 108 பந்துகளில் 16 பவுண்டரியுடன் சதத்தை எட்டினார். அவர் அடித்த 16-வது சதம் இதுவாகும். அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 55 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 214 ரன் எடுத்து இருந்த போது மழை மற்றும் போதிய வெளிச்சம் இல்லாமல் ஆட்டம் பாதிக்கப்பட்டது. அப்போது மைக்கேல் கிளார்க் 107 ரன்னுடனும், பீட்டர் சிடில் ரன் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர். இந்த போட்டியில் தென் ஆப்பிரிக்க அணி விக்கெட் கீப்பர் பவுச்சர் புதிய சாதனை படைத்தார். 140-வது டெஸ்டில் விளையாடும் அவர் பில் ஹியூக்ஸ், மைக் ஹஸ்சி ஆகியோரின் விக்கெட்டுகளை கேட்ச் செய்தார்.

பில் ஹியூக்ஸ் விக்கெட்டை கேட்ச் செய்த போது டெஸ்டில் 500 கேட்ச் செய்த முதல் விக்கெட் கீப்பர் என்ற பெருமையை பவுச்சர் பெற்றார். அவருக்கு அடுத்த படியாக அவுஸ்திரேலிய முன்னாள் விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்ட் 96 டெஸ்டில் ஆடி 379 கேட்ச்களை செய்துள்ளார்.



**எஸ். கணேஷ்**

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 353

உலகிலுள்ள பல நாடுகளின் 24 நகரங்களை பிரதானமானதும் பிரசித்திபெற்றதுமான நகரங்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதற்கு பொருளாதார ஸ்திரம், வளர்ச்சி, வியாபாரம், தொழில் செய்வதற்கு உகந்த சூழ்நிலை, நியாயமான அரசுவரி, போக்குவரத்து, பாதுகாப்பு, ஊழலற்ற நிர்வாகம், குறைந்தளவு குற்றச் செயல் போன்றன எடுத்ததுக்கொள்ளப்பட்டன. Toronto Board of Trade 2011 இந்தப்பட்டியலை அண்மையில் மக்களின் கவனத்திற்கு கொண்டு வந்தது. இவ்வாறான அளவீடு ஒவ்வொரு வருடமும் வழமையாக கொண்டுவருவது, இயல்பாகக் காணப்படுகின்றது.

இவ்வாண்டு பட்டியலில் 3வது இடத்தை கனடிய நகரம் ஒன்று பெற்றது என்ற தகவல் கனடிய மக்களிற்கு இனிப்பான ஒரு செய்தியாகும். இந்த நகரம் நீங்கள் ஊகிப்பதுபோல ரொறொன்ரோ அல்ல. இது அல்பேட்டா மாகாணத்தில் இருக்கும் கல்ஹரி (Calgary) ஆகும். இன்றைய காலகட்டத்தில் கல்ஹரி வியாபாரத்திற்கு உகந்த இடமாகக் காணப்படுகின்றது. இதற்கு அல்பேட்டாவின் குறைந்த வரி ஒரு காரணமாகும்.



ரொறொன்ரோ இந்த பட்டியலில் 8வது இடத்தில் உள்ளது. உலகிலே சிறந்த முதலாவது நகரமாக பாரிஸ் (France), இரண்டாவது நகரமாக சன்பிரான்சிஸ்கோ (USA) தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே பதவியில் ரொறொன்ரோ நகராட்சி தலைவர்களின் இடது சாரிக்கொள்கைகளால் ரொறொன்ரோ நகரம், வியாபாரத்திற்குரிய சூழ்நிலை இழந்து வந்த நிலையில், புதிதாக வந்த நகர பிதா றொப் போட் இன் புதிய வலது சாரிக் கொள்கைகளால் தொழில் புரிவதற்கான சூழ்நிலை எதிர்காலத்தில் ரொறொன்ரோவில் மீண்டும் தோன்றுமா? இதற்கு எதிர்காலம் தான் பதில் சொல்லும்.

இது ஒரு புறம் இருக்க, 2020 ஆம் ஆண்டளவில் ரொறொன்ரோ நகரில் 1.5 மில்லியன் தொகையான மக்கள் மேலதிகமாக குடியேறுவார்கள் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இவர்களை உள்வாங்குவதற்கு ஒரே வழி, மேலதிகமான அடுக்குமாடிக் கட்டிடங்களை நிர்மாணிப்பதே. ஏறக்குறைய 2.5 மில்லியன் மக்கள் தொகை இப்பொழுது ரொறொன்ரோவில் வாழ்கின்றார்கள். 2020 இல் 4 மில்லியன் மக்கள் வாழ்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

செப்ரெம்பர் 2011 இல் ரொறொன்ரோவில் 132 அடுக்கு மாடிக் கட்டிடத்தொகுதி கட்டப்பட்டு கொண்டு இருக்கின்றது. வடஅமெரிக்காவில் ரொறொன்ரோவிற்கு அடுத்ததாக மெக்சிக்கோ நகரத்தில் 88 தொகுதிகளும், நியூயோர்க்கில் 56 அடுக்குமாடித் தொகுதிகளும் கட்டப்படுகின்றன. ரொறொன்ரோவில் ஏற்பட்டுள்ள நில நெருக்கடி காரணமாக தனிவீடுகளோ, தொடர்வீடுகளோ எதிர்காலத்தில் நிர்மாணம் செய்வது கடினமாகலாம். இதனால் அடுக்குமாடியே சுலப-மானதும், இயல்பானதாகவும் நடைமுறையில் பொருந்தக்கூடியதாகவும் கருதமுடியும்.

உலகிலுள்ள நாடுகளில், குறிப்பாக மேற்கத்தைய நாடுகளில் கனடாவின் பொருளாதாரம் சீரானதாகவும் முதலிடுவதற்கு நம்பிக்கையானதாகவும், அரசியல் சூழ்நிலை அமைதியாகவும் இருப்பதாலும் ஐரோப்பாவில் ஏற்படும் நெருக்கடியான பொருளாதார சூழ்நிலை காரணமாகவும் கனடா நிலை, மேலதிக முதலீடுகளை எதிர்பார்க்கலாம் என பொருளாதார ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றார்கள். மேற்கு ஐரோப்பாவில் யூரோ வலயத்தில் உள்ள நாடுகளில் ஒன்று மாறி மற்றையது என பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றது. அயர்லாந்து, போத்துக்கல், கிறீஷ், இத்தாலி, ஸ்பெயின் என வரிசையில் நாடுகளின் பொருளாதாரம் இக்கட்டான நெருக்கடியில் உள்ளன. தலைவர்கள் பதவியை

தொடர்ச்சி 06ஆம் பக்கம்


HomeLife/GTA Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated



Raja Mahendran, P. Eng.
(Broker/Owner)

இரு இடங்களில்
"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"
5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

STORE FOR LEASE
KENNEDY & EGLINTON
Yogas Plaza
Retail Store For Lease. 1000 sq.ft. Suitable For Salon, jewellery. Kind Of Uses, Close To TTC, Kennedy Subway Station.

SPACE FOR LEASE



5200 Finch. Ave. East. (Embassy store building) 2nd Floor unit. About 745 sq.ft. 4 Rooms & Large common area Rent $973. Clean unit.

CONDO. FOR SALE




KENNEDY & 401
1 + 1 Bedroom condo. for sale. Close to all facilities. Asking price $264,900. Excellent view.

SALE / LEASE
Over 90% of units occupied in "GTA SQUARE".
Don't miss the opportunity
* Dental Office
* Trophy, Gift stores
* Acupuncture
* Optometrist / optician Office
* Ayurvedic Therapy
* Travel Agency Office
* Cheque - cash in
* Nails
* Many more
Lease Starts from $900 all inclusive
Sales starts from $129, 900

# நாமும் எமது மூச்சும்!

மூச்சு விடமுடியவில்லை. காற்று உள்ளே போக மறுக்கிறது. என்ன செய்யலாம் டாக்டர்? தொய்வு என்று ஒரு வைத்தியர் சொன்னார் ஐயா!

'இது அசாதாரணமானதும் ஒழுங்கீனமானதுமான சுவாசப்பையின் நோய்கள். முதலில் பிராணவாயு எனப்படும் ஒட்சிசனை உபயோகிக்கத் தருகிறேன். பின்னர் படிப்படியாக நோயின் தன்மையை அறிவோம். சுவாசத்தோடு சம்பந்தமுடைய அசாதாரணமான நோய் ஆகையால் சுவாசத்தோடு சம்பந்தமுடைய உறுப்புகளை பற்றிய சகல விடயங்களையும் நாம் அறிந்திருத்தல் வேண்டும்.

வைத்தியப்படிப்புக்கு மாத்திரம் இது தேவை எனக்கருதி நாம் வாளாதிருந்து விட முடியாது. ஒவ்வொரு மனிதனும் மிக விளக்கமாகப் புரிந்து கொள்ளல் அவசியமானது. ஏதோ காற்றை மூக்கினால் உள்ளே இழுக்கிறோம். மூக்காலோ வாயாலோ வெளியே விடுகிறோம் அதுதான் இயல்பான இயற்கை என இருந்துவிடலாகாது. இதற்கும் சில பயிற்சிகள் உண்டு.

மூக்கு, அதனுள்ளே இருக்கும் உரோமங்கள், சளி என்பன உட்சுவாசத்தில் அடங்கும். மூக்கினால் சுவாசிக்கப்படும் காற்று உரோமங்களால் வடிகட்டப்பட்டு உள்ளே போக, வடிகட்டப்பட்ட அழுக்குகளும், நுண்ணுயிர்களும் (Germs) சளிப்பற்றாக மாறி இருமல் செருமல் மூலம் வெளியேறுகிறது. இப்படி வெளியே வராவிட்டால் உள்ளே இருந்து நோயாகி தொற்றும் அபாயமும் ஏற்படுகின்றது.

நெருடும் சுவாசப்பை நோய்களின் தடுப்பு (C.O.P.D) எனப்படும். அவை பின்னர் குளிர்காய்ச்சல், நியூமோனியா போன்ற பல கடுமையான நோய்களைக் கொண்டுவரும். எனவே நாம் சுவாசிக்கும் போது கவனிக்க வேண்டிய பயிற்சிகள் அறிந்து செயற்பட வேண்டும். பிராணாயாமம் எனும் முறையை நமது முன்னோர்களான ஞானவான்கள், ரிஷிகள் சொல்லி வைத்திருக்கிறார்கள். யோகாசனம் பயிலும் போது முதலாவதாக இந்த மூச்சுப் பயிற்சி கற்கப்படுகின்றது. சாஸ்திர ரீதியாக எப்படி இருக்க வேண்டும். அதாவது நிலத்துடன் நேரடித் தொடர்பு இல்லாமல் ஒரு பாயோ, மான்தோலோ, தடுக்கோ போட்டு பத்மாசனத்தில் இருந்து ஒரு மூக்கால் சுவாசித்து மறுமூக்கால் வெளியேற்றுவது போன்ற நான்கு படிமுறைகளில் சுவாசப்பயிற்சி நடைபெறுகின்றது.

சாதாரண மக்களுக்கு இது கற்றுத் தரப்படுவதில்லை. ஆனால் அவர்களும் இயல்பாக இயற்கையாகவே இதை அறிந்துள்ளார்கள். ஒருபங்காக உள்ளிழுத்த மூச்சை, நான்கு பங்காக வெளியேற்றவேண்டும் என்பதே விதிமுறை. இதனைப் பயிற்சியினாலேதான் கொண்டு வருதல் வேண்டும். அதனால் கூடிய அளவு கரியமலவாயு (காபனீர் ஒக்சைட்) வெளியேறும்.

தெரிந்தோ, தெரியாமலோ நம் பாட்டிமார், பிறந்த குழந்தைகளுக்கு செய்து காட்டும் பணி 'பூர்ர்ர் பிறுஉஉஉ' என செல்லங் கொஞ்சுவர். குழந்தைகளும் அதைப்பார்த்து எச்சில் பறக்க பூர்ர்ர் ஒலியைக் கிளப்புவார்கள். அது ஒரு விளையாட்டாக நடக்கும். முதலில் சொல்லும் வார்த்தை 'அம்மா' என யாரும் சொன்னாலும் வாயைத்திறக்கும் போது 'அ' ஒலி தான் முதலில் கேட்கும். அம் அம் எனத் தொடரும். பூர் சொல்லும் போது இதழ்கள் குவிகின்றன. நாக்கு அசைகிறது. உள்ளே போன மூச்சு பன்மடங்காக வெளியேறுகிறது.

மெய்ஞானிகள், ரிஷிகள் போன்ற இந்து சமயத்தவர் வகுத்தளித்த மந்திரங்களைப் பார்ப்போம். வேதமந்திரங்கள் எதுவும் மூச்சு உள்ளே போகும் போது ஒருபங்காகவும் வெளியேறும் போது நான்கு பங்காகவும் நடைபெறுகிறது. இது மந்திரவீச்சின் பலத்தையும் மூச்சின் பயன்பாட்டையும் நிதர்சனமாகத் தருகிறது.



தனியே 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தைச் சொல்லும் போது 'ஓ' தொடங்கும் போது உள்ளிழுத்த மூச்சானது வெளியேறும் போது எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு 'ம்' இல் தொடங்கி நீளமாகக் கரைந்து நீடிக்கிறது. மந்திரம் ஒன்றைச் சொல்லும் போது உ-ம் 'ஓம் ஸ்ரீ சங்கராய நம' ஓம் எனும் போது உள்ளே போன ஸ்ரீ சங்கராய நம வரை வெளியேறுகிறது. 108 மந்திரங்களோ அல்லது எவ்வகையான மந்திரங்களோ மாத்திரை தப்பாது வகுக்கப்பட்டிருப்பதனால் 'ஓம்' எனும் போது உள்ளே புகுந்த மூச்சு மிகுதி மந்திரம் வரை நீடித்து வெளியேறுகிறது. 1:4 என்பது பிரமாணமாய் அமைகிறது.

உயிருக்கு ஆதாரமாயுள்ள மூச்சை ஒரு பங்கும் நான்கு பங்குமாகப் பயிற்சி செய்தலால் கரியமலவாயு எனும் காபன் ஒக்சைட் உபரியைக் கழுவிச் சுத்தம் செய்கிறது. இதனால் தானோ 'வேதமந்திர சொரூபா நமோ நம' என இறைவன் ஆராதிக்கப்படுகிறான்.

வேதமந்திரங்களின் சாரமாக உருவமாக இருப்பவனே இறைவன் எனப் பெறப்படுவதால் மூச்சினைச் சொன்ன பிரகாரம் சுவாசிக்கப் பயின்று கொண்டால் நோய் நொடிகளுக்கு இடமே இல்லை எனப் பொருள் கொள்ளலாமே.



**வள்ளிநாயகி இராமலிங்கம்**

# நாமும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

துறக்கிறார்கள். இதனால் நிலையற்ற பொருளாதாரம் ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுகின்றது. ஐரோப்பிய பொருளாதார தாக்கம், மற்றைய நாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. முதலீட்டாளர்கள் தகுந்த சூழ்நிலை உள்ள நாட்டை நோக்கி படை-யெடுக்கும் காலம் ஏற்படலாம். ரொறொன்ரோவில் மக்கள் அதிகரிப்பு, சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலை போன்றவற்றால் அதிகளவான முதலீடுகளை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம்.



இவ்வாறான நிலைமையினால் ரொறொன்ரோவில் ஆதன வியாபாரம் சீரானதாக இருக்கலாம் என எதிர்பார்ப்பது சரியானதாகவே தோன்றலாம். அண்மைய அறிக்கைகளின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் வட்டிவீத அதிகரிப்பு ஏற்படாது போலவே தோன்றுகின்றது.

## 2018 இல் பொதுநலவாய போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பு அவுஸ்திரேலியாவுக்கு!

பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கு இடையில் நடத்தபட்ட வாக்கெடுப்பின் பிரகாரம் அவுஸ்திரேலியா வின் கோல்ட் கோஸ்ட் நகருக்கு 2018 ஆம் ஆண்டுக்கான போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்பு கிட்டியது.

போட்டியை எங்கே நடத்துவது தொடர்பில் பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனத் தில் நடைபெற்ற இரு நாடுகளுக்குமான வாக்கெடுப்பில் அவுஸ்திரேலியாவுக்கு 43 வாக்குகளும் இலங்கைக்கு 27 வாக்குகளும் கிடைத்தன. இந்நிலையில் இலங்கை அந்த வாய்ப்பினை இழந்துள்ள நிலையில் பெரும் ஏமாற்றத்துடன் ஜனாதிபதி வெற்றிபெற்ற அவுஸ்திரேலியாவிற்கு வாழ்த்து தெரிவ-'த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2018 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டு விழாவை நடத்துவதற்கான வாய்ப்பை தட்டிக்கொண்டுள்ள அவுஸ்திரேலி யாவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.
அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்டில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவின் போது இலங்கையின் வீர வீராங்கனைகள் அதிகபட்ச திறமையை வெளிப்படுத்தி நாட்டுக்கு கௌரவத்தை பெற்றுக்கொடுப்பார்கள் என ஜனாதிபதி நம்புவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# பண்பாட்டுப் பொன்மகளே!

பண்பாட்டுப் பொன்மகளே பைந்தமிழர் கண்மணியே
கொண்டாட்டக் கனடாவில் உண்டாட்டுப் பொருளாகும்
உன்பாட்டை நினைக்கையிலே உள்ளமெலாம் நொந்துவெந்து
கண்பாட்டிற் சொரியுதடி கலைபாட்டில் உரியுதடி!



வேறுவழி இன்றிவந்து சொந்தநாட்டு வேதனைகள்
கூறியழ ஆறியழ இடங்கொடுத்த குணநாட்டில்
நூறுகொள்கை நூறுவழி நூறுசபை நூறுசங்கம்
மாறிமாறி வைத்தவற்றிற் பதவிபெற மானம்விற்பார்!

ஆறரைக்குக் கூட்டமென்றால் ஏழரைக்கே ஆரம்பிப்பார்
கூறிவைத்த நிகழ்ச்சிகளைக் கூசாமல் மாற்றிடுவார்
வேறுவழி யற்றவையோர் மெல்லமெல்ல விலகும்வரை
நூறுமுறை அரைத்ததையே நோகாமல் அரைத்திடுவார்!

கூட்டமவர் ஒன்றுவைத்தால் இவருமொன்று கூடவைப்பார்
போட்டியவர் ஒன்றுவைத்தாற் சாட்டுக்கொன்றை இவரும்வைப்பார்
வீட்டுக்கொரு பெட்டிக்கடை வீதிக்கொரு பத்திரிகை
கூட்டுத்தொழில் ஏதுமில்லைக் குடிசைத்தொழிற் போட்டியம்மா!

புத்தியில்லாப் போட்டிகளும் பொருளற்ற கூட்டங்களும்
வித்தையில்லாத் தொழில்வகையும் விளக்கமில்லாத் திட்டங்களும்
சித்திகளைத் தருவதில்லை என்பதனை எத்தனைபேர்
குத்துவிளக் கிற்கணக்குப் பார்த்தபின்னர் கூறியுள்ளார்!

சொன்னாலும் புரிவதில்லை சுயமாயும் தெரிவதில்லை
மன்னாதி மன்னவரிவர் வல்லவர்சொல் மதிப்பதில்லை
முன்னாலே சர்க்கரைபால் முக்கனித்தேன் புகழ்மாலை
பின்னாலே அலர்தூற்றல் பேய்க்காட்டல் குழிபறிப்பு!

- தொடரும்

கவிஞர் வி. கந்தவனம்




YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




முட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033



NetTek
Training & Solutions Inc.

Serving Community Towards 14th Year...

ARE YOU WORRIED ABOUT LOSING JOB?
CHANGE YOUR CAREER! BY SECOND CAREER!!



SECOND CAREER
FREE FUNDING
For Eligible Clients*

☑ UNEMPLOYED?
(Laid off after 2005 or Working less than 20 hours)

☑ MATERNITY BENEFIT?
(Received clients within 5 years)

* Tuition Fees, Books, Living Expenses, Day Care and Transportation
ALL FREE

BUSINESS ADMINISTRATION DIPLOMA
Job Availability
- Administrative Clerk
- Office Clerk / Bank Teller
- Documentation Clerk
- Inventory Clerk

COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
Job Availability
- Accounts Clerk
- Accounts Receivable
- Accounts Payable
- Book Keeper

NETWORK MANAGEMENT DIPLOMA
Job Availability
- Help Desk Support
- User Support Technician
- Hardware Installation Technician
- Technical Support Analyst


416.431.4545

TORONTO CAMPUS
(Markham Rd./Lawrence Ave.)
868 Markham Road, #104
Scarborough, ON M1H 2Y2

OPENING SOON
MARKHAM CAMPUS
(Markham Rd./Denison Rd.)
20 New Delhi Road, #97
Markham, ON L3S 0B5

Email: nettek-training@rogers.com Web: www.nettek-training.com

PRIVATE CAREER COLLEGE
(Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005)

New career will change your future!

# கனடாவின் இலவச மருத்துவ சலுகைகள் நாம் பயணம் செய்யும் நாடுகளிலும் கை கொடுக்குமா?

***OUT OF COUNTRY OHIP CLAIM***

## கனடிய தகவல் தொடர் 160

கனடாவில் குறிப்பாக ஒன்ராறியோ மாகாணத்தில் பெற்றுக்கொள்ளும் பலவிதமான

- மருத்துவ சேவைகள்
- மருத்துவ ஆய்வுகூட பரிசோதனை செலவுகள்
- வைத்தியசாலையில் மேற்கொள்ளும் பாரிய சத்திரசிகிச்சை செலவுகள்

போன்ற பல்வேறு வகையான செலவு களுக்கும் மாகாண அரசே அதற்குரிய கட்டணங்களை செலுத்தி விடுகின்றது என்பது சகலரும் அறிந்த ஒரு விடயம்!

ஆனால் கனடாவினை விட்டு ஏனைய நாடுகளுக்கு பயணம் செய்யும் போது நாம் போய் தற்காலிகமாக தங்கி நிற்கும் நாடுகளில் தங்களுக்கு பல்வேறு வகையான எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். இவ்வாறு நாம் விஜயம் செய்யும் நாடுகளில் ஏற்படும் அவசர மருத்துவ செலவுகளுக்கு இதே மாகாண அரசின் மருத்துவ காப்புறுதி திட்டம் கை கொடுக்குமா?
இதுவே கேள்வி?

கனடாவில் மருத்துவ செலவுகளுக்கு கைகொடுப்பது போல பூரணமாக இல்லாதிருந்தாலும், எதிர்பாராத விதமாக ஏற்படும் அவசர மருத்துவ செலவுகளில் சில குறிப்பிட்ட செலவுகளுக்கு இதே மாகாண அரசின் மருத்துவ காப்புறுதி திட்டம் உதவி செய்கின்றது.

முழுமையான பாதுகாப்பு தேவையாயின் பிரயாணிகள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொண்டு பிரயாணம் செய்யுங்கள் என மாகாண சுகாதார அமைச்சின் இணையத் தள செய்திகளில் வலியுறுத்தியிருப்பதுடன் காப்புறுதி முகவர் நிறுவனங்களும் அதே அறிவுரையினை வழங்குகின்றன.

ஏனைய நாடுகளில் ஏற்படும் அவசர மருத்துவ செலவுகளுக்கு மாகாண அரசின் மருத்துவ காப்புறுதி திட்டம் (Ohip Coverage) பின்வரும் இரு வழிகளில் கைகொடுக்கின்றது.

பயணம் செய்த நாடுகளில் ஏற்பட்ட பணச்செலவுகளை கனடாவுக்கு திரும்பி வந்ததும் ரிசீற்றுகள், ஆதாரங்கள், மருத்துவ அறிக்கைகளை சமர்ப்பித்து செலவழித்த பணத்தினை இம்மருத்துவ காப்புறுதி திட்டத்திலிருந்து மீள்பெறுவது (Reimbursement)

கனடாவில் செய்வதற்கு காலதாமதமாகும் ஒரு சிகிச்சையினை ஏனைய நாடு ஒன்றில் செய்வதாயின் அதற்குரிய அங்கீகாரத்தினை மருத்துவ காப்புறுதி திட்டத்திலிருந்து முன்கூட்டியே பெற்றுச் சென்று ஏனைய நாட்டில் மேற்கொள்ளும் சிகிச்சைக்குரிய செலவினை அரச மருத்துவ காப்புறுதி யிலிருந்து பெறுவது (Out of Country Prior Approval Program)



**பயணம் செய்த நாடுகளில் ஏற்பட்ட அவசர மருத்துவ செலவுகளின் பணத்தினை மீளப்பெற வேண்டுமா யின் சில நிபந்தனைகள்:-**

1. கனடாவினை விட்டு புறப்பட்ட முதல் 212 நாட்களுக்குள் ஏற்பட்ட செலவுகளை மட்டுமே மீளப்பெறலாம். அதற்கு மேல் தொடர்ந்து நிற்கும் காலங்களில் ஏற்படும் எந்தவொரு மருத்துவ செலவுகளுக்கும் இம்மருத்துவ திட்டத்தில் பணம் மீளப் பெறமுடியாது.

(கல்வி ஒன்றினை தொடர்வதற்காக அல்லது தொழில் காரணமாக அல்லது மத சம்பந்தமான வேலை காரணமாக தொடர்ந்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் சில விதிவிலக்குகள் உண்டு)

2. ஒரு நாளுக்கு ஏற்பட்ட செலவில் ஆக கூடுதலாக $400 டொலர் வரை உள்ள செலவுகளையே கனடாவில் மீள் பெறமுடியும்.

3. பெற்ற சிகிச்சைகள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் அரச அனுமதிப்பத்திரம் பெற்ற மருத்துவரிடம் சிகிச்சை பெற்று இருத்தல் வேண்டும். (இலங்கையிலும், இந்தியாவிலும் உள்ள நாட்டு வைத்தியரிடம் பெற்ற சிகிச்சை செலவுகளை இங்கு மீள் பெற முடியாது.)

4. செய்யப்பட்ட சிகிச்சைகள் என்பது ஒன்ராறியோ மாகாண மருத்துவ காப்புறுதி திட்டத்தில் அங்கீகரிக்கப் படாத சிகிச்சைகளுக்கு மீளப்பணம் பெறமுடியாது.

(உதாரணமாக குழந்தை பேறுக்காக செய்யும் சிகிச்சைகள், முகம் சீரமைக்கும் சிகிச்சைகள், பற்சிகிச்சைகள் போன்றவற் றினை அங்கீகரிக்கப்படாத தற்கு உதாரணமான சிகிச்சைகளாக குறிப்பிட லாம்.)

5. இன்னொரு நாட்டில் நிற்கும் போது அந்த நாட்டில் கட்டாயம் சிகிச்சை செய்ய வேண்டிய நிலையில் நோயின் தன்மை இருத்தல் வேண்டும். அல்லது எதிர்பாராத நிலையில் உருவாகி (விபத்து காயங்களை குறிப்பிடலாம்) உடனடி சிகிச்சை தேவை என்ற நிலையில் ஏற்பட்ட செலவுகளையும் இங்கு குறிப்பிடலாம்.

6. கனடாவில் ஏற்கெனவே சிகிச்சையில் மருந்துகளுடன் உள்ள நோயினை ஏனைய நாடுகளில் சென்று தொடர்ந்திருந்தால் அதற்குரிய செலவுகளை மீள பெற முடியாது. ஆனால் அதே நோய் தீவிரமான மோசமான நிலையில் பாதிப்புகளை உருவாக்கியிருந்தால் மட்டும் அந்த நிலையில் மேற்கொண்ட சிகிச்சைகளுக் குரிய செலவுகளை மீளவும் பெறலாம்.

(OUT OF PROVINCE / COUNTRY CLAIM SUBMISSION FORM' என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் விண்ணப்ப படிவத்தினை இங்குள்ள அரச மருத்துவ காப்புறுதி அலுவலகத்திலிருந்து நேரடியாக பெற்றோ அல்லது மின்கணினி தொடர் தகவல் மையத்திலிருந்து பதிவு இறக்கம் செய்தோ பூரணமாக நிரப்பி சமர்ப்பித்தல் வேண்டும்.

இவ் விண்ணப்ப படிவத்தில்

- நோயாளியின் பெயர் விபரம், முகவரி, மருத்துவ காப்புறுதி இலக்கம்.
- ஒன்ராறியோ மாகாணத்தினை விட்டு புறப்பட்ட நாள், திரும்பி வந்த நாள்
- சிகிச்சை பெற்ற நாடு, செலுத்தப்பட்ட நாணயத்தின் பெயர், தொகை, கனடா நாணயத்தில் இதன் மாற்றீட்டு பெறுமதி
- சிகிச்சை தொடர்பான தெளிவான விபரங்கள், ஆதாரங்கள்.

**மேற்குறிப்பிட்ட தெளிவான விபரங்கள், ஆதாரங்கள்.**

மேற்குறிப்பிட்டது போன்ற சில கேள்விகளுக்கு தெளிவாக தகவல்களை வழங்குதல் வேண்டும்.

இவ்விண்ணப்ப படிவத்துடன் சேர்த்து மருத்துவ அத்தாட்சி அறிக்கையும் செலவழித்த பண ரிசீற்றுகளும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(கனடாவுக்கு திரும்பி வரும்போது சிசிச்சை பற்றிய மருத்துவ அறிக்கைகள், ரிசீற்றுகள் கவனமாக கொண்டு வருதல் வேண்டும் என்பது இங்கு முக்கியமான கருத்தில் கொள்ள வேண்டிய விடயம் ஆகும் .

$1000 டொலர் பெறுமதிக்கு உட்பட்ட செலவாக இருந்தால் எவரும் சிரமம் இல்லாது நாமாகவே மொழி பெயர்த்து விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கலாம். அதற்கு மேற்பட்ட தொகையாக இருந்தால் கனடாவின் அனுமதிபத்திரம் பெற்ற மொழி பெயர்ப்பாளரினால் மொழி பெயர்க்கப்பட்டு அத்தாட்சிபடுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்)

பூரணப்படுத்தப்பட்டு கைசாத்திடப்பட்ட விண்ணப்பம், மருத்துவ அறிக்கைகள், செலவழிக்கப்பட்ட பணத்தின் ரிசீற்றுக்களை நேரடியாக அரச மருத்துவ காப்புறுதி அலுவலகத்திலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம். செலவழிக்கப்பட்ட பணம் காசோலையாக தபாலில் தேடி வரும். மேலதிக விபரங்களுக்கு

www.health.gov.on.ca என்னும் மின்கணினி தகவல் தொடர் வலயத்தினுள் போய் பார்க்கலாம்.

சில விசேட சிகிச்சைகள் ஏனைய நாடு ஒன்றில் போய் அவசரம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், கனடாவில் அந்த குறிப்பிட்ட நோயாளி யினை கையாளும் மருத்துவரினால் மருத்துவ காப்புறுதி திட்டத்திலிருந்து பணம் பெறுவதற்கு முன் அங்கீகாரத்திற்குரிய விண்ணப்பம் (Request for prior approval for full payment of insured out of country health services) சமர்ப்பித்து அதற்குரிய அங்கீகாரம் பெற்று சென்றால் அங்கீகரிக்கப்பட்ட செலவினை இம்மருத்து காப்புறுதி திட்டமே செலுத்திக்கொள்ளும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?

# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY

## வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினுடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

**ARE YOU CONCERNED** ABOUT YOUR DEBTS ?
ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

## இன்றே அழையுங்கள்

இலவச ஆலோசனைகளுக்கு

# (416) 556-9287

**Credit Revolving Center**
**(GTA Square )**
5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# இலங்கை இந்திய...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

சொல்லலாம்.

இறுதி யுத்த நேரத்தில் லட்சக்கணக்கான பொதுமக்கள் யுத்த முனையில் சிக்கியிருந்தார்கள். யுத்த மோதலின்போது பெரும் எண்ணிக்கையானவர்கள் அரச படைகளின் எறிகணை வீச்சுக்கள், விமானக் குண்டுத் தாக்குதல்கள், இராணுவத்தின் சுற்றிவளைப்புத் தாக்குதல்கள் என்பவற்றினால் கொல்லப்பட்டதாகவும், நாளாந்தம் பெருந்தொகையான மக்கள் படுகாயமடைந்ததாகவும், அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்குத் திணறிக்கொண்டிருந்த வைத்திய சாலைகளையும் இராணுவத்தினரின் தாக்குதல்கள் விட்டு வைக்கவில்லை என்றும் போர்முனைகளில் இருந்து தகவல்கள் வந்த



வண்ணமிருந்தன.

இதனால், யுத்த முனையில் சிக்கியுள்ள பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். அவர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என யுத்தம் நடைபெற்ற போது சர்வதேசமும், ஐநாவும், சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களும் வலியுறுத்தி குரல் கொடுத்து வந்தன. பொதுமக்கள் மீது எந்தவிதமான தாக்குதல்களும் நடத்தப்படவில்லை. வைத்தியசாலைகள் எதுவும் தாக்கப்படவில்லை என மறுத்துரைத்த அரசாங்கம் பொது மக்களுக்கு எந்தவித பாதிப்பும் அற்ற வகையிலேயே இராணுவத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என கூறி வந்தது. அத்துடன் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பு வலயத்தையும் (No Fire Zone) பிரகடனப்படுத்தியது. அத்துடன் கனரக ஆயுதத் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு சிறிய ரக ஆயுதங்களே பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்திருந்தது. பாதுகாப்பு வலயத்தினுள் பொதுமக்களைச் செல்லுமாறு உத்தரவிட்ட அரசாங்கம் அந்தப் பிரதேசத்தினுள் தாக்குதல்கள் நடத்தப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்தையும் வழங்கியிருந்தது.

ஆனால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு எதிராக பாதுகாப்பு வலயத்தின் உள்ளே எறிகணை வீச்சுக்களும் விமானக் குண்டுத் தாக்குதல்களும், வைத்தியசாலைகள் மீதான தாக்குதல்களையும் அரச படைகள் நடத்தியிருந்தன. இந்தச் சூழ்நிலையில் பாதுகாப்பு வலயத்தின் உள்ளே நடத்தப்பட்ட இராணுவ தாக்குதல்கள் பற்றியும், அதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருந்த உயிர்ச் சேதங்கள் படுகாயங்கள் என்பன குறித்த தகவல்கள் வந்து கொண்டிருந்தன.

பெட்டி வடிவத்திலான, பாதுகாப்பு வலயம் என்று அரசாங்கத்தினால் குறிப்பிடப்பட்டிருந்த ஒரு சிறிய நிலப்பகுதிக்குள், பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களும், விடுதலைப்புலிகளும் முடக்கப்பட்டார்கள். இந்த நிலையில் விடுதலைப்புலிகள் சரணடைவதற்கு விருப்பம் தெரிவித்து, சர்வதேச தொடர்புகளின் ஊடாக அவர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார்கள். அத்தகைய ஓர் ஏற்பாட்டின் மூலம் வெள்ளைக்கொடியேந்தி வந்த விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களான நடேசன், புலித்தேவன் ஆகியோர் உட்பட பலர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான தகவல்கள் பகிரங்கமாகின. இதனை மறுத்துரைத்த அரசாங்கம் அது கட்டுக்கதையென வாதிட்டது. இன்னும் அது கட்டுக்கதையென்றே அரசாங்கம் கூறி வருகின்றது. இது தொடர்பாக கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் வழக்கு ஒன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் இப்போது வெளியிடப்பட்டுள்ள நோர்வேயின் அமைதிக்கான அடமானங்கள் என்ற அறிக்கையில் இந்த வெள்ளைக்கொடி விவகாரம் குறித்தும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் இந்த அறிக்கையுடன் சம்பந்தப்பட்ட முக்கியமான இராஜதந்திரிகளினால் வெளியிடப்பட்டுள்ள விபரங்களிலும் தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. சரணடைவதற்கான விடுதலைப் புலிகளின் கோரிக்கை சர்வதேச மட்டத்தில் எவ்வாறு வந்தது எந்த வகையில் சரணடையலாம் என்பது குறித்து அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்குத் தெரிவித்திருந்த விபரம் என்ன, அதன் பின்னர் என்ன நடந்தது என்பவையெல்லாம் இவற்றின் மூலம் விலாவாரியாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

‘2009 மே 17 ஆம் திகதிக்கும் 18 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட இரவில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா.நடேசனும், சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவனும் நோர்வேஜியர்களுடனும், அமெரிக்க, பிரித்தானிய தூதரகங்களுடனும், அனைத்துலக செஞ்சிலுவைக் குழு, தமிழ் அரசியல்வாதியாகிய சந்திரநேரு ஆகியோருடனும் தொடர்பு கொண்டு சரணடைய விருப்பம் வெளியிட்டனர்.

இதையடுத்து, சிறிலங்க அதிபரின் ஆலோசகர் பசில் ராஜபக்சவுடன் நடத்தப்பட்ட அவசரமான பேச்சுக்களின் பின்னர், அவர்களை வெள்ளைக்கொடியுடன் முன்னே நடந்து செல்லும்படி கூறப்பட்டது.

சரணடையப் புறப்படுவதற்குச் சற்று நேரம்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# 99க்கு...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

கொண்டனர். வன்கூவர் நகரிலும் இது போன்ற ஒரு போராட்டம் வன்கூவர் ஆர்ட் கலரிக்கு வெளியில் நடைபெற்று வருகின்றது. இவர்கள் முன் வைக்கும் கோரிக்கைகள் அனைத்தும் வோல் வீதி கோரிக்கைகளை ஒத்தவையே. அமெரிக்க, ஐரோப்பிய நகரங்களில் நடைபெறும் போராட்டங்கள் முன் வைக்கும் கோரிக்கை களும் வோல் வீதி கோரிக்கைகளையே ஒத்துள்ளன. இப் போராட்டங்கள் முதலாளித்துவ அரசுக்கள் ஆசீர்வதிக்கப் பட்ட செல்வந்தர்களுக்கு வழங்கிவரும் சலுகைகள் எதிர்த்தே நடைபெறுகின்றன. இப் போராட்டங்கள் முறையான நிலையான பணச் சுழற்சியை நடைமுறைப்படுத்த கோருகின்றன. அத்துடன் வேலைவாய்ப்பு, சுற்றுச் சூழல் போன்ற விடயங்களையும் முன் நிறுத்துகின்றன. ரொரன்ரோ நகரில் போராடுபவர்கள் பத்திரிகைகளுக்கு கூறிய விடயங்களில் முக்கியமானவை இவை.

- ஒரு வீதமானவர்கள் உலக பொருளாதாரத்தை கட்டுப்படுத்துகின்றார்கள். இதனால் பொருளாதாரம் சம நிலையற்றுள்ளது. இது மாற்றியமைக்கப்பட வேண்டும்.
- எங்களில் பல்வேறு கொள்கைகளை பின்பற்றுபவர்கள் உள்ளார்கள். liberals and conservatives, libertarians and communists எனப் பலர். நாங்கள் அனைவரும் நடைமுறையில் உள்ள பொருளாதாரத் திட்டம் தவறானது என உறுதியானதாக நம்புகின்றோம். இதன் தொடர்ச்சி உலக மக்களை பெரியவில் பாதிக்கப்போகின்றது. மனித வாழ்வை அழித்து மக்களை மேலும் கொடுமைப்படுத்தப்போகின்றது.
- எங்களிடம் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலில்லை. தொடர்ச்சியான உரையாடல்களும்,ஆய்வுகளும் பதில்களை பெற்றுத் தரும். அதற்கு முதல் படியாக அரசுகள் இதனை தீர்க்க முன்வரவேண்டும்.
- ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுடன் ஒப்பிடும் போது கனடாவின் வங்கியியல் சிறப்பாகவுள்ளது. நல்ல வளங்கள் உள்ளன. ஓரளவிற்கு நல்ல பொருளாதாரத் திட்டங்கள் உள்ளன. இருப்பினும் கனடாவிலும் 20 வீதமானவர்கள் முழுச் செல்வத்தையும் அனுபவிக்கின்றார்கள். 1980க்குப் பிற இந்த 20 வீதமானவர்களின் செல்வம் 16.4 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதே சமயம் கடைசி 20 வீதமானவர்களின் வருமானம் 20.6 வீதத்தால் குறைந்துள்ளது. 5 வீதமானோர் மிக மோசமான வறுமையில் வாழ்கின்றனர்.

இப் போராளிகள் கூடாரங்கள் அமைத்து தொடர்ச்சியாக போராடிவருகின்றார்கள். நாட்கள், மாதங்களாக இவர்கள் போராட்டம் தொடர்கின்றது. நகர, மத்திய, மாகாண அரசுகள் இவர்களுக்கு தொல்லைகள் வழங்கிவருகின்றன. இவர்களது போராட்டம் அமைதியாக தொடர்கின்றது. ரொரன்ரோ நகர பிதா ரொப் போர்ட்ம் தனது பங்குகிற்கு போராளிகளை வெளியேற்ற முயற்சித்து வருகின்றார். இது மேலும் போராளிகளை வலுப்படுத்தும். ரியுனிசியா, எகிப்து போன்ற நாடுகளில் தொடர்ந்த போராட்டங்களின் முன்னெடுத்தலே இப் போராட்டத்திற்கு காரணம் என சில கருத்துக்களும் உண்டு. இடது சாரிகள் இதனை மக்கள புரட்சிக்கு நிகராக கருதுகின்றார்கள். போரட்டத்துக்கு காரணங்கள் உள்ளன. அதனால் தான் இப் போராட்டங்கள் பல நகரங்களில் தொடர்கின்றன. இப்போராட்டங்களை சாதாரணமான கருதி ஒதுக்குவது அரசுகளுக்கு பாதிப்பையே கொடுக்கும். இப் போராட்டங்கள் தலைமையெதுவும் இன்றி தன்னிச்சையாக தொடங்கப்பட்டவை. கூட்டாக இயங்குகின்றன. அமெரிக்க அதிபர் சில மாதங்களுக்கு முன்பு வர்க்க வேறுபாடு ஒன்ற அமெரிக்காவில் உள்ளது எனச் சுட்டிக் காட்டியிருந்தார். இதனால் இப் போராட்டங்கள்




ஒபமாவிற்கு சாதகமாக முடியும் எனக் கருதுபவர்களும் உண்டு. இப் போராட்டங்களுக்கு எதிரான விடயங்களையே ஊடகங்கள் வழங்கிவருகின்றன. ஊடகங்கள் பெரிய கோப்பிரேட் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. கருத்துக்கள் சுதந்திரமாக உண்மையான பரம்பல்கள் முக்கியம். இன்றைய நவீன பேஸ்புக் போன்ற சமூக இணைப்புத் தளங்கள் இதற்கு உதவி செய்தாலும், பலருக்கு இவற்றை பெற வசதி யற்றுள்ளார்கள். சுதந்திரமாக ஊடகங்கள் இயங்க வேண்டியதின் அவசியத்தையும் இப் போராட்டங்கள் வெளிப்படுத்துகின்றன. இப்போராட்டங்கள் மக்கள் போராட்டங்கள். இதற்கு வடிவங்கள் கொடுத்து அவற்றை தனிமைப்படுத்துவதை தவிர்த்து இப்போராட்டங்கள் அடுத்த கட்டத்தை நோக்கி செல்ல நாம் உறுதிணையாக இருக்க வேண்டும். நாங்கள் அனைவரும் இப்போராட்டங்களில் பங்கு பற்ற வேண்டும். எமது அடுத்த சந்ததியினா் வாழ்விற்கு இவை மாற்றங்களை ஏற்படுத்தும்.

# சித்தியடையவேண்டிய பரீட்சை

## ஓடும் நீர் உறைவதில்லை 133

வாழ்க்கையின் மிகவும் முக்கியமான செயற்பாடு பல்வேறுபட்ட பரீட்சைகளுக்கு முகம்கொடுத்து முன்னேறிச் செல்வது தான் இப்பரீட்சைகளில் சில எதிர்பார்க்கப்பட்டவையாகவும் பல எதிர்பாராதவைகளாகவும் அமைகின்றன. முன்கூட்டியே எதிர்பார்க்கப்படும் பரீட்சைகளுக்கு முன் னறிவுப்புக்களும், வழிப்படுத்தல்களும் வழங்கப் பட்டு நாம் தயார்ப்படுத்தப்படுகின்றோம். மாறாக எந்தவித தயார்படுத்தலும் இல்லாமல், எதையும் எதிர்பாராதவகையில் எழும் அல்லது எதிர் நோக்கும் பரீட்சைகளே வாழ்வியலில் ஒருவரது வெற்றிக்கான படிக்கற்களாக அமைகின்றன. எனவே ஒருவரது வாழ்க்கையில் அவர் அடையும் வெற்றியும் வெற்றியின்மையும் அவர் எதிர் நோக்கும் பரீட்சைகளின் தன்மைகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

பரீட்சைபற்றிய முன்னறிவுப்புடன் அதற்காகத் தம்மை ஆயத்தப்படுத்துவதற்காக மற்றவர்களது உதவிகளைப் பெறுவதும், உபகரணங்களைப் பயன்படுத்துவதும் அப்பரீட்சைபற்றிய பெறுபேறு களின் முன்னுணர்வுக்கு வழிவகுக்கின்றது. ஒருவரது பரீட்சையின் பெறுபேறுகள் முன் கூட்டியே எதிர்பார்க்கப்படுமாயின் அப்பெறுபேறு கள் வாழ்க்கைக்கு ஒரு புதிய பாடத்தைக் கற்பிப்பதாக அமைவதில்லை. ஏனெனில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் எமக்குக் கிடைப்பதற்கான ஆயத்தங்கள், ஆதரவுகள் அந்த மகிழ்ச்சியின் பெரும் பகுதியை விழுங்கிவிடுகின்றன. இதனால் தான் பாட- சாலைக் கல்வி முறையில் நாம் எதிர்நோக்கும் பரீட்சைகள் முன்னறிவுப்புச் செய்யப்பட்டிருப்பதும், அதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும் எம்மை தயார்ப்படுத்துவதும் அதன் பெறுபேறு களால் ஏற்படக்கூடிய மகிழ்ச்சியின் மிகப் பெரும்பங்கை மறைத்து விடுகின்றன. எமக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியின் ஒரு பகுதி எமது சொந்த உழைப்பின் மூலம் பெறப்படுவதாகவே அமைகின்றன. இதனால் தான் மிகக்குறைந்த உதவிகளைப் பெற்று பரீட்சையில் சிறப்புச் சித்திபெறும் மாணவர்களது மகிழ்ச்சியானது அதிகளவு உதவிகளைப் பெற்றுப் பரீட்சையில் சிறப்புச் சித்திபெறும் மாணவர்களின் மகிழ்ச்சியைவிடப் பல மடங்கு அதிகமாக இருப்பது மட்டுமல்ல எதிர் காலத்தைச் சிறப்பாக எடுத்துச் செல்வதற்கான மனநிலையையும் உருவாக்குகிறது.

வாழ்வியலில் நாம் அறிந்தோ அறியாமலே நாளாந்தம் பல பரீட்சைகளுக்கு முகம் கொடுக்கின்றோம். சில பரீட்சைகளில் வெற்றியையும் வேறுசிலவற்றில் வெற்றியின்மை யும் அடைகின்றோம். சில சந்தர்பங்களில் ஒரே விடயத்தை நாம் அடைவதற்கு ஒன்றிற்கும் மேற்பட்ட பரீட்சைகள் நமக்குத் தரப்படும் போது எமது எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் எமக்கு அதிகளவு சாதகமான விளைவுகளைத் தரும் பரீட்சைகளைத் தெரிவு செய்கின்றோம். இவ்வாறு தெரிவு செய்யும் போது அதி பெரும்பான்மையானவர்கள் இலகுவான பரீட்சைகளையே தெரிவு செய்கின்றார்கள்.

பரீட்சைகள் எமது வாழ்க்கையை நெறிப்படுத்துவன. நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பரீட்சையிலும் நம்மை அடுத்தநிலைக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றது என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். எனவே நாம் எதிர்நோக்கும் பரீட்சைகளை முழுமையான தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்கான மனப்பக்குவத்தை வளர்ப்பது வாழ்வியலின் அடிப்படையாதல் வேண்டும்.

நாம் எதிர்கொள்ளும் பரீட்சைகள் அனைத்திலும் வெற்றிகொள்ள முடியுமா என்ற வினாவுக்கு விடையாக அமைவது முடியாது என்பதே. பரீட்சையில் சித்திபெறுவது அல்லது பெறாமல் விடுவது என்பது பரீட்சைக்கான விடயம் பற்றிய அறிவு, பரீட்சையில் சித்தி பெறுவேன் என்ற உறுதியான நம்பிக்கை, அந்த உறுதியை உறுதிப்படுத்தும் உழைப்பு என்பனவற்றின் ஒருங்கிணைந்த செயற்பாட்டால் தீர்மானிக்கப்படு கின்றது. எனினும் நாம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை விட அதில் இருந்து நாம் பெறும் அனுபவமே மிகவும் முக்கியமானது. ஏனெனில் வாழ்க்கையின் சிறப்பு அம்சமாக அமைவதே நமது அனுபவங்களிலிருந்து பெற்ற, பெற்றுக் கொண்டிருக்கின்ற அறிவுதான் அதாவது அனுபவ அறிவு.

வாழ்க்கையின் பாதையில் நாம் எதிர்கொள்ளும் பரீட்சைகள் அனைத்திலும் நாம் சித்தியடைய முடிவதில்லை. சில பரீட்சைகள் இலகுவான- தாயும் வேறுசில கடினமானதாகவும் அமைகின்றன. சில பரீட்சைகளை நாம் தவிர்க்க முயற்சிப்பது உண்டு. நமது வாழ்வியல் அனுபவங்கள், சேகரித்துக்கொண்ட அறிவு என்பவற்றின் தன்மைகளைப் பொறுத்து சிலபரீட்சைகளைப் பின்போடுவதும் உண்டு. சில பரீட்சைகளை உடனடியாக எதிர்கொள்வது முண்டு. ஆனால் ஒரே ஒரு பரீட்சையை மட்டும் பின்போடவும் முடியாது, அதிலிருந்து சித்தி பெறுவதைத் தவிர்க்கவும் முடியாது. அதாவது சித்தி பெற்றேயாக வேண்டும்.

இவ்வாறு சித்தியடைந்தேயாகவேண்டிய பரீட்சை எது? ஏன் சித்தியடைந்தேயாக வேண்டும்? பரீட்சைக்கான விடயம் எது? தகவல்கள் எங்கிருந்து கிடைக்கும்? ஆசிரியர்கள் யார்? அவர்களது உதவிக்கும் வழிகாட்டலுக்கும் வாய்ப்புண்டா? எம்மை மாணவராக்கும் அந்தப் பரீட்சை என்ன? பாடப்புத்தகங்கள் எவை? இவ்வாறு பலவினாக்கள் எமது உள்ளத்தில் எழுவது இயல்பானதே. இவ்வாறு பலதரப்பட்ட கேள்விகளை நாம் கேட்பினும் ஒரு பரீட்சை சம்பந்தமாக அத்தனை கேள்விகளையும் மூன்று விடயங்களுக்குள் நாம் அடக்கலாம். ஒன்று மாணவர்கள் யார் என்பது மற்றையது ஆசிரியர் யார் என்பது மூன்றாவது சித்தியடைய வேண்டியவர் யார் என்பது.



இங்கு குறிப்பிடப்படும் பரீட்சையில் காணப்படும் விசித்திரமான விடயம் என்னவென்னில் மற்றவர் களது பார்வைக்கு ஆசிரியர்களாகவும் வழிகாட்டி களாகவும் காணப்படுபவர்கள் மாணவர்களாக வும், மற்றவர்களது பார்வைக்கு மாணவர்களாகக் காட்சியளிப்பவர்கள் ஆசிரியர் களாகவும், வெற்றியடைய வேண்டியவர் ஆசிரியராகவும், அதனால் சித்தியடைய வேண்டியவர் மாணவர்களாகவும் இருத்தலாகும்.

சாதாரண பார்வையில், பெற்றோர்கள் அவர்களது குழந்தைகளின் ஆசிரியர்களாகவும் வழிகாட்டி களாகவும் காணப்படுவர். அதேபோன்று குழந்தைகளும் மாணவர்களாக வகைப்படுத்தப் படுவர். குழந்தைகளின் சிறப்பான வளர்ச்சி பெற்றோர்களின் வெற்றியாகவும் தீர்மானிக்கப்படு கின்றது. ஆனால் இவையனைத்தும் ஒரு சாதாரண பார்வையினால் எழும் எண்ணக்கருத்துக்களே.

உண்மையில் பெற்றோர்கள் மாணவர்களாகவும் குழந்தைகள் ஆசிரியர்களாகவும், குழந்தை வளர்ப்பு வாழ்க்கை நூலாகவும் குழந்தைகளின் வெற்றி பரீட்சையில் சித்தியாகவும் அமைவது தான் வாழ்வியல் உண்மையாகும். பெற்றோர்கள் குழந்தைகளின் வளர்ப்பின் ஊடாக பல்வேறுவகையான விடயங்களை அறிவியல் அனுபவரீதியாகக் கற்கும் மாணவர்களாகின்றனர். ஒரு குடும்ப அமைப்புக்குள் கணவன், மனைவி என்ற நட்பு முறையிலிருந்து அப்பா, அம்மா என்ற உறவுமுறைக்கு வழிவகுக்கும் குழந்தைகளது அனுபவங்கள் பெற்றோர்களுக்கான சிறந்த வாழ்க்கைப் பாடமாக அமைவதால் அவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாய தேவை ஏற்படுகின்றது. இங்கே குழந்தைகளின் வளர்ச்சியும் அதனுடன் இணைந்த செயற்பாடு களும் புதுப்புது விடயங்களைப் பெற்றோர் களுக்குக் கற்பிப்பதால் குழந்தைகள் ஆசிரியர்களாகவும், பெற்றோர்கள் மாணவர் களாகவும் மாற்றப்படுகிறார்கள். இங்கே குழந்தைகளின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் புதுப்புது அனுபவங்களைப் பெற்றோர்களுக்கு கற்பிப்பதால் குழந்தைகள் ஆசிரியர்களாக மட்டு மல்ல பாடநூலாகவும் அமைக்கப்படுகிறார்கள்.

சாதாரண நடைமுறையில் ஒரு மாணவனின் வெற்றி அந்த மாணவனது ஆசிரியரின் வெற்றியாகவும் அளவிடப்படுகின்றது. இங்கு பரீட்சைக்கு முகம்கொடுப்பவர் மாணவராகவும் அப்பரீட்சையின் பெறுபேறுகள் ஆசிரியரின் தரத்திலும் ஒரு கணிப்பை உருவாக்குவதையும் காணலாம். மாறாக குழந்தை வளர்ப்பு என்ற வாழ்வியல் பாடத்திட்டத்தில் குழந்தைகள் பெற்றோர்களுக்கான ஆசிரியர்களாக அமைவ- தால் மாணவர்களாகிய பெற்றோர்களின் வெற்றி அவர்களது ஆசிரியர்களான குழந்தைகளின் வெற்றியால் தீர்மானிக்கப்படுகின்றது.

இந்த ஆசிரியர்களாகிய குழந்தைகள் மாணவர்களாகிய பெற்றோர்களுக்கு என்ன விடயங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள்? பொறுமை, ஒற்றுமை, புரிந்துணர்வு, தரமான தொடர்பு கொள்ளல், ஒருவரை ஒருவர் மதித்தல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தல், மற்றவர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், முன்னேற்றமான சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளல், ஊக்குவிப்பு, தலைமைத்துவ தகைமை, தரமான மனிதர்களின் சேர்க்கை, இறை நம்பிக்கை, ஆக்கபூர்வமான விடயங்களில் நேரத்தை பயன்படுத்துதல், நேர்மை, உண்மை பேசுதல், கடின உழைப்பு, தன்னம்பிக்கை, தன்னைப்பற்றிய உயர்வான பார்வை, உயர்வான எண்ணம், இடைவிடாத முயற்சி, வெற்றி மனோபாவம் போன்ற விடயங்களையே கற்பிக்கிறார்கள்.

ஒரு குழந்தையால் மேற்கூறப்பட்ட விடயங்களை எவ்வாறு தனது பெற்றோர்களுக்குக் கற்பிக்கமுடியும் என்று எண்ணுகிறீர்களா? ஆச்சரியப்படாதீர்கள். அவர்களிடம் நாம் எதை எதிர்பார்க்கிறோமோ அதைத்தான் அவர்களும் எங்களிடம் எதிர்பார்க்கிறார்கள். அதாவது ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளில் எதை எதிர்பார்க்கிறார்களோ அதைக் குழந்தைகளும் பெற்றோரிடத்தில் எதிர்பார்க்கி றார்கள். இதனால் தான் மேற்கூறப்பட்ட விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாய தேவைக்கு பெற்றோர்கள் நெறிப்படுத்தப்படுகிறார்கள்.

ஆம் வாசகர்களே!
குழந்தை வளர்ப்பு என்பது வாழ்வியலில் தவிர்க்கப்படமுடியாத, தவிர்க்கப்படக்கூடாத ஒரு பரீட்சை. இந்தப் பரீட்சையில் ஒவ்வொரு பெற்றோரும் சித்தியடைந்தேயாக வேண்டும். ஏனெனில் இந்தப் பரீட்சையில் நாம் காணும் வெற்றி நமது வெற்றியும் நமது குழந்தைகளின் வெற்றியும் மட்டுமல்ல அடுத்த தலைமுறையின் வெற்றிக்கும் அத்திவாரமாக அமைகின்றது.

**KG Master-kgmaster@rogers.com**

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலி யிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்



| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am Rogers Cable Channel - 20 Bell Express vu Channel - 219 |

# கவலைகள்: எம்மை அரிந்து தின்னுகின்றன!

தொங்கப்போட்ட முகங்களுடன் தாடியும், மீசையுமாக வாலிபர்கள், கண்ணீர் மல்க தம் கதையை கூறும் பெரியவர்கள், வானொலியூடாக கவலைகளை வெளிப்படுத்தி கண்ணீர் வடிக்கும் ஏதிலிகள் எல்லோரும் 'கவலை' என்ற இந்த மூன்றெழுத்துப் பிரச்சினைக்கு உட்பட்டவர்கள் தான். கவலை தீர்க்கும் மருந்துகள், தாயத்துக்கள், நூல்கள் கூட எம்மை ஒன்றும் செய்துவிடவில்லை. காலையிலிருந்து படுக்கைக்கு போகும் வரையில் எத்தனை விதமான கவலைகள் துயரங்கள் எம்மை எப்படியெல்லாமோ ஆட்டிப் படைக்கின்றன! சின்னதும் பெரியதுமாக எல்லாமே கவலை தான். அவரவர் உள்ளத்திற்கு ஏற்ப அவை பூதாகரமாகி நிற்கின்றன. இன்று கவலையில்லாத ஒருவரைக் காண்பது உண்மையில் கடினம் தான். தம் கவலைகளை மறக்க மதுவிடம் தஞ்சம் புகுபவர்கள், போதைவஸ்துக்கு அடிமையாகுபவர்கள் தினசரி பெருகுகின்றனர். 'இந்த நூற்றாண்டு கவலைகளின் காலம்' என்று கூறிய டபிள்யூ. ஏச், ஆயுடன் என்ற அந்த அறிஞர் மிகவும் சரியாகவே கூறியுள்ளார்.

மனித குலத்திற்கு எப்போது கவலை தோன்றியதென்று தெரியவில்லை. எனினும், ஆரம்பம் முதலே இது கவலையில் மூழ்கியிருக்க கூடும். ஆரம்பத்தில் இருந்த கவலை வேறாகவும் பின்பு வேறாகவும் மாறியிருக்க கூடும். மனிதரும் விலங்குகளும் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தாலும் படிப்படியாக சிந்திக்கத் தொடங்கிய மனித இனம் கவலையில் மூழ்கியது. வாழ்க்கையை ஒரு போராட்டமாக எடுத்துக் கொண்ட காலம் முதல் மகிழ்ச்சியை தேடி ஓட ஆரம்பித்த நாம் இன்னும் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கின்றோம். இன்னும் அதனைக் கண்டதாக தெரியவில்லை. எங்கும் எதிலும் திருப்தியில்லாத நிலையில் வாழ்கிறோம். வாழ்க்கையின் அர்த்தத்தினை விளக்கத்தினை புரிந்து கொள்ளும் நிலையில் நாம் இல்லை. கறையான் தான்



அரிப்பதாக கேள்விப்பட்டிருக்கிறோம். கவலையுமா எம்மை அரித்துக் கொண்டிருகிறது.?

கவலையை மாற்றுவது, மறப்பது, நிறுத்துவது என்பதனை உளவியல் துறையினர் தொடர்ந்தும் ஆய்வு செய்கின்றனர். மனக்கவலையை தீர்ப்பதற்கு கடவுள் வழிபாடுதான் ஒரேவழி என்பது ஆன்மீக வாதிகளின் கருத்து. நல்ல நூல்களை வாசிப்பதுதான் ஒரேவழி என்று எழுத்தாளர்களின் கருத்து. பௌதிகம், இரசாயனம் போன்ற பாடங்கள் போன்று பிரச்சினை தீர்வில் இலகுவானது. விஞ்ஞான அபிவிருத்தி கூட கவலையை கூட்டியதே ஒழிய நிறுத்தவில்லை. எனவே, இதற்கு என்ன தான் வழி. இதுவே இன்றுள்ள வினா. வயதுக்கு ஏற்ற, நாட்டுக்கு ஏற்ற, இனத்திற்கு ஏற்ற பல்வேறு கவலைகள் எம்மை ஆட்டிப் படைக்கின்றன. வாழ்வு முழுவதும் அழுது கொண்டு கவலையை தீர்க்க முடியாதவர்கள் இன்று பலர்.

பயமும், பீதியும் தான் கவலையை கூட்டும் ஏனைய தன்மைகளாகும். எதிர்காலத்தில் எப்படி வாழ்வது? என் மகன் டாக்டராக வருவாரா? என் மகளுக்கு திருமணம் நிகழுமா? புதிய வீடு வாங்குவேனா? காதல் நிறைவேறுமா? என்றெல்லாம் பிரச்சினைகள் குழப்பத்தினை ஏற்படுத்துகின்றன. இத்துடன் கூடவே நீர்க்குமிழிகள் போல் துணையான கவலைகள் பல நூறாகிறது. பழைய கவலை அகல, புதிய கவலை தோன்றுகிறது. வீட்டிற்குள் ஆரம்பித்து சமூகத்திற்கும் நாட்டிற்கும் இக்கவலை வியாபகம் பெறுகிறது. எனவேதான் இன்று இது சர்வதேச பிரச்சினையாக மாறியுள்ளது.

கவலைகள் உண்மையில் தொலைவிலே உள்ளனவெனினும் நாம் மிக அருகில் இழுத்துக் கொள்ளுகின்றோம். 'யாமிருக்க பயமேன்' இப்படித்தான், முருகனின் படம் போட்ட கலண்டர் கூறும். 'துயர்தீர்க்கும் மருந்து' இப்படித்தான் பல தேவாரத் திருப்பதிகங்கள் கூறும். 'கவலைகளை எம்மால் மாற்ற முடியும்' என சோதிடர்கள் பலர் கூறுவர். எனினும் தீர்க்கப்படாத பிரச்சினை இது. கேள்வியும் நானே. பதிலும் நானே' என்ற நிலையில் நாம் உள்ளோம். கவலைக்கு நலம் காரணமாகும் போது மௌனியாக இருக்கின்ற கடவுளர் என்ன செய்ய முடியும்! உள்ளத்தினை புரிந்து கொண்டவர் நாம் தானே. 'மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் 'தூண்டில்' வினாவிடையில் ஒரு பகுதி நீங்கள் இவ்வாறு உழைப்பு செய்வதன் இரகசியம் என்ன? என்ற கேள்விக்கு அவரது பதில். நான் செருப்புக்களை வெளியே கழற்றி விடும்போது பிரச்சினைகளையும் அங்கேயே கழற்றி விடுகின்றேன். நிம்மதியாக தூங்குகின்றேன் என்றார். அதில் பல உண்மைகள் உள்ளன. எழுபத்தைந்து வயது நெருங்கியும் இன்னும் சிறப்பாக உழைப்பவர் அவர். பிரச்சினைகளை உள்வாங்குவதில்லை.

துன்பமே விலக்கிப் போ, துயரமே அகன்றுபோ இப்படி உரக்க கத்திப் பார்ப்போம். சொல்ல முடியும் செய்ய முடியாது. இன்று யாரைப் பார்த்தாலும் நேரம் இல்லை என்பர். சரியான வேலை இருக்கு என்று அலுத்துக் கொள்வார்கள். எப்பதான் இந்த வேலை முடியப்போகுதோ என்பார்கள். மனித மனத்தின் ஆழம் அகலம் புரிய முடிவதில்லை. ஓடும் பொன்னும் ஒக்க நிலையில் ஞானிகள் போல் நாம் இல்லை. ஒளியற்ற சிந்தனையில் மூழ்கிப் போகும் நாம் எந்த நேரமும் குழப்பத்திற்கு உட்பட்டு போகிறோம். கற்பனைகளை மட்டும் வளர்த்துக் கொள்ளும் நாம் காற்றில் பறக்கிறோம். நிலத்தில் நடப்பதற்கு கால்களுக்கு பழக்கி கொடுக்கவில்லை! எதனையும் திட்டமிட முடியாத நாம் கவலைகளை மாற்ற முடியாது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு ஔவையார் கூறிய 'இடம் பட வீடெடேல்' என்ற மொழிக்கு விளக்கம் தெரிந்தவர், தெளிந்தவர் எத்தனை பேர்? எங்கள் மத்தியில் எல்லாமே அதிதிருப்தி தான். வீட்டின் சுற்றளவில், தளபாடங்களில், சடங்குகளில், ஒப்பீடுகளில், அணி கலங்களில், வாகனங்களில் எல்லாம் தாவிச் செல்கிறது.

பயமும் ஆசையும் தோன்றும்போது கவலை எழுகின்றது. இந்த உணர்ச்சி இயல்பாக எழுகின்றது. கவலையுள்ள மனதில் அமைதியில்லை, நிதானம் இல்லை. சிந்தனையில்லை. குழப்பம் மட்டுமே குடியிருக்கும் வெளித்தோற்றம் தளர்ச்சியிழந்து நலம் இழப்போம். எதிலும் கவனம் செலுத்த முடியாது. விரக்தியே மிஞ்சுகின்றது. தன்னைத்தானே நொந்து கொண்டு சிறிய விடயத்தினை பெரிதாக்கி, மற்றவர்கள் சந்தோசத்தால் உள்ளார்கள். நான் இல்லையே என ஏக்கம் கொண்டு காரணமின்றி பிறரைக் கோபித்துக் கொண்டு வாழ்கிறோம்.

கவலைகள் தோன்ற காரணிகள் பல. புதியதான தோல்வி, மற்றவர்களின் பழிச்சொல், மானமிழப்பு, சாதகமற்ற சூழ்நிலை, பதில் கூறமுடியாத நிலை, பழைய சம்பவங்களை இரை மீட்கும் நிலை, தனிமையில் விடப்படும் நிலை, நட்பினை இழத்தல், ஏமாற்றம், சக்திக்கு மீறிய செயலில் தோல்வி போன்ற பல. நமது கவலைகள் மற்றவர்களுக்கு கூறி பிரயோசனம் இல்லை. காரணம் எம்மை விட அவர்களின் கவலைகள் அதிகமாக இருக்கலாம். எனவே கவலைகளை நாம் தான் அனுபவிக்க வேண்டும். ஜீரணிக்க வேண்டும். நமக்கு நாமே உதவி புரிந்து கொள்ளாது விட்டால் நமக்கு உதவ வேறு யாரும் இல்லை.

மனக்கவலையால் நமக்கு பல தீமைகள் ஏற்படுகின்றன என்பதே உளவியலாளர்கள் முடிவு. முதலில் எமது புறத்தோற்றம்மாறுகிறது. கவர்ச்சி இழந்து அழகு இளமை குறைந்து விடுகின்றது.



**எஸ். பத்மநாதன்**
**சிந்தனைப் பூக்கள்**

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

2 Way Mechanic shop + house Income $2100/month. Good investment. Commercial. For $299,000

Gas station with mechanic shop + storage building. 1 hour drive from GTA. Good income property.

8 beds senior or retired home. Monthly income $16,000.

Metal scrap yard for recycling and car sales with house office.

detached brand new home Ontario in London. Near university of Weston.

For students 2 + 1 Condo. in Toronto. Near University of York. $130,000

# வெகுளாமை (Calm) - 2

அன்பான வாசகர்களே!

நம்மிடம் ஏற்படும் கோபத்தை எல்லை மீறாமலும், உரிய முறையிலும் கையாளும் திறமையாகிய வெகுளாமை எல்லோரிடமும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன். கோபம் என்றால் என்னவென்பதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கின்றோம். கோபம் என்பது சாதாரணமாக மனிதனில் ஏற்படும் உணர்ச்சி. பொதுவாக அது ஆரோக்கியமானதாக இருக்கும். ஆனால் அது கட்டுப்பாட்டை மீறி அழிவுப்பாதையை நோக்கிச் செல்லுகையில் அது பல சிக்கல்களை ஏற்படுத்தும். நாம் பணி புரியும் இடங்களில், குடும்பத்தில் எனப் பல்வேறு இடங்களில் அந்தச் சிக்கல்கள் ஏற்படலாம். 'உடலில் ஏற்படும் ஏனைய உணர்ச்சிகளைப் போலவே நாம் கோபமடையும் பொழுது உளவியல், மற்றும் உயிரியல் மாற்றங்கள் கூடவே வருவதுண்டு' எனக் கோபத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் உளவியல் நிபுணர் கலாநிதி ஸ்பிபேகர் கூறுகின்றார். கோபம் ஏற்படும் பொழுது இருதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் அதிகரிக்கும். ஹோர்மோன்களிலும் மாற்றம் ஏற்படும். கோபம் ஏற்படுவதற்கு பலவிதமான காரணங்கள் இருக்கலாம். விரக்தி, ஏமாற்றம், நோய்கள், பிரிவு, துயரம், அநீதி எனப் பல காரணங்களைக் கூறிக் கொள்ளலாம்.



நமக்கு ஏற்படும் அபாயங்களில் இருந்து நம்மைப் பாதுகாப்பதற்கென இறைவனால் கொடுக்கப்பட்ட உணர்ச்சியே கோபம். எனவே குறிக்கப்பட்டளவு கோபம் நமக்கு இருப்பது அவசியமாகின்றது. ஆனால் எமது கோபத்தை வெளிப்படுத்துவதற்கும் வரையறை உண்டு. நமக்கு கோபம் ஏற்படும்பொழுது வெவ்வேறு அணுகுமுறைகளை எடுத்துக் கொள்கின்றோம். பொதுவாக மூன்று விதமான அணுகுமுறைகள் உள்ளன. அவையாவன கோபத்தை வெளிப்படுத்தல், அடக்கி வைத்திருத்தல், மற்றும் சாந்தமடைதல் ஆகியவையாகும். நாம் கோபத்தை வெளிப்படுத்துதல் செய்யும் பொழுது ஆக்கிரமிப்பு (aggressive) இல்லாது கோபத்தை வெளிப்படுத்துதல் சரியான வழிமுறை. அதாவது மற்றவர்களை நோகச் செய்யாது அல்லது துன்புறுத்துதல் செய்யாது நமக்கு ஏற்படும் கோபத்தை உரிய முறையில் வெளிப்படுத்தி நமது தேவைகளை அடைய முயற்சிக்கும் பொழுது நாம் வெகுளாமை கொள்ளாது இருக்கின்றோம் என்று கூறிக் கொள்ளலாம். நமக்கு ஏற்படும் கோபத்தை அடக்கி அதனை மாற்றி வேறு வழியில் செலுத்த முடியும். கோபம் ஏற்படும்பொழுது அந்த விடயத்தைப் பற்றிச் சிந்திக்காது சீரான (Positive) விடயங்களைக் கவனித்தல் என்பதாகும். இது மிகவும் சிரமமான ஒரு அணுகுமுறையாகும். 'மனம் ஒரு குரங்கு' என்பார்கள். அந்த மனதை ஒருமைப்படுத்தி வேறுவிடயத்தைச் சிந்திப்பது என்பதை எல்லோராலும் செய்ய முடிவதில்லை. நமது முயற்சியால் தான் இதனைச் சாதிக்கலாம். இதில் நமது நோக்கம் கோபத்தை உள்ளே எடுத்துக்கொண்டு அடக்கியவாறு ஆரோக்கியமான விடயங்களில் மாற்றீடு செய்தல். இவ்வாறு நமக்கு வருகின்ற கோபத்தை அடக்கிக் கொள்வதில் ஆபத்து இருக்கின்றது. அதாவது நாம் கோபத்தை உள்ளே வைத்திருப்பதனால் அதிக இரத்த அழுத்தம், மன அழுத்தம் ஆகியவை ஏற்பட வாய்ப்பு உள்ளது. கோபத்தை உடனே வெளிப்படுத்தாது விடுவதால் பல சிக்கல்கள் ஏற்படலாம். நேரடியாக எமது கோபத்தை தெரிவிக்காது மறைமுகமாக கோபத்தைக் காட்டும் முயற்சியில் ஈடுபடலாம். இவ்வாறான செயல்முறை நல்லதல்ல. அடுத்த அணுகுமுறை சாந்தமடைதல் ஆகும். (Calm Down Inside) இந்த அணுகுமுறையில் நமது வெளி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதோடு எமது உணர்வுகளையும் கட்டுப்படுத்து கின்றோம். நம்மை நாமே அமைதிப்படுத்தி சாந்தமடைதல் என்று பொருள்படும். இந்த அணுகுமுறை மிகவும் நல்ல அணுகுமுறையாக இருந்தாலும் கடினமானதுதான்.



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## உலக மகா இந்துக்கள் ஸ்தாபனத்தாரின் சேவைகள்

***www.mahahindu.org***

All kind of community, religious and cultural services are available in Tamil, Hindi, Punjabi and English in Scarborough, Toronto, Brampton and Mississauga areas.

புதிதாகக்கனடாவுக்கு குடியேறியவர்களுக்கும் இருக்க இருப்பிட வசதியற்றவர்களுக்கும் வீட்டுவசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன் இலவச அத்தியாவசிய உபகரணங்களும் வழங்கப்படும்.

Those who are having problem in getting social assistance, ODSP or any other benefits, are welcome to contact us for immediate service.

வேலை செய்யமுடியாதவர்களுக்கு ஆயுட்கால நிரந்தர உதவிப்பணம் பெற்றுக்கொடுப்பதுடன் அரச சார்பற்ற ஸ்தாபனங்களினால் கொடுக்கப்படும். உதவிகளும் எடுத்துக்கொடுக்கப்படும்.

Volunteers are needed in Ectobicoke and Scarbrough areas. Those who are working as full time volunteers will be eligible for various benefits.

வாகன சம்மந்தமான பிரச்சினைகள் நேருமிடத்து நீதிமன்றம் போகாமலே அவற்றில் இருந்து விடுவித்துக்கொள்வது சம்மந்தமான சட்ட ஆலோசகர்கள் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

***We are with you in all your need and for all kind of services of our community***

தொடர்புகளுக்கு: ***Shakthi: 416 992 7882, 4 Vange Cres. Etobicoke, ON, M9V 3N7***

# கவலைகள்...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

முகத்தில் சுருக்கம் ஏற்பட முதுமை ஏற்படுகிறது. தூக்கம் கெடுவதால் தலைவலியும் நெஞ்சுவலியும் ஏற்படுகிறது. மனக்குழப்பம் என்னும் நிலைக்கு தள்ளப்படுவதால் குடற்புண் (அல்சர்) தொய்வு (ஆஸ்துமா), மயக்கம், மூச்சுவிட



முடியாமை ஏற்படலாம். பதட்டம், நாவரட்சி, உடல் நடுக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. சிலவேளைகளில் தற்கொலையும் செய்யப்படலாம். அறிவாளிகள் பொதுவாக ஒரேமாதிரி இருக்கும்போது முட்டாள்கள் வேறு வேறாக சிந்திக்கின்றார்கள் என்று எங்கேயோ படித்த ஞாபகம். அதாவது கவலை என்பது எமது எண்ணத்தில் எழுவது, எண்ணத்தில் வாழ்வது ஆகும். வாழ்வின் அர்த்தங்களை புரிந்து கொள்ளாதவரை கவலைகளை எம்மால் அகற்ற முடியாது. பண்புள்ள நடத்தை மூலம் பல அர்த்தங்களை அறிந்து கொள்ள முடியும், நல்ல நட்பு முறைமூலம் மகிழ்ச்சியை உறுதிப்படுத்தவும் முடியும்.

மனத்தின் குழப்பத்தினை அறவே அகற்ற பல தெளிந்த சிந்தனைகள் எமக்குள் எழ வேண்டும். இது சாதாரணமாக வராது. அனுபவம், கல்வி முறைகள், நூல் வாசிப்பு, படைப்பாற்றல் மூலம் எழ வேண்டும். எமது நேரத்தினை ஏதாவது ஒரு செயல் திட்டத்தில் ஈடுபடுத்துதல் மிகவும் இன்றியமையாதது. ஏதோ ஒரு விடயத்தில் எமது புலன்களை செலுத்தும் போது கவலைகள் அற்றுவிடுகின்றது. 'கண்கள் அமுதூற குயில்கள் பாடும்' என்ற பாரதி போன்று எமது எண்ணத்தில் அமுது ஊறவேண்டும். நிலவு ஊறித்ததும்ப வேண்டும். எண்ணங்கள் பூக்கள் போல மலரவேண்டும். இசையில் எம்மை மூழ்கடிக்க வேண்டும். திருப்தி, மகிழ்ச்சி இரண்டும் வாழ்வின் முக்கிய அர்த்தங்கள். இதனால் கவலை நம்மை விட்டு தூர விலகிச் செல்லலாம் அல்லவா!

# உடல் உறுப்புக்கள்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

மந்தம், வயிறு பொருமல், செரியாமை, பசியின்மை போன்றவை நீங்கும், ஜீரண சக்தியும் அதகரிக்கும். வயிற்றுத் தொந்தரவுகள் நீங்கினால் நன்கு ஆரோக்கியமாக வாழலாம்.

## யோகாசன சிகிச்சையில்



## நிரந்தர தீர்வு

பெரும்பாலான யோகாசனங்களை பார்க்கும்போது வயிறு சம்பந்தப்பட்ட பயிற்சியாகவே இருக்கிறது.

1. சர்வாங்காசனம் - Shoulder stand
2. தனுராசனம் - Bow
3. ஹலாசனம் - Plough
4. பட்ஷிமொத்தாசனம் - Head pose
5. பவனமுத்தாசனம் - Child Pose
6. உட்டியானா - Uddiyana asana

இவ்வாறான ஆசன பயிற்சிகளை செய்துவரும் போது வயிற்றுப் பகுதியிலுள்ள வாதம், பித்தம், வாயு, சிலோத்துமம் (நீர்) சமநிலையடைகின்றன. இவ்வாறு சமநிலையடைவதால் வயிற்றுப் பிரச்சினைகள் அனைத்தும் நீங்குகின்றன. இதற்கு மாறாக மேற்கூறப்பட்டத்தில் ஏதாவது ஒன்று மிகையாகவோ அல்லது குறைந்தோ இருந்தால் வயிற்றுகோளாறுள் ஆரம்பமாகிவிடும்.

எனவே மேற்கூறப்பட்ட வழிமுறைகளையும் பின்பற்றி வயிற்றுப்பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டால் உடலில் உருவாகும் கொடிய நோய்களிலிருந்து விடுபட்டு நீடித்த ஆயுளுடன் வாழலாம்.

# வெகுளாமை...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

நாம் கலந்துரையாடிய மூன்று அணுகு முறைகளிலும் நமது கோபத்தை உரிய முறையில் வெளிப்படுத்துவது இலகுவான அணுகுமுறையாகக் கருதலாம் என்பது எனது கருத்தாகும். நமது கோபத்திற்கு நியாயம் இருக்கும் பொழுது அதன் வலு அதிகமாக இருக்கும். நாம் ஒரு நியாயமான விடயத்திற்காகக் கோபிக்கும் பொழுது மற்றவர்கள் நமது கோபத்தை ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளும் சூழல் இருக்கும். அர்த்தமற்ற முறையில் நாம் கோபித்தால் மற்றவர்கள் பொங்கி எழுந்து விடுவார்கள். நாம் எப்பொழுதும் நியாயமானவர்களாக இருக்க வேண்டும் என்பது மிகவும் அடிப்படையான விடயம். நம்மில் நியாயம் இல்லாவிட்டால் ஒதுங்கிக் கொள்ள வேண்டியதுதான். நியாயம் அற்ற முறையில் கோபிப்பதை யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். பார்த்தால் போதும் எல்லோரும் பயந்து விடுவார்கள்' என்று நாம் கூறிக் கொள்வது உண்டு. இதுவும் தமது கோபத்தை சாதுர்யமாக வெளிப்படுத்தும் முறையே ஆகும். நாம் கோபமுற்று இருக்கும் பொழுது வார்த்தைப் பிரயோகங்களில் மிகவும் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும். மிகவும் நேர்த்தியான, கட்டுக்கோப்பான வார்த்தைகளும், இயன்றளவு மட்டுப் படுத்தப்பட்ட பேச்சும் இருக்க வேண்டும். ஒவ்வொரு வார்த்தைகளும் பலத்த சிந்தனைக்கப்பால் வர வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் கோபமாக இருக்கும் பொழுது ஒரு வன்முறையில் ஈடுபடும் முயற்சியை எடுக்கவோ அல்லது அவ்வாறான தோற்றப்பாட்டையோ வெளிக்காட்டவே கூடாது. நமது மனத்தால் ஒரு விடயத்தை ஏற்றுக் கொள்ள முடிய வில்லை என்ற உணர்ச்சியை அல்லது நியாயத்தன்மையை வெளிக்



ஒருவரை வேணுமென்றே கோபப்படுத்தி அதனால் வருகின்ற சூழ்நிலையை தமக்கு ஆதாயமான சூழ்நிலையாக ஏற்படுத்திக்கொள்வதிலும் சிலர் ஈடுபடுகின்றார்கள். இவ்வாறானவர்களிடம் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவர்களின் குறிக்கோள் எல்லாம் ஏதோ ஒரு விதத்தில் ஆதாயம் தேடுவதுதான். தானும் தன்பாடும் என்று இருக்கும் ஒருவரை வலுக்கட்டாயமாக அணுகி ஏதோ ஒரு வகையில் எரிச்சல் ஊட்டுவார்கள். சாதாரணமாக கோபம் கொள்ளாதவர்களையும் தமது வலையில் மாட்டி விடுவார்கள். நமது வெகுளாமை என்ற திறமையின் மூலம் நமது கோபத்தை உரிய முறையிலும் சாமர்த்தியமாகவும் வெளிப்படுத்தியோ அல்லது வேறு ஒரு பொருத்தமான அணுகுமுறையாலோ கோபமூட்டுபவர் களின் நோக்கத்தை நாம் தகர்த்து எறிய வேண்டும். நம்மை எரிச்சல் ஊட்டி எமக்கு எல்லை மீறிய கோபத்தை உருவாக்க யாரும் முயற்சிக்கின்ற சூழ்நிலையில் நாம் எல்லை மீறிக் கோபம் அடைந்து விட்டால் நாம் தோற்றவர்களாகி விடுவோம். நம்மை எரிச்சலையடைச் செய்தவர்கள் வெற்றியாளர்களாகி விடுவார்கள் என்பதே உண்மையாகும். சில நேரங்களில் நமது கோபத்தை தேவைக் கேற்ப வார்த்தைப் பிரயோகங்கள் இன்றியே காண்பிக்கலாம். 'அவர் மிகவும் கண்டிப்பானவர். ஒருமுறை காட்டுவதற்கு மேலும் ஒரு அபாயத்தில் இருந்து நம்மையோ மற்றவர்களையோ பாதுகாப்பதற்கு மட்டுமே நமது கோபம் பயன்படுத்தப்படலாமே தவிர மற்றவர்களை நியாயமற்ற முறையில் புண்படுத்தவோ அல்லது அச்சமூட்டு வதற்கோ இல்லை என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். நாம் நியாயமற்றவர்களாக இருப்போமே யானால் கோபிக்கும் செயலைப் புரியத் தகுதியற்றவர்களாகி விடுவோம். 'நியா யமான ஒன்றை ஒரு குழந்தை கூறினால் கூட அதை நாம் ஏற்றுக் கொண்டுவிட வேண்டும். உலகத்தை சிருஷ்டித்த கடவுள் பிரம்மாவே தவறான ஒன்றைக் கூறினால், அதை நாம் நிராகரித்து விட வேண்டும்.' என்ற கருத்தை கோபத்தை யும், ஆசையையும் வெற்றி கொண்டவரா கிய வசிஷ்டர் (Vasishta) கூறினார். நாம் நியாயத்தின் பக்கம் இருக்க வேண்டும் என்பதுவே வாழ்க்கை நெறி. நல்லது வாசகர்களே! எனது கற்பனையில் உருவான ஒரு கவிதையுடன் இன்றைய உரையாடல் நிறைவுறட்டும்.

வெகுளாமை கொண்டுமே மேலாராய் வாழ்ந்து
பகுத்தறிவு பெற்றிடல் பாங்காய்த் - தகுதி
அளவோடு பேசியே அன்பில் உயர்ந்து
களவிலாக் கொள்கையைக் காத்து.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

- தொடரும்.

# வராது வயிற்றுக்கோளாறு!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

மனிதனின் ஆயுளும் ஆரோக்கியமும் அவருடைய உடலின் உறுப்புக்களின் செயல்பாட்டைப் பொறுத்தே அமைகின்றது. பொதுவாக மனிதனின் உடலின் பல உறுப்புக்கள் மிக இன்றியமையாத பணிகளைச் செய்து வருகின்றது. அவற்றைச் செய்ய மூல காரணமாயிருப்பது வயிறுதான்.

மனிதனுக்கு உணவில்லாமல் உறுப்புக்கள் செயல்டாது. உண்ணும் உணவானது பற்களால் அரைக்கப்பட்டு உணவுக் குழாய் வழியே இரைப்பையை அடைக்கின்றது. அங்கு பித்த நீருடன் சேர்க்கப்பட்டு உணவில் உள்ள சத்துக்களை குடல் உறிஞ்சிகள் உறிஞ்சி இரத்தத்திற்கு அனுப்புகின்றன. மீதமுள்ளவற்றை சிறுகுடல் வழியாக பெருங்குடலுக்குள் தள்ளி கழிவாக வெளியேற்றுகின்றன. இந்த செயல்பாடுகள் சீராக நடந்தால்தான் மனிதனுக்கு தேவையான சத்துக்களும் ஆரோக்கியமும் கிடைக்கின்றன.

வயிற்றில் கோளாறுகள் ஏற்பட முக்கிய காரணமாக அமைவது உணவும் மனமும் தான். இவை இரண்டிலும் மாறுபாடு ஏற்படும் போது அது வயிற்றுக் கோளாறாக மாறுகின்றது. அதிகம் உணர்ச்சி வசப்படுதல், கோபம், மன எரிச்சல், இரவில் அதிக நேரம் கண்விழித்தல், தூக்கமின்மை, உடல் சூடு, மலச்சிக்கல் இவற்றாலும் எண்ணெயில் தயாரான உணவுகள், அதிக காரமான உணவுகள், மது, புகை பழக்கங்கள், வாயுவை அதிகரிக்கச் செய்யும் உணவுகள், வயிற்றில் கிருமிகள் போன்ற காரணங்களால் வயிற்றுக் கோளாறுகள் உண்டாகின்றன. அத்துடன் பித்தத்தின் செயல்பாடுகள் அதிகரிக்கும்போது இது ஏற்படுகின்றது.

### வயிற்றுப் பாதிப்புக்களின் அறிகுறிகள்

1. அஜீரணம்
2. பசியின்மை
3. வயிற்றுப்பொருமல்
4. வயிற்றுப்போக்கு



5. நெஞ்செரிச்சல்
6. வாய்ப்புண்

### வயிற்றுப்புண்

வயிற்றில் புண் உண்டானால் வயிற்று வலி ஏற்படும். சற்று காரம் கூடுதலாக சாப்பிட்டால் வலியுடன் எரிச்சல் உண்டாகும். வயிற்றில் புண் இருந்தால் வாயிலும் புண் காணப்படும். இவர்களுக்கு மனதளவிலும் பாதிப்பு ஏற்படும். இவர்கள் காரம், புளிப்பு, எண்ணெய் கலந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

### வயிறு இரைச்சலுக்கு

வயிறு இரைச்சலாகவும் பொருமலாகவும் இருந்தால் இதற்கு முக்கிய காரணம் உண்ட உணவு சரியாக சீரணமாகாமல் இருத்தல் அல்லது உடலுக்கு ஒவ்வாத உணவை உண்டதால் இருக்கும். இதற்கு

இஞ்சி - 10 கிராம்
சீரகம் - 10 கிராம்
பெருங்காயம் - 5 கிராம்

இவற்றை எடுத்து எலுமிச்சை சாற்றில் ஊறவைத்து வெயிலில் நன்கு காயவைத்து அரைத்து ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட்டு வந்தால் வயிற்றுப் பொருமல் நீங்கும்.

### வயிற்றுப்போக்கு

வெந்தயத்தை கறுப்பாக வறுத்து நன்கு பொடியாக்கி வயிற்றுப்போக்கு உண்டாகும் நேரத்தில் சாப்பிட்டு வந்தால் உடனே பலன் கிடைக்கும். வயிறு குமட்டலும் நீங்கும்.

### வயிறு பொருமல்

சுக்கு, ஓமம், இந்துப்பு இவை மூன்றையும் 50 கிராம், 10 கிராம் எடுத்து லேசாக வறுத்து பொடியாக்கி காலை, மாலை இரண்டு தேய்க்கரண்டி அளவு வெந்நீருடன் சாப்பிட்டு வந்தால் வயிறு




தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# இலங்கை...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

முன்னர் வரை அவர்களுடனான கலந்துரையாடல் இருந்தது. சில மணிநேரங்களின் பின்னர் அவர்கள் சுடப்பட்ட தகவல் வெளியானது. விடுதலைப்புலிகளின் இறுதியான கோட்டைக்குள் நகர்ந்த அரச படைகள், விடுதுலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் எஞ்சியிருந்த புலிகளின் தலைவர்களான கடற்புலிகளின் தளபதி சூசை, புலனாய்வு பொறுப்பானர் பொட்டு அம்மான் ஆகியோரைக் கொன்றனர்.



நோர்வே மற்றும் அமெரிக்கா ஆகியன போரின் இறுதிக்கட்டத்தில் இரத்தக்களரியை-யத் தவிர்க்க சில இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டன. அதேவேளை, இணைத் தலைமையும் புலிகளின் சரணடைவு தொடர்பாக பணியாற்றுவதற்கு இணங்கியது. ஜப்பானும், ஐரோப்பிய ஒன்றியமும் நேரடியாகப் பேச்சுக்களில் ஈடுபடவில்லை. இந்தியா இந்த முயற்சியில் தொடர்புபடா விட்டாலும், பொதுமக்களின் இழப்புக்களை மட்டுப்படுத்துவதற்கு சில வேண்டுகோள் களை மட்டும் விடுத்தது. அமெரிக்காவும், நோர்வேயும் மனிதாபிமான நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக, புலிகளைச் சரணடைய வைப்பதற்கு நெருக்கமான பேச்சுக்களை நடத்தின இதற்காக சில ஆலோசனைகளும் பரிமாறப்பட்டிருந்தன. இந்தக் கட்டத்தில் புலிகள் சரணடைந்தால் ஏற்றுக்கொள்வதாக சிறிலங்கா அரசிடமிருந்து நோர்வே அரசுக்கு சமிக்ஞைகள் கிடைத்தன……….. என்று அந்த அறிக்கையில் விபரங்கள் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே, வெள்ளைக்கொடி ஏந்தி வந்தவர்களை ஏற்றுக்கொள்வது என முன்னர் இணங்கியிருந்த போதிலும், பின்னர் அவர்களை அரச படைகள் சுட்டுக் கொன்றன என்ற விபரம் ஆணித்தரமாக நோர்வே அறிக்கையின் மூலமாக வெளி வந்துள்ளது. ஆனால் சரணடைய வந்தவர்கள் எவரையும் தாங்கள் கொல்ல வில்லை என்று குதர்க்கம் பேசி வருகின்ற இலங்கை அரசு மனிதாபி-மானத்துடன் நடந்து கொள்ளவில்லை என்ற விடயம் இங்கு தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த வெள்ளைக் கொடி விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கின்ற வேளையில் சர்வதேச ராஜ தந்திரிகள் மட்டத்திலிருந்து வெளிவந்துள்ள இந்தத் தகவல்கள் இலங்கை அரசுக்கு நிச்சயம் தலையிடி தருவதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவைப் பொருத்தமட்டில், அது இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இரட்டை நிலைப்பாட்டையே கடைப்பிடித்து வந்துள்ளது. ஆயினும் இலங்கையில் சமாதானம் ஏற்படுவதை அது விரும்பியிருக்க வில்லை என்ற ஒரு தோற்றப்பாட்டை நோர்வே அறிக்கை வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது, இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையி லான சமாதான பேச்சுக்களை ஆக்க பூர்வமானதாக இந்தியா நோக்கவில்லை. முயற்சி செய்யுங்கள் பார்க்கலாம் என்ற வகையில் ஒருவகையான அனுதாபத்துடன் தான் அது நோக்கியது. 2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, 2004 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடம் ஏறியது. விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குத லில் கொல்லப்பட்ட முன்னாள் இந்தியப் பிர-தமர் ராஜிவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியைப் பலம்வாய்ந்த தலைவியாகக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியின் அரசாங்கம் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பாதுகாப்பதாகக் கூறிவந்த போதிலும், மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தின் இராணுவத் தீர்வு நிலைப்பாட்டிற்கு அது மனப்பூர்வமாக ஆதரவு நல்கியது. இன முரண்பாட்டிற்கு இராணுவத் தீர்வே வழியாகும் என்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டிற்கு எதிராக இந்தியா எந்தவிதமான அழுத்தத்தையும் கொடுக்கவில்லை என்பதை நோர்வேயின் அறிக்கை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

அரசுக்கும் அரச சார்பற்ற பயங்கரவாத அமைப்பு என்று வர்ணிக்கப்பட்ட ஓர் ஆயுதமேந்திய அமைப்புக்கும் இடையிலான முரண்பாட்டை அரசியல் தீர்வுக்கு ஊடாக முடிவுக்குக் கொண்டு வருகின்ற ஒரு கடின-மான காரியத்தில் ஈடுபட்டிருந்த நோர்வேயை, பல தடவை விடுதலைப்புலிகளுக்கு நண்பனாகச் செயற்படுவதாக இந்தியா குற்றம் சுமத்தியதையும், விடுதலைப் புலிகளை அவ்வாறு நடத்தாமல், அவர்களை வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும் என்று இந்தியா குறிப்பிட்டதையும் நோர்வே அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குவதன் மூலம் இந்தியாவின் தோட்டாக்கள் தமிழ் மக்களுக்கு எதிராகப் பாய்வதை தாம் விரும்பவில்லை எனக் கூறி, இலங்கைக்கு ஆயுத உதவி மறுத்திருந்தது. அதேவேளை, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிடமிருந்து இலங்கை கனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததை இந்தியா கண்டு கொள்ளாத போக்கையே கடைப்பிடித்திருந்தது.

2008 ஆம் ஆண்டு தீவிரமடைந்திருந்த வன்னியுத்தத்தின்போது பொதுமக்கள் கொல்லப்படுவதைக் கட்டுப்படுத்துமாறு இந்தியா இலங்கை அரசாங்கத்திடம் கேட்டிருந்த போதிலும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக தீவிரப்படுத்தப்பட்டிருந்த இராணுவ நடவடிக்கையை இலங்கை தொடர்ந்து மேற்கொள்வதற்கும், விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்குமான தனது ஆதரவை மிகத் தெளிவான நோக்கத்துடன் வழங்கி வந்தது. பொதுமக்கள் மீதும், விடுதலைப்புலிகள் மீதும் அரச படைகளின் தாக்குதல்கள் அதிகரித்திருந்தபோது, அதனை நிறுத்துமாறு இந்தியா கோரவே இல்லை என்பதையும் நோர்வே தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றது.

தொடர்ச்சி 29ஆம் பக்கம்

# இலங்கையின் கொலைக்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

விபரித்துள்ளோம் என்று Jon Snow தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தங்களது முதலாவது "இலங்கையின் கொலைக்களம்" நிகழ்ச்சியை பிரித்தானியாவில் உள்ள 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் பார்வையிட்டார்கள். இது அவுஸ்திரேலியா, இந்தியா, டென்மார்க், நோர்வே, மற்றும் பெல்ஜியம் நாடுகளிலுள்ள தொலைக் காட்சியிலும் காண்பிக்கப்பட்டது. இது சனல் 4 இன் இணைய தொலைக்காட்சியில் (4oF) 30 இற்கு மேற்பட்ட நாடுகளிற்கு ஒளிபரப்பு செய்யப்பட்டது. ஜெனிவா மற்றும் நியூயோர்க் இல் உள்ள ஐக்கிய நாடுகள் சபையிலும் ஐரோப்பிய நாடாளுமன்றம், அமெரிக்க செனற் சபை என்பவற்றிலும் காட்டப்பட்டது என்றார். இலங்கை அரசு இப்புதிய விவரணச் சித்திரத்தை சனல் 4 வெளியிட விடாமல் தடுக்க பல வழிகளிலும் முயற்சி செய்து வருகிறது.

## இலங்கை அரசின் சித்திரவதை தொடர்கிறது!

பிரித்தானியாவின் சனல் 4 செய்தியில் ஜோனதன் மில்லர் நவம்பர் 07, 2011 இல் இலங்கையில் உள்நாட்டு போர் முடிவடைந்தும் இன்னமும் தமிழ் சிறைக் கைதிகள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படு கின்றனர் என தமக்கு ஆதாரபூர்வமான தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.



ஐக்கிய நாடுகள் சபை 2009 இன் போரின் இறுதிக்காலத்தில் 40,000 குடிமக்கள் கொல்லப்பட்டதாகவும் இலங்கை அரசு போர்க்குற்றங்களை இழைத்ததற்கான நம்பத்தக்க தகவல்கள் தம்மிடம் உள்ளதாக ஏற்கெனவே தெரிவித்து இருந்தது. தற்போது மீண்டும் ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகளுக்கான குழுக்கள் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றம் பற்றிய விசாரணைகள் நடை-பெற வேண்டும் என வற்புறுத்துகின்றன.

சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் இலங்கையில் சிறைவைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழ் கைதிகளை பேட்டி கண்டு வெளியிட்டுள்ளது.

"நிமால்" என சனல் 4 ஆல் பெயர் சூட்டப்பட்ட ஒருவர் யூன் 2011 இல் இலங்கை அரசால் தனக்கு செய்யப்பட்ட சித்திரவதைகளை விபரித்துள்ளார். தனது தோல் உரியும் அளவிற்கு இரும்புக் கேபிளினால் (Steel Cable) அடித்தார்கள். அதனால் ஏற்பட்ட வலி தாங்கமுடியாமல் இருந்தது. தன்னை தலைகீழாக கட்டித் தொங்கவிட்டார்கள். தலையை தண்ணீருக்குள் அமிழ்த்தினார்கள். பெற்றோ லில் நனைக்கப்பட்ட பொலித்தீன் பையினுள் தலையை வைத்து கழுத்தில் கட்டினார்கள். அதனுள் சுவாசிக்கும்போது நெருப்பை சுவாசித்தது மாதிரி இருந்தது. எனக்கு எந்தவித மருத்துவ உதவியும் தரப்படவில்லை. நான் முகம் குப்புறவே படுத்திருப்பேன். முதுகிலுள்ள காயங்களின் வேதனையை தாங்கமுடியவில்லை.

சனல் 4 தொலைக்காட்சியால் "மாறன்" எனப் பெயர் சூட்டப்பட்ட இன்னொரு முன்னாள் கைதி தெரிவிக்கையில், தன்னை தலைகீழாக கட்டி தலையை தண்ணீர் நிறைந்த பரலினுள் அமிழ்த்தினார்கள். முகம் குப்புற படுக்க வைத்து வயர்களாலும் பொல்லாலும் அடித்தார்கள். சிகரட்டால் சுட்டார்கள். நான் தண்ணீர் கேட்டு கதறிய போது சிறுநீரை குடிக்கத் தந்தார்கள். அவர்களது சித்திரவதை தாங்காமல் நான் போரில் இறந்திருக்கலாம் என நினைத்தேன் என்றார்.

இவர்கள் இருவரும் தமிழர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்திருந்தாலும் இலங்கைச் சிறையில் யூன் 2011 இல் நடை-பெற்ற சித்திரவதைகளில் இருந்து மீண்டு வந்து பிரிட்டனில் அடைக்கலம் கேட்டிருந்தார்கள். இவர்களுக்கு நடைபெ-ற்ற சித்திரவதைகளையும், காயங்களையும் பார்த்த பிரித்தானிய அரசு உடனடியாகவே அடைக்கலம் வழங்கி விட்டது. சாதாரணமாக ஒருவருக்கு அடைக்கலம் வழங்க பிரித்தானிய அரசிற்கு பல வருடங்கள் எடுக்கும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு சமர்ப்பிக்க இலங்கையில் நடைபெறும் சித்திரவதைகள் பற்றிய அறிக்கையை 12 சர்வதேச மனித உரிமைகள் நிறுவனங்கள் தயாரித்துள்ளன. இதில் ஆண்கள், பெண்கள் உட்பட 35 தமிழ் கைதிகளின் வாக்கு மூலங்கள், மருத்துவ அறிக்கைகள் அடங்கியுள்ளன.


Success is always
about being
the first...
• First commercial development serving the Morningside Heights Community
• Very limited amount of units available only 21,000 square feet
• The buildings are designed for owner/endusers
Restaurant/Retail
units for sale
So hurry, call our knowledgeable agents today to get all the details about this exciting opportunity. There is only a very limited amount of units available. Once they are gone, the doors to this opportunity will also be closed for good!
THE SHOPPES®
MORNINGSIDE HEIGHTS
Call Now for Details:
416 321 6969

# புற்று நோய்க்கான இயற்கை வைத்தியம்

## மின்வலையில் வந்தவை - 23

1979 இல் உலகம் முழுவதுமுள்ள 2000 விஞ்ஞான ஆய்வுகளின்படியும், 2000 உயிரியல் இரசாயனவியல் அறிஞர்கள், போசாக்குணவு ஆலோசகர்கள் ஆகியோருடைய ஆலோசனைப்படியும் அமெரிக்க அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் தலைவர் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதன்படி அமெரிக்கர்களின் நாளாந்த உணவு ஆபத்தானது எனக் கூறப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் இறந்த 2.1 மில்லியன் அமெரிக்கர்களில் 1.5 மில்லியன் பேர் உணவு தொடர்பான நோய்களின் காரணமாக இறந்தனர். அதன்படி பெரும்பாலானவர்கள் கூடிய கொழுப்புணவுகளை, குறிப்பாக முட்டை, வெண்ணெய், சிவப்பு இறைச்சி ஆகியவற்றைக் குறைக்க வேண்டுமென அறிக்கை கூறுகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள விக்ரோறியா பல்கலைக்கழக ஆய்வாளர் கள், புற்றுநோய் திடீரெனக் குறைந்த 200 நோயாளர்களை மிக அவதானமாகக் கவனித்தனர். அவர்களில் 87% மானோர் தமது உணவை மரக்கறிக்கு மாற்றியதை அவதானித்தனர். கோணெல் பல்கலைக் கழக ஆராய்ச்சி விஞ்ஞானியான டொக்டர் வில்லியம் விசெக், அதிகளவில் இறைச்சி உண்பதற்கும் புற்று நோய்க்குமுள்ள தொடர்பை விளக்கியுள்ளார். இறைச்சி சமிபாட்டினால் ஏற்படும் விளைபொருள் அமோனியா எனும் புற்று நோய்ப் பிறப்பி எனக் கூறியுள்ளார்.

- துறையூரான் -

ஆபத்தான வேகத்தில் புற்றுநோய் அதிகரிப்பினும் எமது உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை உயர்வாக வைத்திருந்து புற்று நோய்வராமல் தடுத்துக் கொள்ளலாம். இறைச்சி, பாலுணவுகள் வெள்ளைச் சீனி, மா, வெள்ளை அரிசி, குடிவகை, புகையிலை, கோப்பி, சோடா முதலிய தகாத உணவுகளை நாம் உட்கொண்டு எமது உடலை நஞ்சாக்குகின்றோம். நல்ல போசாக்குள்ள உணவுகளை உட்கொண்டால் நல்ல இரத்தம் உற்பத்தியாகும். நல்ல இரத்தமும், நோய் எதிர்ப்புச் சக்தியும் சிறப்பாக, இயங்குமாயின் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பில்லை.

பல ஆண்டுகளாக தேசிய புற்று நோய்ச்சங்கம் உணவுக்கும் புற்று நோய்க்கும் தொடர்பு எதுவுமில்லை எனக் கூறி வந்தது. அண்மைக் காலச் சான்றுகளிலிருந்து அது தனது கூற்றை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புற்றுநோய் வராமல் தடுப்பதற்கு ஒருவர் சில பழங்களையும் மரக்கறிகளையும், உட்கொள்ள வேண்டுமென விதந்துரைத்துள்ளது. தோடம்பழம், வாழைப்பழம், பச்சை இலைகள், மஞ்சள் மரக்கறிகள் குறிப்பாக கரற், புறோக்லி போன்றவை புற்றுநோயைத் தடுக்கும் விற்றமின்களையும் நார்ச்சத்தையும் கொண்டுள்ளன என்றும் இவற்றை ஒருவரின் நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் தேசிய புற்றுநோய்ச் சங்கம் கூறியுள்ளது.

புற்றுநோய் வராமல் தடுப்பதற்கும், குணப்படுத்துவதற்கும் எமது நோய் எதிர்ப்புத் தொகுதியை நாம் உயர்நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். இதற்குப் பின்வரும் எட்டு எளிய அளவு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். போதியளவு தூய காற்று, போதியளவு தூய நீர், போதிய போசாக்குள்ள இயற்கை உணவுகளை உட்கொள்ளல், போதிய ஓய்வு, கணிசமான அளவு நாளாந்த உடற்பயிற்சி, நாளாந்தம் சூரிய ஒளி பிடிக்குமாறு வெளியே செல்லுதல், சாப்பாட்டில் கவனமும் செயலில் அவதானமும் கடவுள் நம்பிக்கையும் தேவை. எல்லோரது உடலிலும் புற்றுநோய்க் கலங்கள் உள்ளன. நோய் எதிர்ப்புத் தொகுதியை விருத்தி செய்வதால் வெண்குருதிக்கலங்கள் புற்றுநோய்க் கலங்களை அழித்து விடும். இக்கலங்கள் சாதாரண உடற்கலங்களைக் காட்டிலும் வலுக்குறைந்தவை. எனவே நோய் எதிர்ப்புத் தொகுதி உயர்வாய் இருந்தால், இவை கட்டுப்பாட்டில் இருக்கும்.



**புற்றுநோயை எவ்வாறு முறியடிக்கலாம்.**

புற்று நோயை கொல்லும் எந்த மருந்தோ, மூலிகையோ, பரிகாரமோ கிடையாது. இதைக் குணப்படுத்துவதற்கு உடலின் நோய் எதிர்ப்புத் தொகுதியை உயர்வாக வைத்திருக்க வேண்டும். இதற்குப் பின்வரும் இயற்கை வழிகள் உள்ளன.

### சீனியையும் போசாக்கில்லா உணவுகளையும் தவிர்த்தல்

வெள்ளைச் சீனியை சாப்பிட்டால், தொற்று ஏற்படும் போது வெண்குருதிக் கலங்களைச் செயலிழக்கச் செய்து தடுத்து விடும். 25 தேக்கரண்டி சீனியானது வெண்குருதிக் கலங்களில் 92%மானவற்றை 5 மணித்தியாலம் செயலிழக்கச் செய்து விடும். ஒரு சராசரி அமெரிக்கர் 42 தேக்கரண்டி சீனியை உட்கொள்கிறார். உதாரணமாக 12 அவுன்ஸ் கோக் பானத்தில் 8 - 10 தேக்கரண்டியும், ஒரு துண்டு வெள்ளைப் பாணில் 2 தேக்கரண்டி சீனியும் உள்ளது. சீனியும் போசாக்கில்லா உணவுகளும் உடலின் நோய் எதிர்ப்புத் தொகுதியின் செயற்பாட்டில் தடைகளை ஏற்படுத்தும்.

### கூடிய கொழுப்புணவுகளைத் தவிர்க்கவும்

சுத்திகரிக்கப்பட்ட கொழுப்புணவு புற்றுநோய் ஏற்படுவதை அதிகரிப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது. முலைப் புற்றுநோய், கூடியளவு சுத்திகரிக்கப்பட்ட கொழுப்புணவுகளையும், விலங்குக் கொழுப்புணவுகளையும் உட்கொள்ளும் பெண்களில் பெருமளவு ஏற்படுவதாக அறியப்படுகிறது. கொழுப்புக் குறைவான உணவு முலைப் புற்று நோயைத் தடுப்பதுடன் அது ஏற்பட்டவர்கள் தப்பிப்பிழைப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

### உணவுகளைப் பச்சையாக உண்ணுதல்

இதைப் பின்பற்றுவது கடினமாக இருக்கும். எனினும் இது முக்கியமானது. புற்று நோயைத் தணிப்பதற்கு பழங்கள், மரக்கறிகள், விதைகள், முளைக்கும் விதைகள் ஆகியவற்றைப் பச்சையாகச் சாப்பிட வேண்டும். சமைத்த உணவு எதுவும் சாப்பிடக் கூடாது. ஆனால் இவ்வாறு செய்வது இரசாயனச் சிகிச்சையைக் காட்டிலும் சிறந்தது. இச்சிகிச்சையினால் தலைமுடி உதிர்வது, வாந்தி, தளர்ச்சி ஆகியன ஏற்படும். மேலும் இச்சிகிச்சையினால் நோய் எதிர்ப்புத் தொகுதி விருத்தி அடையாது. பச்சை உணவு உயிர்ப்புள்ள அதிக போசாக்குள்ள உணவாகும். இது அதிகளவு விற்றமின்கள், கனிப்பொருட்கள், நொதியங்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். சமைத்த உணவு இறந்த உணவு ஆகும். இதில் ஏதாவது விதையைப் போட்டால் முளைக்கும். விதையைச் சமைத்த பின் அவ்விதையை விதைத்தால் முளைக்காது. ஏனெனில் அதன் உயிர்ச்சக்தி அழிக்கப்பட்டு விட்டது. புற்றுநோய்க் கலங்களை சமைத்த உணவுச் சூழலில் வைத்தால் அவை பெருகும். ஆனால் பச்சை உணவுச் சூழலில் வைத்தால் அவை மறைந்து விடும். இந்த அதிசய தகவல் புற்று நோய்ச் சங்கத்துக்குத் தெரியும். ஆனால் இது பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.

### பச்சை உணவுகளால் ஏற்படும் நன்மைகள்

- புற்றுநோய் எதிர்ப்புச் சக்தியைத் தூண்டும்.
- மன அழுத்தத்தைக் குறிப்பாக நாட்பட்ட மன அழுத்தத்தைக் நீக்கும்.
- நச்சுத் தன்மையை நீக்க உதவும்.
- உடலுக்குத் தேவையான விற்றமின்கள், கனிப்பொருள்கள், நொதியங்கள் ஆகியவற்றைத் தரும்.
- அமில காரச் சமநிலைக்கு உதவும்.

**சில பச்சை உணவு செய்முறைகள்**

### 1. பச்சை சூப்

2 கோப்பை நீர் 2-3 தக்காளி
1 வெங்காயம் உப்பு
6 தேக்கரண்டி பார்சிலிக் கீரை
2 முதல் 4 தேக்கரண்டி செலறி இவற்றை மிக்சியில் போட்டு அரைத்துப் பருகவும்.

### 2. வாதுமை (Almond) பால்

இரவு வாதுமைப் பருப்பை நீரில் ஊற வைக்கவும். பின்னர் இதை அரைத்தெடுக்கவும். உங்கள் விருப்பத்திற்கேற்ப நீரைச் சேர்த்துக் காலையில் குடிக்கவும்.

### 3. சலாதுப் பச்சடி (Salad)

1/4 அவகடோ (Avaocoda)
½ கோப்பை நீர் உப்பு
1 தேக்கரண்டி நன்கு நறுக்கிய வெங்காயம்,
4 -6 வெட்டிய பார்சிலிக் கீரை, ½ கோப்பை நறுக்கிய தக்காளி, அவகாடோ, நீர், உப்பு, பார்சிலி ஆகியவற்றைக் கலக்கவும். பின்னர் நறுக்கிய வெங்காயத்தையும் தக்காளியையும் சேர்த்துக் கொள்ளவும்.

### 4. பழச்சாறு

ஸ்ரோபெறி அல்லது விருப்பமான பழத்தையும் 1/4 தேக்கரண்டி வனிலா, பச்சை வாதுமைப் பால் 3 தேக்கரண்டி தேன் (விரும்பினால்) ஆகியவற்றை மிக்சியில் அரைத்துப் பருகவும்.

### முளைக்கும் விதைகள்

இவை மிகவும் போசாக்குள்ளவை. இவற்றில் போதிய விற்றமின்கள், நொதியங்கள், கனிப்பொருள்கள் உள்ளன. பச்சைப்பயறு, கடலை ஆகியவற்றை ஊறவைத்து முளைத்த பின் தயிர், வெங்காயம் உப்புப் போட்டுச் சம்பல் செய்து சாப்பிடலாம். ஒரு பச்சைமிளகாயையும் சேர்த்துக்கொள்ளலாம்.

### கோதுமைப் புல் சாறு

இது புற்று நோய்க்குச் சிறந்தது. ஒரு அகன்ற பாத்திரத்தில் கோதுமை விதையைப் போட்டு நீர் ஊற்றவும். சில நாட்களில் புல்போன்று முளைக்கும். புல்லை வெட்டிக் கழுவிய பின் நீர் சேர்த்து மிக்சியில் அரைக்கவும். இது குடிக்க இனிக்கும். வெட்டிய புல் மீண்டும் முளைத்த பின் வெட்டி அரைத்துக் குடிக்கவும். இதன் பின்னர் புதிய விதைகள் போட்டு முளைத்த பின் பாவிக்கவும். மிகவும் ஆரோக்கியமான பானமிது.

(தொடரும்)





நீங்கள் கட்டாயம் வைத்திருக்க வேண்டிய அலைவரிசைகள
நீங்கள் தவற விடக்கூடாத அரிய சலுகை
அடிப்படைத் தொலைக்காட்சி அலைவரிசைகளை
$21.29[1] இற்குப் பெறுங்கள்.
/மாதாந்தம்
2 வருட உடன்படிக்கையுடன்
மாதாந்தம் கட்டணங்கள் மற்றும் SD பெட்டி வாடகை உட்பட
கீழே காணப்படும் பொதிகளையோ அல்லது அலைவரிசைகளையோ நீங்கள் பெறும்பொழுது
உங்கள் அடிப்படைத் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு
2 வருங்களுக்கும் மேல் $455[2] ஐச் சேமியுங்கள்.
தமிழ
tamil one
$15.17/மாதாந்தம்*
tvi
Tamil Vision Int.
$19.74/மாதாந்தம்*
VIJAY
$10.10/மாதாந்தம்*
SUN TV
$15.17/மாதாந்தம்*
JAYA TV
$15.17/மாதாந்தம்*
அல்லது $30.45/மாதாந்தம் தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பொதிக்கு*
கிரிக்கெட்
CBN
Commonwealth Broadcasting Network
ATN
CRICKET PLUS
ஒவ்வொரு அலைவரிசைக்கும $15.17/மாதாந்தம்*† அல்லது ஒருங்கிணைந்த பொதிக்கு $20.25/மாதாந்தம்*
*மாதாந்தக் கட்டணங்கள் அனைத்தும் உட்பட
†அல்லது $5.08/மாதாந்தம் ATN இல் நீங்கள் பெறும் ஒவ்வொரு அலைவரிசைக்கும்
Rogers டிஜிட்டல் அடிப்படைவு ஏ வாடிக்கையாளரான நீங்கள் மகிழ்ச்சியுடன் பார்த்து மகிழுங்கள்:
• 170 இற்கும் மேற்பட்ட டிஜிட்டல் அலைவரிசைகள், செய்திகள் விளையாட்டு, இசை மற்றும் பல
• Rogers On Demand இற்குச் செல்லும் வசதி (அலைவரிசை 100) அத்துடன் Rogers On Demand Online (RogersOnDemand.com)[3]
• வருடம் முழுவதும் பல்கலாச்சார அலைவரிசைகளின் முன்னோட்டங்கள்
இன்றே ROGERS இற்கு மாறுங்கள் உங்கள் பணத்தைச் சேமியுங்கள். அழையுங்கள் 1 855 824-1439
ROGERS™
Offers available to new TV customers for a limited time and subject to change without notice. Basic Cable and Digital/HD Box required to receive Digital/HD programming. Channel availability may vary by region. 1 Includes monthly Digital Service Fee of $2.99 and, where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1.5% of the recurring TV monthly service fee. Taxes extra. Regular monthly rates apply after promotional period. 2-year term required for Digital TV. Early Cancellation Fee applies. Monthly service fee varies by channel subscription. 2 Savings based on $18.99 per month off Digital Basic regular monthly service fee of $32.49 for two years. 3 Rogers On Demand Online only available in Canada with an Internet connection. Charges apply to some On Demand programming content. © 2011

# சிநேகா - பிரசன்னா டும்டும்டும்!

அந்த மங்களச் செய்தியை சென்றவாரம் நடிகர் பிரசன்னா வெளியிட்ட போது தமிழ் திரை ரசிகர்கள் மட்டுமல்ல தமிழ் பத்திரிகையாளர்களும் அதிர்ச்சிக்குள்ளானார்கள்தான். எப்படித்தான் பொத்தி பொத்தி பாதுகாத்தாலும் சினிமா பிரபலங்களின் காதலை கண்டுபிடித்து வெளியே கொண்டு வந்துவிடுவதில் கில்லாடிகள் அவர்கள். உறுதியாக இல்லையென்றால் கிசுகிசுக் களாகவாவது கசிய வைத்துவிடுவார்கள். அவர்கள் கண்ணை மறைத்து இரண்டு வருடமாக காதலித்து வந்துள்ளார்கள் சிநேகா - பிரசன்னா காதல் ஜோடி! இக்காலங்களில் பிரசன்னாவை வேறு ஒருவருடன் சேர்த்து கிசுகிசுக்கள் வெளியானதுதான் இதில் சுவாரஸ்யம்! தமிழ் ரசிகர்களுக்கு நிச்சயம் இது ஒரு அதிர்ச்சிதான். அவர்களது கனவுக் கன்னி களில் ஒருவர் விடைபெறுகிறார்.

ஆம், திருமணத்துக்குப் பிறகு புன்னகை இளவரசி சிநேகா நடிக்கப் போவதில்லை என்கிறார்கள்.

"எங்கள் காதலுக்கு இருவரின் பெற்றோரும் சம்மதித்து விட்டனர். விரைவில் நிச்சயதார்த்தம் நடக்கவிருக்கிறது" என்று நடிகர் பிரசன்னா அதிகாரபூர்வமாக அறிவித்து விட்டார். அவர் அளித்த பேட்டியில், "எனக்கும் சிநேகாவிற்கும் ஆரம்பத்தில் தொழில் ரீதியான பழக்கமே இருந்து வந்தது. பின்னாளில் அவரது எளிமை என்னை மிகவும் கவர செய்தது. அவர் பெரிய நடிகை யாக இருந்தாலும் அனைவரிடமும் சகஜமாக பழகுவார். அவருடன் வாழ்வில் ஒன்று சேர வேண்டும் என்று விரும்பினேன். அது மட்டுமன்றி நாங்கள் மூன்றரை வருடங்களாக எந்த ஒரு பிரச்சினையும் இன்றி நன்றாக பழகி புரிந்துகொண்டோம். இருவரும் சேர்ந்து திருமணம் செய்துகொள்ள இரு வீட்டாரிடமும் சம்மதம் பெற்று இதை அறிவித்தோம்" என்று கூறியுள்ளார். பிரசன்னா பேட்டியில் மிக முக்கியமான செய்தி, பிரசன்னாவின் குடும்பத்தினர் சிநேகா திருமணத்திற்கு பிறகு நடிக்க கூடாது என்று கேட்டுள்ளனர், அதற்கு சினேகாவும் சம்மதம் தெரிவித்துள்ளார் என்பதுதான். தமிழ் திரை ரசிகர்களுக்கு இந்த செய்தி கவலைக் குரியதுதான். ஏனெனில், சிநேகா ஒரு கவர்ச்சி நடிகை மட்டுமல்ல. நல்ல ஒரு 'கேரக்டர் ஆர்ட்டிஸ்ட்'டும் கூட. சூர்யா - ஜோதிகா திருமணத்தால் ஜோதிகா நடிப்பில் இருந்து விடைபெற்றது போல், சிநேகா விடைபெறப் போகிறார்.

'5 ஸ்டார்' படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானவர் பிரசன்னா. 'ரகசியமாய்', 'அழகியதீயே' உட்பட பல படங்களில் நடித்துள்ளவர். இயக்குநர் மிஸ்கினின் 'அஞ்சாதே' படத்தில் வில்லனாக நடித்து அனைவர் மனதையும் கவர்ந்தவர். குறிப்பாக, சமீபத்தில் வெளியான 'முரண்' படத்தில் இவரது வில்லன் நடிப்பு மிகவும் பேசப்பட்டது.

"விரைவில் திருமண தேதியை அறிவிப்போம்" எனக் கூறியுள்ளார் பிரசன்னா.

சரி, சிநேகா என்ன சொல்கிறார்.



- சிவதானு -

சிநேகா, தற்பொழுது தமிழகத்தில் இல்லை. எங்கோ வெளிநாட்டில் உள்ளார். அவர் தமிழகம் திரும்பிய பிறகு இருவரும் சேர்ந்துதான் திருமண அறிவிப்பை வெளியிடுவதாக இருந்தார்களாம். ஆனால், அதற்கு முன்பு பி.ஆர்.ஓ.கள் மூலமாக செய்தி கசிந்துவிட்டதால், அவசர அவசரமாக பிரசன்னா பத்திரிகையாளர் களைச் சந்தித்துள்ளார். சமீப காலமாகவே சிநேகா படங்கள் எதுவும் ஒப்புக்கொள்ளாமல் இருந்து வந்தார். அதற்குக் காரணம் பிரசன்னா வீட்டு நிர்ப்பந்தங்கள்தானாம். ஏன் சிநேகா படங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்பதையும் சமீபத்தில் நடைபெற்ற ஆங்கிலப் பட பிரிமியர் காட்சி உட்பட சில நிகழ்ச்சிகளுக்கு இருவருமே ஒன்றாக வந்து சென்றதையும் வைத்து, சிநேகா - பிரசன்னா காதலிக்கிறார்கள் என்ற தகவல்கள் முதலில் வெளிவந்தது. அதனை இருவரும் மறுத்தனர். "சினிமா போதும், போராடித்துவிட்டது என எப்போது எனக்குள் குரல் கேட்கிறதோ அப்போது, வேறு தளத்துக்கு மாறிக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் இப்போதைக்கு அப்படி எந்த எண்ணமும் இல்லை.

இன்னும் பல படங்கள் நடிக்க வேண்டியுள்ளது. அதன் பிறகுதான் திருமணம்" என்று அப்பொழுது கூறினார் சிநேகா. ஏனெனில், அப்பொழுது பிரசன்னா வீட்டில் கொஞ்சம் கோபமாகத்தான் இருந்திருக்கிறார்கள். நடிகை மனைவியாக வேண்டாம் என்று கூறி, அதில் உறுதியாக இருந்திருக்கிறார்கள். ஆனால், சிநேகா - பிரசன்னா இருவருமே தங்களது காதலிலும் உறுதியாக இருந்திருக்கிறார்கள். எப்படியும் அவர்களை சம்மதிக்கச் செய்து, திருமணத்தை அறிவிக்கலாம் என்று திட்டமிட்டுள்ளார்கள். கடைசியில், திருமணத்துக்குப் பிறகு நடிப்பதில்லை என்று சிநேகா சொன்ன பிறகுதான் பிரசன்னா பெற்றோர்கள் காதலர்களுக்கு பச்சைக் கொடி காட்டியிருக்கிறார்கள்.

இவர்கள் காதலுக்குப் பிள்ளையார் சுழி போட்டவர், 'அச்சமுண்டு அச்சமுண்டு' இயக்குனர் அருண் வைத்தியநாதன். இவர்கள் ஜோடிப் பொருத்தம் அழகாக இருக்கும் என்ற இவரது எண்ணத்தை ரசிகர்கள் மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட ஜோடியும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இந்த திருமணம் குறித்து அருண் வைத்தியநாதன் என்ன சொல்கிறார். "ஒரு இளம் சாப்ட்வேர் இன்ஜினியர் கதாபாத்திரத்திற்கு பிரசன்னா சரியாக பொருந்துவார் என்று தோன்றியது. அதுபோல் ஒரு குடும்பப்பாங்கான, தனக்கு மனைவியாக வரப் போகிறவள் இப்படிதான் இருக்கணும் என்று நினைக்கும் அளவிற்கு அழகான ஒரு பெண் தேவைப்பட்டாள். அப்போது எனக்கு உடனே கண்முன் வந்து நின்றது நடிகை சிநேகாதான். ஆகவே, இருவரையும் தேர்வு செய்தேன். அதற்கும் மேல் இரு கதாபாத்திரங்களுமே நுணுக்கமாக உணர்வுகளை பிரதிபலிக்க வேண்டிய நிலை இருந்தது. அதனாலும் என் சாய்ஸாக அவர்கள் இருந்தார்கள். ஒரு விஷயம் சொன்னால் உங்களுக்கு நம்ப முடியாமல் இருக்கும்.

தொடர்ச்சி 40ஆம் பக்கம்

CELEBRATE THIS CHRISTAMAS



Celebrate this Christamas
with our cakes.
Call to order After 4.00 pm
Contact: 647.344.7215

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

# மாவீரர் தினம்

கார்த்திகை மாதம் 27 ஆம் நாள், தமிழீழ விடுதலைப் போரில், தமது மிகப் பெறுமதியான உயிரை நீத்தவருக்காக நினைவு கொண்டாடும் நாள். சிங்கள ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து எங்கள் ஈழத்தை மீட்பதற்கு ஈழத் தமிழர்களுக்காக ஒரு நாட்டை அமைப்பதற்கு, அவர்கள்



விடுத்த உயிர், சிந்திய இரத்தம் கோடிக் கணக்கானது. எங்கள் மக்கள், எங்கள் உறவினர்களை இலச்சம் இலச்சமாக கொன்று குவித்தார்கள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள். ஒவ்வொரு வீட்டிலும் இருந்து ஓர் இளைஞர் என தலைவர் படை திரட்டி போர்களத்தில் நின்றார். சிறுத்தைப் புலி போல் பாய்ந்தார்கள், தாக்கினார்கள். விடுதலைப் புலிகளை சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் நேர்மையாக வெல்ல முடியவில்லை. ஆதலால் எந்த மனிதனும் செய்யத் தகாத முறையில் எம்மவரைக் கொன்று விட்டு.. தாங்கள் வென்றதாகக் கூறிக் கொண்டிருக்கின்றார்கள். எமது மாவீரர் தமது குடும்பங்களை விட்டு, உறவுகளை விட்டு, ஈழம் மீட்பதற்கு தமது இன்னுயிர்களையே விட்டுக்கொடுத்தார்களே! எத்தனை உயிர்கள்.... அந்த மாவீரருக்காக, அவர்கள் கனவை நனவாக்க. மாவீரர் கனவு சிதறிய தமிழர்கள் ஒன்றுபடுவது. அவர்களை நினைவு கூர நாம் ஒற்றுமையாக சேர்ந்து அணிதிரண்டு நிற்போம்! நாம் மாவீரர் நாள் 2011 க்குச் சென்று எம்முள் எழுச்சித் தீயை மூட்டி. ஒன்றுபட்டு எழுவோம். எங்கள் நிலம் எமக்கு வேண்டும். அது கிடைக்கும் வரை நாம் ஓய மாட்டோம்.



**திவ்யா பிரபாகரன்**
அகவை 11


## LAW OFFICE
### STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com





*மினி விளம்பரம்*

## *Walmart* புள்ளி விபரம்

- கனடாவில் உள்ள எண்ணிக்கை : 329
- அமெரிக்காவில் உள்ள எண்ணிக்கை : 4400
- சீனாவில் உள்ள எண்ணிக்கை : 346
- உலகளாவிய வோல்மாட் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2 மில்லியன் (2000,000).
- வருடாந்த வருமானம்: $400 மில்லியன்.


# Merlyn's

Restaurant • Banquet Halls
LLBO licensed

All Day Breakfast • Lunch • Dinner
WESTERN, EASTERN & FUSION CUISINE
INCLUDING MALAYSIAN, HAKKA CHINESE & THAI

A taste for everyone

Catering & Take-out
Indian, Sri Lankan, Chinese & Western

Merlyn's cater to any location in Mississauga, Brampton, Vaughan and Markham. Please contact us for more information.

We can arrange a venue that will be conveinent for you, and cater from 10 to 1000 people.

Merlyn's banquet hall has seating for up to 200 people. It is a unique setting for corporate events, weddings, birthday parties, anniversaries, Christmas parties and other social gatherings.

5284 Highway 7 East Markham
416 918 6453 / 905 479 4337
sales@merlynstasteofworld.com
www.merlynstasteofworld.com

# BASEMENT RENT

**BIRCHMOUNT & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, washroom. Hardwood floor. Close to Scarborough Grace Hospital. Rent $700. Avail. December 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.393.5300

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, school, mall. Avail. December 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.718.5466

**MAJOR MACKENZIE & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to YRT, mall. Avail. December 01, 2011. Single mother or Seniors preferred.
தொடர்புகளுக்கு: 416.856.6197

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.473.7482

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
647.210.4292 / 416.267.0072

**FINCH & TAPSCOTT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.726.4186

**WARDEN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, complete washroom & kitchen. Close to all facilities. Avail. immediately.
416.444.9326 / 416.294.1012

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.417.5059

**14TH AVE. & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. No pets & No smoking. Avail. immediately. Rooms தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.833.8691

**DONMILLS & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, mall, DVP. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.425.1149 (Week days after 6:00 pm/Weekends Anytime / Leave the Message)

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Couples preferred.
தொடர்புகளுக்கு: 905.471.5994

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**MARKHAM & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.271.6657

**NEILSON & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking. Close to TTC, hospital, shops. Avail. immediately.
416.724.8265 / 416.732.4207

**KINGSTON & MORNINGSIDE**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, washer, dryer, parking. Close to TTC, school, shopping. Avail. immediately. No pets. Rent negotiable.
416.289.9507 / 416.720.9507

**BIRCHMOUNT & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 15, 2011.
416.587.3982 / 416.825.5993

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to tamil stores, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.836.0800

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Sep. entrance, parking, laundry. Close to mall, bus. Avail. immediately.
416.890.8384 / 647.893.1361

**MCCOWAN & MCNICOLL**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all amenities. Single person preferred. Avail. immediately.
416.304.8466 ( Daytime)
416.291.1605 (Evening & Weekends)

**MCCOWAN & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, YRT, high school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.765.0428

**BRIMLEY & STEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus, shopping, school, doctor's office. Avail. December 15, 2011.
தொடர்புகளுக்கு: 905.947.1356

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt. for rent. Sep. entrance. Inclusive all bills. Parking. Close to all facilities. Also can provide separate rooms.
416.439.6080 / 416.906.5331

**MORNINGSIDE & SHEPPARD**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, HWY 401, mall. Avail. immediately.
647.986.4898 / 416.520.5883

**MARKHAM & LAWRENCE**
Bsmt இல் ஒரு அறை washroom உடன் வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. immediately.
416.438.3724 / 416.617.8083

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to YRT, TTC mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.937.0220

**MARKHAM & LAWRENCE**
Bsmt, rooms வாடகைக்கு உண்டு. Kitchen, washroom, sep. entrance, parking, laundry. Close to mall, school. TTC. Excellent condition. Avail. immediately.
416.438.2552 / 647.853.5524

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom or 2 bedroom bsmt for rent. Close to TTC, mall, nofrills, shoppers. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.725.2041

**BRIMLEY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Shared kitchen and washroom, sep.entrance, laundry, parking, hydro and cable included. No smoking. Working single male only. Convenient location. Very clean. Rent $350.
தொடர்புகளுக்கு: 416.268.5014

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to YRT, school, mall. Avail. Anytime.
416.669.8711 / 905.201.8350

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.332.3624 / 647.309.7790

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, TTC, YRT, school, elementary school, mall. Avail. November 01, 2011.
905.471.7667 / 647.338.9831

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

**BELLAMY & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to school, TTC, mall. Couple preferred.Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.285.0849

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 washroom, parking, laundry. Close to TTC, school, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.305.7317

**MEADOWVALE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall.
416.750.9138 / 647.401.9423

**KENNEDY & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
905.944.2420 / 416.459.8204

**NEILSON & FINCH**
Newly renovated 2 bedroom new bsmt for rent. Sep. entrance. Close to school, TTC, malvern mall. All bills inclusive. Avail. immediately. No smoking.
தொடர்புகளுக்கு: 416.843.5982

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, school, stores, temple. Avail. December 01, 2011
தொடர்புகளுக்கு: 416.291.2796

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
647.996.6977/ 416.289.6977

**MIDLAND & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to ttc, school, subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.817.6575

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, shopping, winston churchill. Avail. Anytime.
416.551.4419 / 647.349.0136

**BRIMLEY & HUNTINGWOOD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, school. Avail. December 01, 2011.
416.335.3460 / 647.710.2301

**MARKHAM & STEELES**
**MARYADALE AVE.**
3 Bedroom bsmt for rent. 2 Washrooms, Sep. entrance. Close to bus, shopping, mall, school. Avail. November 20, 2011.
தொடர்புகளுக்கு: 647.828.2709

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. January 01, 2012.
416.720.2171 / 416.298.1872

**WARDEN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. December 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.970.7120

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school & mall. Avail. immediately.
416.439.4561/416.616.2524

**MCCOWAN & STEELES**
Bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
416.825.8083 / 905.948.9449

**MARKHAM & ELSON**
Newly renovated 1 Bedroom walk-out bsmt Apt. for rent. Cable & laundry. All new appliances. Close to YRT, TTC, nofrills, Wal-Mart & doctors. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.201.2904
(Call after 4 p.m & week ends)

**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedroom bsmt for rent. Hall, kitchen. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.267.8907

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

# BASEMENT RENT

**MARKHAM & ELSON**
3 + 1 Bedroom bsmt for rent. 2 parking, sep. entrance. Close to all facilities. Avail. December 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.450.9152

**MCCOWAN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, kitchen, living room. Close to school, hospital, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.7570

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediatelty.
647.783.4850 / 905.294.2674
416.293.6211

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.523.1312

**9th LINE & STEELES**
2 Bedroom bsmt for rent. Cable. Close to school & all facilities. Avail. immediately.
416.903.6111 / 905.209.8780

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Couple or ladies preferred. Close to TTC, YRT, shopping centre, school, etc. Avail. immediately.
416.903.2437 / 647.986.1437

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் அல்லது வயோதிபப் பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

# ROOM RENT

**Middlefield / Denison**
One Room for rent in a 4 bedroom house. Close to TTC, YRT.
Parking and Internet Included.
Meals also available.
Call: (905) 201 9901/(416) 648 1987

**NEILSON & TAPSCOTT**
1 Bedroom for rent. Close to all facilities. Single person, working person or student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.321.8440

**BELLAMY & EGLINTON**
3 Bedroom house for rent. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். Parking. Close to all facilities. Avail. immediately.
416.522.5679 / 416.266.3847

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

# ROOM RENT

**MORNINGSIDE & LAWRENCE**
Bungalow house இன் மேல்மாடியில் அறை ஒன்று சகல வசதிகளுடனும் வாடகைக்கு உள்ளது. பெண்கள் விரும்பத்தக்கது. Close to U OF T, campus, TTC. Avail. immediately.
சாப்பாடு வழங்கப்படும்.
647.344.5044 / 416.312.6827

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**BIRCHMOUNT & MCNICOLL**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

**DANFORTH & EGLINTON**
Upper level 2 bedrooms for rent. Close to all facilities. Avail. immediately.
Each room rent $450.
தொடர்புகளுக்கு: 647.216.7326

# CONDO. FOR RENT

**NEILSON & SHEPPARD**
2 + Den. condo. for rent. 2 Washrooms. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

# PRIVATE SALE

## HOUSE FOR SALE BY OWNER

**SHEPPARD & ROUGH RIVER (MORNINGSIDE)**
Detached 3 + 1 bedroom house for sale. 2½ Washrooms, hardwood floor, pot lights, crown moldings, Stainless appliances.
416.284.4317 / 416.931.6079
No brokers please.

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் நல்லூர் செட்டித்தெருவில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.431.6106

# SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

# HOUSE FOR RENT

**MCCOWAN & 16TH AVE.**
4 Bedroom house for rent. Close to all facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.565.0261

**MARKHAM & SHEPPARD** சந்திப்புக்கு அருகாமையில் New 3 bedroom town house for rent. Close to school, mall, HWY 401, etc. Avail. January 01, 2012.
தொடர்புகளுக்கு: 647.897.6421

**ORTON PARK & ELLESMERE**
3 Bedroom main for rent. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.388.2219

**MCCOWAN & STEELES**
**MIDDLEFIELD**
4 Bedrooms house + 2 bedrooms bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.718.1934

**MCCOWAN & LAWRENCE**
3 Bedrooms house + 1 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. Anytime.
416.724.4752 / 416.902.1758

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms town house for rent. Close to all facilities. Avail. January 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.300.7595
647.996.6977 / 416.289.6977

**MARKHAM & ELLESMERE**
3 Bedroom house for rent. Parking. Close to TTC, high school, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.710.9526

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom house for rent. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.439.1507 / 647.774.5667

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent.
8 Hours work avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.857.8548

# SPACE FOR RENT

**ELLESMERE & BRIMLEY**
சந்திப்புக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் bsmt இல் சங்கீத, வயலின் போன்ற வகுப்புக்கள் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.
416.752.8142 / 647.987.2991

# மணமகள் தேவை

யாழ். காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் கொழும்பில் வாழ்ந்துவரும் உயர்குலத்தைச் சேர்ந்த 1980 இல் பிறந்த செவ்வாய் குற்றமற்ற கொழும்பில் பல்கலைக்கழக கல்லூரியில் Diploma பட்டம் பெற்ற Video Graphic Designer இருக்கும் மணமகனுக்கு கனடாவில் இருக்கும் மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.588.2535

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், Computer Engineering முடித்து Toronto வில் வேலை பார்க்கும், 1976 இல் பிறந்த இந்து மதத்தையுடைய விவாகரத்தான மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.318.9466

# JOB JOB JOB

## பராமரிப்பாளர் தேவை

மார்க்கம் பகுதியில் வசிக்கும் வயதான பெண்மணியை பராமரிக்க பெண் ஒருவர் தேவை. 9:00 - 3:00 மணி வரை.
தொடர்புகளுக்கு: 416.894.2236

தாய் உணவகத்திற்கு (Thai Restaurant) ஒன்றிற்கு அனுபவமுள்ள Cook தேவை
தொடர்புகளுக்கு: 647.501.1085

**Pro Personnel Hiring AZ City Drivers**
Must have 2 years of driving experience.
Local Work, Paid weekly.
905.676.2778 / 416.892.9291

**MIDLAND & LAWRENCE**
Flooring stone experience sale person in scarborough.
தொடர்புகளுக்கு: 416.830.3932

**Restaurant Delivery driver wanted**
**Downtown**
**416.889.3191 / 647.771.6237**

# RESTAURANT FOR SALE

**BAR & GRILL**
**BATHURST & HWY 7**
Long lease for 4 years. 10 Years option. 125 Seats.
Contact: 416.556.9287

# RESTAURANT FOR SALE

**IN AJAX**
நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Restaurant ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.795.4457
(Leave Message)

# VAN FOR SALE

1994 Nissan quest 360,0000km.
Price $1000.
1997 Nissan quest 250, 000km.
Price $1500
தொடர்புகளுக்கு: 647.996.6977

# VAN FOR SALE

Honda odyssey van for sale. 2000 year. New shocks, tire. Certified emission test free. 210000 km. Price $4500.
416.269.7052 / 416.358.7265

# இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும்.
Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

மேலும் பக்கங்கள் 24, 26



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 288

(1) $f(g(x)) = g(f(x))$ $\quad 3(x^2 + 2x - 3) + 5 = (3x + 5)^2 + 2(3x + 5) - 3$

$3x^2 + 6x - 9 + 5 = 9x^2 + 30x + 25 + 6x + 10 - 3$

$6x^2 + 30x + 36 = 0$ $\quad x^2 + 5x + 6 = 0$

$(x + 3)(x + 2) = 0$ $\quad x = -3, x = -2$

(2) $y = x^4$ $dy/dx = 4x^3$ $\quad -1/16 = 4x^3$

Normal line has a slope of 16 $\quad dy/dx = -1/16$

$x^3 = -1/64$ $\quad x = -1/4$

$y = -1/256$

$y = x^4$ has a normal line with a slope of 16 at $(-1/4, 1/256)$

(3) Let $f(x) = 3x^3 - 4x^2 + 4x - 1$ Since $f(1/3) = 0$ $(3x - 1)$ in a factor of $f(x)$

$3x^3 - 4x^2 + 4x - 1 = (3x - 1)(x^2 - x + 1) = 0$

$x = 1/3, x = 1 \pm \sqrt{1 - 4}/2 = 1 \pm -3/2$

roots are $(1/3 + 1/2 + \sqrt{3}/2^2), (1/2 - \sqrt{3}/2^2)$

(4) To find the points of intersection of the line and the parabola we solve.

$x^2 + 9x + 9 = 3x$ $\quad x^2 + 6x + 9 = 0$

$(x + 3)^2 = 0$ $\quad x = -3$

Since we have a double root at $x = -3$ the line $y = 3x$ is tangent to the parabola $y = x^2 + 9x + 9$. Hence the slope of the tangent at the point of intersection is 3.

(5) $d = 1m$ $\quad h = 15m$ $\quad dr/dt = .003m/\text{annum}$

$dh/dt = 0.04m$ / annum $\quad$ Find $dr/dt$ at the instant $d=1$

$V = \pi r^2 h$ $\quad dr/dt = (2\pi r\, dr/dt)\, h + (dh/dt)\pi r^2$

At a specific time when $D = 1$, ie $r = 0.5$

$dv/dt = 2\pi (0.5)(0.003)(15) + 0.4\pi (0.5)^2$

$0.045\pi + 0.1 = 0.145\pi$

volume of trunk increasing at a rate of $0.145\ \pi m^3$/annum.

### Tutorial 289 Questions

(1) If the 3rd difference in a polynomical function is - 72. What is the value of the leading coefficient? (For Gr. 12)

(2) Determine the equation of the polynomical function that has
a root at 3/2 — an x intercept at - 2
a zero to the 2nd order x x = 4 — Y intercept in 24 (For Gr. 12)

(3) Algebraically determine if the graph of $f(x) = 3x^4 - 2x^2 + 1$ has and symmetry. If a symmetry exists, describe the symmetry? (For Gr. 12)

(4) Two cyclists depart at the same time from a starting point along routes making an angle of $\pi/3$ radians with each other. The first is travelling at 15km/h while the second is moving at 20km/h. How fast are the two cyclist moving apart after 2 hours? (For Gr. 12)

(5) An infant typed three strokes on a key board. If all of the characters typed were letters of the alphabet, what is the probability that the characters that were struck were three consecutive letters in alphabetical order? (For Gr. 12)

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at **Scarborough & Stouffville**

**Contact: 647.340.9490 / 647.831.0363**

HOUSE & LAND SALE
JAFFNA

Location: 2nd Cross Street, Jaffna

2½ பரப்பு காணி கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு. 2 ½ Parappu Land including the house and the well. 5 Min. Walk to Subramaniyam Park, Courts, Jaffna Public Library, Central College, Vembadi Girls High School etc. 15 Min. Walk to Jaffa Hospital , Town. Closer to A9 (Kandy - Jaffna) Highway

**Contact : 416-580-0606**

விஷேட ஆங்கில வகுப்பு

ஆங்கிலம் நன்றாக பேச, வாசிக்க எழுத விரும்புகிறீர்களா? உங்களிற்கு வசதியான நேரத்தில் நீங்கள் கற்கலாம். இலகுவாகவும், விரைவாகவும் கற்கலாம்.

தொடர்புகளுக்கு: 416.269.5942

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

BUY, SELL or LEASE

Dinesh Jeganathan
Sales Representative



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HomeLife Higher Standards

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

மேலும் பக்கங்கள் 24, 25

# புறாவுக்கு தசையை அளித்த சிபிச் சக்கரவர்த்தி

முன்னொருகாலத்தில் சக்கரவர்த்தி ஒருவர் முனிவர்களைச் சந்தித்துவிட்டு வரும்போது களைப்பால் வனத்தில் இருக்கும் ஒரு மரத்தடியில் அமர்ந்து இருக்கையில் அம்புபட்ட புறா ஒன்று அவர் காலடியில் விழுந்தது. அதற்குப் பின்னால் வேடன் ஒருவன் வந்தான்.



வேடன் சக்கரவர்த்தியிடம், "எனக்கு உங்களுடைய காலடியில் இருக்கும் புறா வேண்டும். அதை நான் தான் அம்பினால் அடித்தேன். அது தப்பி இங்கு உங்கள் காலடியில் விழுந்து இருக்கிறது," என்று கேட்டான்.

சக்கரவர்த்தியும், "ஏன் இந்தப்புறா உனக்கு வேண்டும்?" என்று வேடனைக் கேட்டார்.

வேடன், " இரவு உணவாக உண்ணத்தான். நான் இன்றைக்கு மட்டும் அல்ல, இரண்டு மூன்று நாட்களாக ஒன்றுமே வேட்டையாட முடியவும் இல்லை. என்னுடைய பசியை அடக்க இந்த புறா தான் என்னுடைய உணவு," என்று பதில் கூறினான்.

சக்கரவர்த்தி இந்த புறாவை என்னால் பலி கொடுக்க முடியவில்லை. அதோ என் காலடியில் அம்பு பட்டுத் தவிக்கிறது. ஆனால் இந்த வேடனும் பசியால் வாடுகிறான். நான் என்ன செய்ய வேண்டும்? என்று நினைத்தார்.

சில நேரத்திற்கு பின்னர் சக்கரவர்த்தி தன்னுடைய துடையின் தசையை வெட்டி புறாவின் நிறைக்கு அளவாகக் கொடுத்தார். இதோ, என் தசையை உணவாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று தசையை வேடனிடம் அளித்தார். பின்னர், புறாவின் காயத்திற்கு பச்சிலை மருந்திட்டு அனுப்பி விட்டார். இச்சக்கரவர்த்தி புறாவிற்காக தன் தசையை அளித்த சிபிச்சக்கரவர்த்தி என்று இன்றும் போற்றப்படுகிறார்.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.**



ஞா. ஆரணி
அகவை 13


## TUTORING
**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
**Grade 5 - 12**. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: **416.669.3101**

## COMPUTER REPAIR
- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

## JOB JOB JOB
**SCARBOROUGH வில் வேலைவாய்ப்பு**
தமிழில் நன்றாக தொலைபேசியில் உரையாடக்கூடியவர்கள் தேவை. மணித்தியால சம்பளத்துடன் Bonus உம் சேர்த்து வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: **416.576.0050**

## அழகான வீடு வேண்டுமா?
உங்கள் வீடு அழகிய முறையில் திருத்தித் தரவேண்டுமா?
வீட்டு வரைபடமும் செய்து தரப்படும்.
*• Flooring • Painting • Inter Locking*
*• Hardwood flooring • Kitchen Work*
அழையுங்கள் - **Selva: 647.706.1313**

## Tradeworld Realty Inc. Brokerage
*Hing Mak (Sales Representative)*
*APT FOR SALE*
*KENNEDY & HWY 401*
*2 Bedroom apt. for sale. Dining & Living room.*
*900 sq.ft. Asking Price $129,000.*
சகல வசதிகளும் உள்ளது. *Close to TTC, school.*
**416.977.6617 / 647.287.8829**

## OFFICE SPACE FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
Real Estate, Mortgage, Insurance offices போன்றவையும் Show Room உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ***Including High-speed Internet, Electricity, Heating, Water.***
**Pl. Call: Murale - 416.569.4065**

## GTA UNITS FOR LEASE
2 Main floor adjacent units facing the entrance. High traffic area with plenty of parking space. Suitable for stores / shops / offices.
தொடர்புகளுக்கு: Perrii: 416.473.6100

# இன்னொரு... ஆச்சி வீடு

பாகம் - 3
பகுதி 28

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

'எனக்கு ஒரு கோப்பித் தண்ணியிலை போடு தம்பி' ஒரு பெரியவர் சொன்னார். 'ஓ செல்வத்தார், நீர் ரீ குடிக்கிறேல்லை எல்லோ . மறந்திடடேன்' சீலு மாமா மணியன் புதியவன் என்ற சங்கடம் அவர்களிடம் இப்ப இருந்ததாகத் தெரியவில்லை. மணியன் தான் யார் எனக் கூறினான்., அவர்கள் கேட்டுக் கொண்டதற்காக. ஆனால் ஏன் வந்தவன் என்ற விபரத்தை மட்டும் கூறவில்லை. சும்மா விடுமுறையில் வந்ததாகக் கூறினான். 'என்ன தம்பி விடுமுறைக்கு இந்த இடம்தான் உனக்குக் கிடைச்சதே' என்று ஒருவர் கேட்க, 'இப்ப அவ்வளவு பிரச்சினையள் இல்லைத்தானே' எனக் கூறிச் சமாளித்தான் மணியன். அவர்களுடன் பொதுப்படையாகக் கதைத்துக் கொண்டு இருந்தவன், இடையிடையே வான் பரப்புப் பற்றியும் புதிய வித்தியாசமான ஏதாவது விடயம் ஊரில் நடந்ததா எனவும் கேட்கையில்தான் அந்த விசித்திரமான சம்பவத்தை ஒருவர் கூறினார்.

**◊ சி.வி. நாதன் ◊**

'இரண்டு கிழமைக்கு முந்தி ஒரு வித்தியாசமான சம்பவம் நடந்தது. நான் ஒருவருக்கும் சொல்லேல்லை. எனக்கு விசர் எண்டு சொல்லிப் போடுவினம். ஆனாலும் இப்ப தம்பியும் இருக்கேக்கை சொல்லுறேன்' என்றார் அந்த முதியவர். கிட்டத்தட்ட 70 அல்லது 75 வயதிருக்கும், அவருக்கு. 'இரண்டு விசர்ப் பொடியள் எங்கடை ஊருக்குள்ளை திரிஞ்சது உங்களுக்குத் தெரியும்தானே: என மற்றவர்களைப் பார்த்துக் கூறியவர் தொடர்ந்தார். 'அவங்கள் அண்டைக்கு என்னட்டைக் கேட்டதுதான் அவங்களை முழுவிசருகள் எண்டு காட்டினது. ஒருத்தனுக்கு 25 வயசுதான் இருக்கும். மற்றவனுக்கும் 40 அல்லது 45 வயசுக்குக் கிட்டவாய்தான் இருக்கும். அண்டைக்கு பன்னிரண்டு மணியிருக்கும், ஆமி ரவுண்டப்புக்குப் பிறகு நான்தான் ஆலமரத்தடியிலை தனிய இருந்தனான். சீலுவும் அப்ப கடை திறக்கேல்லை. அவங்கள் இரண்டு பேரும் வந்தாங்கள். எப்பிடி ஆமிக்காரருக்குள்ளாலை அந்த விசருகள் தப்பிச்சுதுகளோ தெரியேல்லை., என்னோடை வந்து கதைச்சுக் கொண்டு நிண்டாங்கள். அப்பதான் அதிலை ஒருவன் என்னைக் கேட்டான், நீங்கள் 'வேலு அண்ணைதானே! உங்களுக்கு தெரிஞ்சிருக்கும் இப்ப நாயகமவை எங்கை எண்டு சொல்லுங்கோ. நாங்கள் அவையைத் தேடித்தான் வந்தனாங்கள்' என்டான். அதுக்கு நான் அவையள் எப்பவோ கனடாவுக்குப் போயிட்டினம். இப்ப அவை-யெல்லாம் கனடாவிலைதான். நாயகத்தாற்ரை பொடியன் இனியன் இப்ப கனடாவிலை நல்லாய் இருக்கிறானாம். நீலகண்டர் சொன்ன மாதிரித்தான் எல்லாம் அவைக்கு நடந்தது, இப்பவும் நடக்குது போலை எண்டு சொல்லிப் போட்டு அவங்களைக் கேட்டேன் தம்பியவை நீங்கள் ஆரெண்டு எனக்குத் தெரியேல்லை எண்டேன். அதுக்கு என்ன சொன்னாங்கள் தெரியுமே!' ஒரு கணம் நிறுத்தியவர் பின்னர் தொடர்ந்தார், 'ஒருத்தரை ஒருத்தர் திரும்பிப் பாத்திட்டு ஒருத்தன் சொன்னான், அண்ணை நான்தான் நாகராசன். இவர்தான் இனியனோடை ஒட்டிப் பிறந்த இன்பன்.' வேலு அண்ணை மீண்டும் கொஞ்சநேரம் கூறுவதை நிறுத்திவிட்டு எல்லோரையும் பார்த்தார். 'என்ன வேலண்ணை பகிடி விடுகிறியள். இப்ப அம்பது அறுவது வருசத்துக்கு முன்னாலை செத்துப் போன இன்பனையும் நாகராசனையும் 25 வயசுப் பொடியளாய் கண்டனான் எண்டால் எப்பிடி நம்பறது' இன்னொரு முதியவர் கூற, 'அதுதானே முன்னமே சொன்னனான்தானே விசர் பொ-டியள் எண்டு, மறந்து போயிட்டிளே. எங்கையோ, எப்பிடியோ நாயகம் குடும்பத்தின்ரை இந்தக் கதையளைக் கேட்டிட்டு என்னோடை பகிடி விட்டிருக்க வேணும். இல்லாட்டி முழு விசருகளாய்தான் இருக்குங்கள் எண்டு நினைச்சேன் எண்டாலும் எனக்கு முதலிலை கோவமாய்த்தான் வந்தது, என்னோடை சேட்டை விடுறாங்களோ பொடியள் எண்டு. பிறகு பாத்தேன், அக்கம் பக்கம் ஒருத்ரும் இல்லை. ஆக்களும் நல்ல வாட்டசாட்டமாய் இருந்தாங்கள். ஏன் வீண் சோலியை எண்டு போட்டு, ஒரு மாதிரி கதைச்சுச் சமாளிச்சு அனுப்பிப் போட்டேன்.'

மணியனுக்கு அது புதுக்கதை. விபரமாகக் கேட்க, ஐம்பது, அறுபது வருடங்களுக்கு முன்னர் அந்த ஊரில் நடந்த ஒட்டிப் பிறந்த பிள்ளைகளைப் பற்றியும், நீலகண்ட கணிகர் பற்றியும், ஒப்பரேசன் பற்றியும், ஆச்சிவீடு எரிந்த கதையையும் அதிலை இன்பனும் நாகராசனும் எரிந்து போனதையும் விபரமாக் மணியனுக்குக் கூறினார்கள். கடைக்கு வெளியே வடக்குப் பக்கமாய் காட்டி, 'உதிலைதான் அவையளின்ரை வீடு. இப்ப ஆரோ காங்கேசன்துறையார் வந்து அந்த வீட்டிலை இருக்கினம்.' என்ற சீலு மாமா, ஆலமரங்களுக்குப் பின்னால் இருந்த கட்டிடத்தைக் காட்டி, 'உந்தப் பள்ளிக் கூடத்திலைதான் படிச்சவை. இப்ப கனடாவ-ிலை இருக்கிறான் இனியன், அவன் என்னோடைதான் படிச்சவன்' என்றார். 'இந்தக் கடையை அப்ப சீலுவின்ரை தேப்பன் கந்தையா அம்மான் வச்சிருந்தவர்.' கடைக்கு வெளியிலை இருந்த ஆலமரத்தின் வேரைக் காட்டி, 'உந்த வேரிலை இருந்து கொண்டுதான் அந்தப் பொடியன் ராசு, தேத்தண்ணியையும் குடிச்சுக் கொண்டு பொத்தகங்கள் வாசிக்கிறன். இப்ப போலை கிடக்கு' கடைக்கு நிழல் தந்து கொண்டிருந்த ஆலமரத்தைக் காட்டி, வேலுப் பெரியவர் கூறினார். இவ்விடயம் பற்றி பெர-ியதாக எதனையும் மணியன் எடுக்கவில்லை. ஆனாலும் தங்களது அறிக்கையில் இந்த விடயத்தையும் மூவரும் நாசாவிற்குத் தெரிவிக்க அது நாசாவின் கரிசனைக்கு எடுக்கப்பட்டு, கனடாவின் அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட, அதனால்தான் இனியனின் வீட்டில் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. - இன்னமும் வரும்


SABESAN DENTURE CLINIC
பல் கட்டும் துறையில் விசேட நிபுணர்

We Specialized in..........
Full Dentures
Immediate Dentures
Partial Dentures
Implant Retained Dentures
Mouth Guards
Anti-snoring Devices
Repair of Broken Dentures
Relining for Loose Dentures
Soft Liners
Teeth Whitening





தனிப் பல்லாகவோ, ஒருசில பற்களாகவோ, அல்லது முழுப்பல் செட் ஆகவோ இருப்பினும் சகலவகை செயற்கைப் பற்களும் உங்களுக்கேற்ப செய்துதரப்படும்.
உங்கள் தற்போதய பற்களின் குறைபாடுகளை சீர்செய்யவும் உடைந்தபற்களை ஒட்டவும் எம்மை அழைக்கவும்.

சபேசன் தங்கத்துரை BDS (SRI LANKA) DD (CANADA)
Denture Specialist

இலங்கையில் பலவருடங்களாக DENTAL SURGEONஆக கடமையாற்றியவர்

416 854 9152

எமது Label உடனுக்குடனும், நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்ட பற்கள்.
அவசரதேவை உள்ளவர்களுக்கு ஒரே நாளிலும் பற்கள் கொடுக்கப்படும்.
சமூகநல நிதி உட்பட சகல காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.718.3909

வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# இலங்கை...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையில் ஆரம்பகாலம் தொட்டே அக்கறை செலுத்தி வந்ததாகக் காட்டிக் கொள்கின்ற இந்தியா அந்தப் பிரச்சினைக்கு, அரசியல் ரீதியான தீர்வு காண்பதில் ஆக்க பூர்வமாக செயற்படத் தவறியிருக்கின்றது என்ற உண்மை நோர்வேயின் அமைதிக்கான அடமானங்கள் என்ற அறிக்கையின் மூலமாக உறுதியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏனெனில் இலங்கையில் ஓர் ஆயுதப் போராட்டம் உருவாகுவதற்குரிய ஆயுதப் பயிற்சிகளைத் தமிழ் இளைஞர்களுக்கு வழங்கிய இந்தியா அவர்களை பல்வேறு ஆயுதக்குழுக்களாக வளர்த்திருந்தது. அந்த ஆயுதப் போராட்டத்திற்கு எதிராக இலங்கை அரசு கடுமையான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டபோது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு நிவாரணம் தருவதாகக் கூறி இலங்கைக்குள் கால் பதித்து தமிழ் மக்களுக்காக இலங்கை அரசாங்கத்துடன் தான் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்கவே இல்லை. மாறாக பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஏற்பட்டிருந்த குறைபாடுகளை நீக்குமாறு கோரிய விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு தமிழ் மக்களையே அது கொன்று குவித்தது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வந்த இந்திய அரசு இதன் மூலம் பிரச்சினையை அதிகப்படுத்தியது. அதனைத் தொடர்ந்தே இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி கொல்லப்பட்டதும், அதற்குப் பின்னர் இலங்கையின் இனப்பிரச்சினையில் பல பரிமாணங்கள் ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஆறு மாதங்களில் இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்த நோர்வே ஆறு வருடங்களான பின்னும் அதில் வெற்றிகாண முடியாமல் போய்விட்டது. எனினும் இராணுவத் தீர்வின் மூலம் பயங்கரவாதத்தை வெற்றி கொண்டதாகப் பாராட்டப்படுகின்ற இலங்கை அரசு இலங்கையின் முரண்பாட்டிற்கு மூலகாரணமாகிய இனப் பிரச்சினைக்கு அரசு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கின்றது. அதனை இலங்கை அரசு செய்யுமா என்பதை இப்போதைக்குக் கூற முடியாத நிலைமையே காணப்படுகின்றது.



பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
'அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீயேன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான்' என்றான்.

- கவிஞர் கண்ணதாசன்


மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி
ஜோதிடம்
பண்டித் மகேந்திரன் சுவாமிகள்





ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி
ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்





மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித்
அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நலுவவிடாதீர்கள்
அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும்
பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்
100% உங்கள் பிரச்சினைகளுக்கு
தீர்வு

உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.
மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.

Office
Tel: 647-919-5846
Home

5210 Finch Ave. East Unit # 1
Scarborough, ON M1S 4S4
(Inside of Golden Bakery)
Beside the Meenadchi Temble

100 Winggaraden # 1713
Scarborough, ON. M1B 2P4
(Neilson & Finch)
Close Intersection

# கண்ணதாசன் நினைவுகள் - 3

## கவிஞருக்கு விருப்பமான மூன்று!

### சென்ற இதழ் தொடர்ச்சி...

“நல்லா படிக்கணும். அனேகமாக உங்கள் அப்பா உங்களுக்கு விட்டுட்டுப் போகப்போறது இந்தப் படிப்பு மட்டுமாகத்தான் இருக்கும்” என்று அன்று காமராஜர் சொன்னது மிகச் சரியாக இருந்தது. அப்பா காலமானபோது கடனில் அவரது சொத்துக்கள் கரைந்துவிட்டன. ஆனால், எல்லா குழந்தைகளும் நன்றாகப் படித்திருந்தோம். மூன்று பேர் டாக்டர்கள், ஒருவன் இன்ஜினீயர், நான் வக்கீல், ஒருவன் படத்தயாரிப்பாளர். அப்பாவுடைய சொத்து என்று இன்று என்னிடம் வாசலில் நிற்கும் எம்.டி.ஜி. 140 அம்பாஸிடர் கார் மட்டும்தான் இருக்கிறது. அந்த காரும்கூட காமராஜர் கொடுத்ததுதான்.

1967 சட்டமன்றத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் தோற்றதும் காமராஜர் மிகவும் நொடிந்து போய்விட்டார். “இந்த மக்களுக்காக நான் நிறைய செய்ய வேண்டும் என்றிருந்தேன். ஆனால், இப்படி என்னை முடக்கிப்போட்டு விட்டார்களே” என்று நண்பர்களிடமெல்லாம் சொன்னார். எனவே, 1967ஆம் ஆண்டு கடைசியில் வந்த நாகர்கோவில் நாடாளுமன்ற தொகுதி இடைத்தேர்தலில் காமராஜரை நிறுத்த காங்கிரஸ் ஆட்சி கமிட்டி முடிவு செய்தது. ஆனால், காமராஜர் சம்மதிக்கவில்லை. விண்ணப்பிக்கவோ, வாக்கு சேகரிக்கவோ வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். அவர் வராவிட்டாலும் பரவாயில்லை, நிற்க சம்மதித்தால் போதும் என்று ஆகிவிட்டது. அவரைச் சம்மதிக்கச் செய்து, ஜெயிக்க வைக்கும் பொறுப்பை அன்று அவருடன் நெருக்கமாக இருந்த இரண்டு



இலக்கியவாதிகள் எடுத்துக்கொண்டார்கள். ஒருவர் அப்பா, மற்றொருவர் ஜெயகாந்தன். காங்கிரஸ் இவர்களை ஏற்றுக்கொண்டது. இருவருக்கும் உதவியாக அப்பா என்னை அழைத்துக்கொண்டார்.

நாங்கள் காங்கிரஸ் கட்சி எடுத்துத் தந்த விமான டிக்கெட்டுடன் நாகர்கோவில் போனோம். அங்கு நாங்கள் தொகுதியை சுற்றிவர திருச்சி காங்கிரஸ் கட்சிக்காரர் ஒருவர் அவருடைய அம்பாஸிடர் காரை அனுப்பித் தந்தார். அந்த காரில்தான் நாங்கள் தேர்தல் வேலைகளைப் பார்த்தோம். கடைசி வரைக்கும் காமராஜர் தொகுதிப் பக்கமே வரவில்லை. ஆனாலும், காமராஜர் அமோக வெற்றி பெற்றார். சில தினங்கள் சென்று காங்கிரஸ் கட்சி அலுவலகத்திலிருந்து வருகிறோம் என்று சொல்லிக் கொண்டு வந்த சிலர் கட்சி உங்களுக்கு இதைத் தரச் சொல்லியது என்று கார் சாவியை அப்பாவிடம் தந்தார்கள். அந்த கார், தேர்தல் வேலைக்காக நாங்கள் உபயோகப்படுத்திய எம்.டி.ஜி. 140 அம்பாஸிடர். திருச்சி கட்சிக்காரரிடமிருந்து விலைக்கு வாங்கி அப்பாவுக்கு அன்பளிப்பாக கட்சி கொடுத்தனுப்பியது. ஆனாலும், “காமராஜர் கொடுத்த கார்” என்றுதான் அப்பா சொல்லுவார்.

எம்.டி.ஜி. 140 அம்பாஸிடர் காரைத்தான் அப்பா நீண்ட நாட்கள் உபயோகித்து வந்தார். எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்ததும் அரசவைக் கவிஞர் பதவியை அப்பாவுக்குக் கொடுத்தார். ரூபாய் 1000 சன்மானமும் ஒரு காரையும் அரசாங்கம் கொடுத்தது. அதன்பிறகு, அந்த காரை அப்பா பயன்படுத்தத் தொடங்கினார். நாங்கள் எம்.டி.ஜி. 140ஐ பயன்படுத்தினோம்.

**சந்திப்பு: தளவாய் சுந்தரம்**

முதலில் அரசவைக் கவிஞர் பதவியை ஏற்க அப்பா மறுத்து விட்டார். வற்புறுத்தித்தான் அந்தப் பதவியை அவரை ஏற்கச் செய்ய வேண்டியிருந்தது. அன்று எனக்கு பெண் பார்ப்பதற்காக காரைக்குடி போய்விட்டு, அப்படியே புதுக்கோட்டை, திருச்சி என்று ஒரு சுற்று போய் நண்பர்கள் அனைவரையும் பார்த்துவிட்டு வரலாம் என்று திருச்சியில் தங்கியிருந்தோம். திருச்சியிலிருந்து வீட்டுக்கு

தொடர்ச்சி 40ஆம் பக்கம்


# RAJAH AUTO COLLISION

**(மீண்டும் பழைய ராஜா)**

5 Years experience in France & 24 Years experience in Scarborough & Montreal

- Body Work + Mechanical
- Custom Modification, Painting
- Frame straiting
- Accident + Insurance Claim
- Collision Repair
- Clear coat Refinishing
- Auto Glass services



வாகனம் வாங்குவதற்கும், விற்பதற்கும் நீங்கள் புதிய அடிபட்ட வாகனங்களை திருத்திக்கொள்ளவும் குறைந்த செலவில் சிறந்த முறையில் திருத்திக் கொள்வதற்கு நம்பிக்கை, நாணயம் உத்தரவாதம்.

**அழையுங்கள்: ஆனந்தன் / ராஜா**

**416.432.0090**

# Yumutra, Sut, Bal - முட்டை, பால், தேன்

## துருக்கிய முவ்வியல் திரைப்படங்கள்

மூன்று தொடர் பகுதிகளை (Trilogy) சில வருடங்களுக்கு முன்பாக தீபா மேத்தா 'நெருப்பு, தண்ணீர், பூமி' (Fire, Water, Earth) என்ற பெயரில் இயக்கியிருந்தார். அதற்கு முன்பாக சத்யஜித்ரே கல்கத்தா துன்பியலை Pratidwandi (The Adversary) (1971) Seemabaddha (Company Limited) (1971) Jana Aranya (The Middleman) (1976) என வெளியிட்டிருந்தார். மற்றொரு இந்திய சர்வதேச இயக்குனர் மிருணாள் சென் இன்ரவியு (1971), கல்கத்தா 71 (1971) Padatik (கொரில்லா போராளி) (1973) ஆகிய படங்களை கல்கத்தா துன்பியலாக வெளிப்படுத்தினார். இவ் முவ்வியல் இரண்டையும் கல்கத்தா துன்பியல் என்றே கூறுவார்கள். மணிரத்தினம் றோஜா, பொம்பாய், தில்சே ஆகிய படங்களை வெளியிட்டார். இவை அரசியல் முவ்வியல் படங்கள் என சர்வதேச விமர்சகர்களால் கூறப்படுகின்றது. மாதுர் பண்டாக்கர் என்ற மற்றொரு இந்திய இயக்குனர் மூன்றாம் பக்கம், கோப்பிரேட், ரபிக் சிக்னல் என்ற முவ்வியல் படங்களை இயக்கியிருந்தார். இவற்றை மூன்றாம் பக்க முவ்வியல் படங்கள் என்பார்கள். றோகிட் செட்டி இயக்கி கோல்மால் முவ்வியல் படங்கள் வெளிவந்துள்ளன.

**- ரதன் -**

முவ்வியலில் உள்ள மூன்று படைப்புக்களும் ஏதோ ஒரு வகையில் ஒன்றுக்கு ஒன்று தொடர்பான படைப்புக்கள் என்பதே சரியான கருத்து. பொதுவாக இவ்வாறான படைப்புக்கள் துன்பத்தை மையமாகக் கொண்டிருப்பதனால் இப்படைப்புக்களை துன்பியல் படைப்புக்கள் எனக் கூறுவதும் உண்டு. இப்படைப்புக்கள் பண்டைய கிரேக்க காலத்திலேயே நாடகங்களாக மேடையேற்றப்பட்டுள்ளன. பண்டைய இந்தியாவிலும் இவ்வாறான நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. போல் ஒஸ்ரர் (Paul Auster) என்ற நாவலாசிரியர் மூன்று நாவல்களை வெளியிட்டுள்ளார். இதுவும் இவ்வகையைச் சேர்ந்தவையே. City of Glass (1985), Ghosts (1986) and The Locked Room (1986) இதனை நியுயோர்க் Trilogy என்பார்கள். மலையாளத்தில் சித்திக்-லால் இரட்டையர்கள் இயக்கி வெளிவந்துள்ள ஹரிகர் நகர், ஹரிகர் நகர் 2, பிசாசு வீடு ஆகிய படங்களும் இவ்வகையைச் சேர்ந்தவையே. சத்தியன் அந்திக்காட் இயக்கத்தில் வெளியாகியுள்ள நாடோடிக்காற்று, பட்டினப் பிரவேசம், அக்கரே அக்கரே அக்கரே படங்களும் இப்பட்டியலில் இடம் பெறுகின்றது. சிலர் ரஜினி காந்தின் படையப்பா, அண்ணாமலை, பாட்சா ஆகிய படங்களையும் இவ் வரிசையில் இணைப்பர். இப்படங்களை பார்க்கவில்லையாதலால் தகவலாகவே இங்கு கூறமுடியும்.

பல நூற்றுக்கு மேற்பட்ட திரைப்படங்கள் இவ்வகையில் வெளிவந்துள்ளன.

- The Lord of the Rings

1. The Lord of the Rings: The Fellowship of the Ring (2001)
2. The Lord of the Rings: The Two Towers (2002)
3. The Lord of the Rings: The Return of the King (2003)

மேற்குறிப்பிட்ட அதே பெயரில் J. R. R. Tolkien எழுதிய மூன்று நூல்களே படமாக்கப்பட்டுள்ளன. பீற்றர் ஜக்சன் இப்படங்களை இயக்கியுள்ளார். 1907ல் தாய் என்ற பிரபலமான நாவலை எழுதிய மக்சிம் கோர்க்கியின் நாவல்களை மையமாக வைத்து மூன்று படங்கள் வெளிவந்துள்ளன. Detstvo Gorkogo (1938), V lyudyakh (1939), Moi universitety (1940). ஜப்பானிய சாமுராய் கதைகளை ஐம்பதுகளில் Hiroshi Inagakiம், 2000களில் Yoji Yamada ம் முப்படங்களாக வெளியிட்டுள்ளனர். Mario Puzo மாபியாவைப் பற்றி எழுதிய நாவலை Francis Ford Coppola. இயக்கி வெளியான மூன்று படங்கள் The God Father, I and II ஆகிய



பெயரில் வெளியாகி பிரபலமானவை. மார்லன் பிரான்டோ இதில் முதல் இரண்டு படங்களில் நடித்திருந்தார். Mad Max, Matrix, Missing in Action, The Lion King, Star Wars, The Step Father, La Casa, The Delta Force போன்ற பல பெயர்களில் இவ் முப் படங்கள் வெளிவந்துள்ளன.

2. துருக்கிய இயக்குனர் Semih Kaplanoglu ன் Yumutra (முட்டை), Sut (பால்), Bal (தேன்) ஆகிய மூன்று படங்களை இயக்கியுள்ளார். துருக்கிய பல்கலைக்கழகத்தில் திரைப் படத்துறையில் பட்டப்படிப்பை கற்றார். பின்னர் ஆரம்ப நாட்களில் விளம்பரப் படங்களில் கடமையாற்றிருந்தார். உதவி ஒளிப்பதிவாளராக பல விருதுகளைப் பெற்ற படங்களில் கடமைபுரிந்திருந்தார். அதன் பின்னர் இதுவரை இவர் இயக்கிய ஐந்து படங்களும் சர்வதேச திரைப்பட விழாக்களில் பல விருதுகளைப் பெற்றவை.

### *Yumutra* (முட்டை) 2007

கவிஞர் யுசுப் ஒரு பழைய புத்தகக் கடையை துருக்கியின் தலைநகரான இஸ்ரன்புலில் நடத்திவருகின்றார். ஒரு நாள் இரவு இவர் கடையை மூடும் நேரத்தில் இவருக்கு ஒரு தொலைபேசி வருகின்றது. இவரை உடனடியாக இவரது கிராமமான ரயருக்கு (Tire) வருமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது. அன்றிரவு தனது காரில் வீட்டுக்கு திரும்பும் அவருக்கு ஒரு அதிர்ச்சியான செய்தி கிடைக்கின்றது. அவரது தாய் இறந்துவிட்டார் என்பதே. இவரது தாயுடன் இளம் பெண் அய்லா கடந்த ஐந்து வருடங்களாக வாழ்ந்து வருகின்றார் என்பதும் இவருக்கு அப்போதுதான் தெரியவருகின்றது. ஈமச் சடங்குகள் முடிந்து ஒரு சில நாட்களில் இஸ்ரன்புல் திரும்புவதாக உள்ளார். இவர் இஸ்ரன்புல் செல்வதற்கு முந்தைய இரவு அய்லா, தாய் சகிரா ஒரு நேர்த்திக் கடன் வைத்துள்ளார். அதனை செய்து முடித்து விட்டு செல்லுமாறு கேட்கின்றார். அய்லாவும் யுசுப்பும் நேர்த்திக் கடன் செய்வதற்காக ஒரு சில மணிநேரப் பயணத்தில் உள்ள நகரத்துக்கு செல்கின்றனர். ஆடு ஒன்றை பலி கொடுத்தலே இந்த நேர்த்திக்கடன். எமது வேள்வி போன்றது. பனிமூட்டம் காரணமாக அன்றிரவு இவர்கள் ஒரு விடுதியில் தங்க நேரிடுகின்றது. வெட்டப்பட்ட ஆடு யுசுப்பிடம் கதைப்பதாக யுசுப் எண்ணுகின்றார். அதே சமயம் அய்லாவிற்கும் யுசுப்பிற்கும் இடையில் ஒரு நெருக்கம் ஏற்படுகின்றது. மறு நாள் யுசுப் அய்லாவை விட்டு விட்டு இஸ்ரன்புல் திரும்புகின்றார். ஆனால் இடையில் மீண்டும் திரும்பி இவரது கிராமத்திற்கே திரும்பிவிடுகின்றார். வெளியில் சென்ற அய்லா வீடு திரும்பிய பொழுது யுசுப் பாண் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றார். அய்லா அவருக்கு தேநீர் கொடுத்து காலை உணவும் கொடுக்கின்றார்.

### *Sut* (பால்) 2008

யுசுப் பாடசாலைக் கல்வியை முடித்து விட்டு தனது தாய் சகிராவிற்கு உதவிகள் செய்கின்றார். சகிரா ஒரு விதவை. பால் வியாபாரம் செய்து வருகின்றார். யுசுப்பைப் பொறுத்தவரை இது ஒரு தற்காலிக வேலையே. யுசுபின் நோக்கமெல்லாம் ஒரு கவிஞனாக வரவேண்டும் என்பதே. யுசுப் தனது தாய் அங்குள்ள புகையிரத நிலைய அதிபருடன் பழகுவதை காண்கின்றார். யுசுப்பின் தாய் அப்படி ஒன்றும் வயதானவரல்ல. இளம் தாய். கணவனை இழந்த பின் தனது ஒரே ஒரு மகன் யுசுப்பை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார். யுசுப்பை இராணுவத்தில் சேருமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது. சிறுவயதில் ஏற்பட்ட சுகயீனத்தை காரணம் காட்டி இராணுவத்தில் சேரவில்லை. யுசுப் ஒரு புத்தகக் கடையில் ஒரு இலக்கியவாதி பெண்ணுடன் சந்திப்பு ஏற்பட்டு நட்பாக மாறுகின்றது. தாயினதும் யுசுப்பினதும் உறவுகள் அடுத்த கட்டத்தை நோக்கி நகராமால் தொடர்கின்றன. யுசுப் தனது இளைய பருவத்தில் இருந்து அடுத்த பருவத்தை நோக்கி நகர்ந்து கொண்டு செல்கின்றார்.

### *Bal* (தேன்) 2010

யுசுப் ஏழு வயது சிறுவன். இவன் அப்பொழுது தான் பாடசாலைக்கு செல்ல ஆரம்பித்துள்ளான். இரண்டாம் வகுப்பாயிருக்க வேண்டும். இவனுக்கும் தந்தைக்கும் நெருக்கம் அதிகம். தந்தை செய்பவற்றை பார்த்துக் கொண்டிருப்பான். தந்தை தேன் சேகரித்து வியாபாரம் செய்பவர். யுசுப் அமைதியான சிறுவன். அவ்வப்போது சிறு குறும்புகளும் செய்யத் தவறுவதில்லை. தந்தையிடமே பாடங்களை வாசித்து காட்டுவான். ஒரு நாள் தந்தை தேன் சேகரிக்க சென்றார். ஆனால் திரும்பவில்லை. தாய் பலரிடம் விசாரித்து பார்க்கின்றார். பலர் கண்டதாக கூறுகின்றார்கள். ஒரு சில நாட்களின் பின்னர் தந்தை இறந்து விட்ட செய்தி கிடைக்கின்றது. யுசுப் தந்தையை தேடி தேன் சேகரிக்கச் செல்லும் அடர்ந்த மரங்கள் நிறைந்த பகுதிக்குள் செல்கின்றான். களைப்பில் ஒரு மரத்தின் கீழ் நித்திரை கொள்கின்றான்.

3. இந்த முவ்வியல் படங்களும் யுசுப் என்ற மனிதனின் மூன்று பருவங்களை பிரதிபலிக்கின்றன. படங்கள் யுசுப்பின் மனித பருவம், இளைஞன், சிறுவன் என பின்னோக்கி பயணிக்கின்றன. முதலாவதில் யுசுப்பிற்கும் அய்லாவிற்குமான உறவு, தாயின் மரணத்தின் பின்னரான நிகழ்வுகள் பதிவு செய்யப்படுகின்றன. இரண்டாவதில் தாயுக்கும் மகனுக்குமான உறவு பதிவு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது தந்தைக்கும் மகனுக்குமான நெருக்கம் வெளிப்படுத்தப்படு கின்றது. படத்தின் பெயர்களும் தொழில் சார்ந்து சூட்டப்பட்டுள்ளன. தந்தை என்பவர் ஒரு உழைப்பாளி. தேனும் அதே போன்றது. பால் இயற்கையாய் பெறப்படுவது போல் தாயும் தாய்மையடைந்தவுடன் செயற்படுகின்றார். இயற்கையாகவே பல விடயங்களை செய்கின்றார். முட்டை என்பது ஒரு புதிய உறவுக்கான கரு. இங்கும் யுசுப்பிற்கு அய்லாவினுடான உறவு ஆரம்பமாகின்றது.

துருக்கிய கிராமங்கள் அண்மைக் காலங்களில் பல மாற்றங்களைப் பெற்றுள்ளன. சமூக, பொருளாதார, கலாச்சார மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்களை யுசுப் என்ற பாத்திரம் எவ்வாறு செயற்படுத்துகின்றது என்பதை இயக்குனர் ஆய்வு செய்கின்றார். இன்னமும் கிராமங்களில் ஆண்கள் தான்

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

# இரத்த சோகையும் (Jaundice) அதனை தடை செய்யும் வழியும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

இந்த சோகைத்தன்மை நிலையை மஞ்சள் காமாளை எனவும் கூறுவர். நமது சப்த தாதுக்களினால் ஆன உடம்பில் இரத்த இன்மையால் சோகை (Jaundice) நிலை ஏற்படலாம். இந்நிலை ஏற்படாது பாதுகாத்துக் கொள்வது எம்மைப் பொறுத்ததாகும்.

சில வியாதிகள் எம்மைப் பீடித்துக் கொள்வதினாலும் ஏற்பட இடம் உண்டு. தகுந்த போசாக்கு இன்மையாலும் நிகழலாம். குடும்பவறுமைகாரணமாக வருவதற்கு இடம் உண்டு.

விபத்தினால் அடிகாயம் ஏற்பட்டு அதிக இரத்தம் வெளியேறி உடன் சிகிச்சை பெறத் தவறுமிடத்து வர இடம் உண்டு. பெண்களுக்கு மாதாந்தம் வரும் மாதவிலக்கில் அதிக இரத்தம் வெளியேறு வதினாலும், பிள்ளைபேறுகாலத்தில் அதிக இரத்தம் வெளியேறுவதினாலும் சோகை நிலை ஏற்படலாம்.

வயிற்றுளவு, வயிற்றுப்புண், மூலவியாதி உள்ளோருக்கும் இரத்தம் வெளியேறி சோகை நிலை தென்படலாம். நமது இரத்தத்தில் உள்ள செஞ்சீவ அணுக் (R.B.C) குறைபாடு இருந்தாலும் சோகை



நிலை ஏற்படலாம். அத்துடன் கிருமித் தொற்று, நச்சுத்தன்மையுள்ள தகாத பொருட்கள், உட்சென்று கலங்களைத் தாக்கி சோகை நிலை வருவதற்கு இடம் உண்டு.

இந்நிலை ஏற்பட்டவர்களை நாம் இலகுவில் கண்டுகொள்ள முடியும். அவரை நாம் உற்று நோக்கும் போது இயற்கையான உடல் நிறம் மாறுபட்டு வெளியேறியதுடன் தென்படும். பெலவீனம், களைப்பு, இளைப்பு, சோம்பல் தன்மை, வாயின் உதட்டுப்பகுதி, நாக்கு வெளிறிவெண்மையாகவும் வாயின் இரு ஓரங்கள் ஓரளவு அவியல் கொண்டதாகவும் இருக்கும் மார்புப்பகுதி படபடப்புடன் தென்படும். கண் இணைப்பு வரட்சியுடன் நிறம் மங்கிய தன்மையுடன் காணமுடியும்.

ஆனால் அதிக இரத்த சோகை ஏற்பட்டால் முகம் அதைத்து இயற்கைக்கு மாறாக கை, கால்பகுதி வீக்கத்துடன் காணப்படுவதை அவதானிக்க முடியும். இருதயத்தைப் பரிசோதித்துப் பார்த்தால் செயல்திறன் குன்றிக்காணப்படும். நடையில் இளைப்பு, களைப்பு தென்படும். மார்புப்பகுதியில் வலிக்குமி தன்மையும் நிகழ இடமுண்டு. இப்படியான நிலைமைகள் ஏற்படும் போது உரிய வைத்தியர்களிடம் சென்றால் நன்கு பரீட்சித்து தகுந்த சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதுடன் கைக்கொள்ள வேண்டிய ஆலோசனைகளையும் கூறிக் கொள்வர்.

இந்த சோசை நிலை காணும் இடத்து உரிய மருந்துகளைப் பெறுவதுடன் ஆகாரங்களை கைக்கொள்ளும் முறைக-ளையும் அறிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக இரத்த சோகை ஏற்பட்டவர் பெரும்பாலும் இரும்புச் சத்துள்ள உணவுகளை எடுத்துவருதல் நன்று உ+ம் மீன்வகை ஈரல், இறைச்சி போன்றவையும்


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909


தொடர்ச்சி 39ஆம் பக்கம்




# அவசரத் தாலாட்டு

கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் குழந்தைகள் முறையாக, நன்கு கவனிக்கப்படுவதில்லை, வளர்க்கப்படுவதில்லை என்ற குறையுண்டு. இதனால் குழந்தைகள் - பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்களில் சேர்க்கப்படுகின்றார்கள். தாயன்பு, அனுசரணை கட்டாயமாக தேவைப்படும் இம்மழலைப்பருவத்தில் அது கிடைக்காததினால் அவர்கள் பிற்காலத்தில் சமூகத்திற்கு ஒரு பிரச்சினையாக அமைந்து விடுகின்றார்கள். இளம் குற்றவாளிகளாகவும் மாறிவிடுகின்றார்கள். வாழ்க்கை இயந்திர வாழ்க்கையாக அமைந்து விட்ட நிலையில் இந்நிலை தவிர்க்க முடியாததும் தடுக்க முடியாததுமாகும். இருந்தாலும் பெற்றோர் பிள்ளைகளை கவனிக்கவும், கண்காணிக்கவும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கியே ஆக வேண்டும். கணவனும், மனைவியும் வேலை செய்தால் தான் குடும்பத்தை நடத்த முடியும் என்ற பொருளாதார நிலை நிலவும் போது ஆயாமார்கள், வளர்ப்புத்தாய்மார்கள் இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. தாயன்பிற்கு ஆயாவின் அன்பு நிகராகுமா? இதனால் மேற்குலக நாடுகளில் குடும்பக்கட்டுப்பாடு தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றது. இது பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை உருவாக்கி உள்ளது. அத்துடன் அகதிப் பிரச்சினைக்கும் வழி வகுக்கின்றது. அன்பான, அளவான குடும்பம்தான் நாட்டு நலனுக்கு உகந்தது. அலுவலக வேலைகளால் அவஸ்தைப்படும் அன்னை ஒருத்தியின் அவசரத்தாலாட்டாக அமைந்த பாடல்கள் குழந்தையின் தனிமையையும் குழையும் அன்னையின் உள்ளத்தையும் வெளிக்காட்டுவனவாகும்.

## அவசரத் தாலாட்டு

குலஞ் சிறக்கப் பிறந்தவளே
கொஞ்சு மெழிற் கோமளமே
வேலைக்குப் போகின்றேன்
வெண்ணிலவே கண்ணுறங்கு!

அலுவலகம் விட்டோடி
அம்மா வரும் வரைக்கும்



கேசட்டில் தாலாட்டு
கேட்டபடி கண்ணுறங்கு!

ஒரு மணிக்கு ஒரு பாடல்
ஒலிபரப்பும் வானொலியில்
விளம்பரங்கள் மத்தியிலும்
விழிமூடி நீயுறங்கு!

ஒன்பது மணியானால்
உன் அப்பா சொந்தமில்லை
கடமைக்கு அவர் செல்வார்
கண்மணியே கண்ணுறங்கு!

ஒன்பது முப்பதிற்கு
உன் அம்மா சொந்தமில்லை
விரும்பிடும் பொருள்வாங்க
வேலையென்பாள் கண்ணுறங்கு!

ஆயாவும் தொலைக்காட்சி
அசதியிலே தூங்கிவிட்டால்
உடன் வர யாருமில்லை
உத்தமியே கண்ணுறங்கு!

தூரத்தில் இருந்தாலும்
தூயவளே உன்தொட்டில்
ஓரத்தில் என் நினைவு
உறுதுணையாம் கண்ணுறங்கு!

இருபதாம் நூற்றாண்டில்
என் கருவில் வந்தவளே
இதுதான் கதியென்று
இன்னமுதே கண்ணுறங்கு!

பேருந்தில் நசுங்கிப்
பிதுங்குகின்ற வேளையிலும்
ஆரமுதே உன் நினைவு
அகலாது கண்ணுறங்கு!

கோப்புக்குள் மூழ்கிக்
கொள்ளும் நிலையிலும்
பூப்பூவாய் உனது முகம்
பூரிக்கும் கண்ணுறங்கு!

புட்டிப்பால் நிறையவுண்டு
பொம்மைக்கும் பஞ்சமில்லை
தாய்ப் பாலும் தாயுமின்றி
தங்கமே கண்ணுறங்கு!

தந்தை வந்து கொஞ்சுவதாய்
தாய்மடியில் தூங்குவதாய்
கண்ணான கண்மணியே
கனவு கண்டு நீயுறங்கு!

மாலையிலே ஓடிவந்து
மல்லிகையே உனை அணைத்தால்
சுரக்காத முலையும்
சுரக்கும்மடி கண்ணுறங்கு!

தாலாட்டுப் பாடுதற்கு
தருணம் வரும் போது
சீராட்டும் தாயுள்ளம்
சின்னவளே கண்ணுறங்கு!

தாயென்று காட்டுதற்கும்
தழுவி எடுப்பதற்கும்
ஞாயிற்றுக்கிழமை வரும்
நல்லவளே கண்ணுறங்கு!



நா. க. சிவராமலிங்கம்

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
SECOND CAREER
DIPLOMA PROGRAMS
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks



★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று
உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்
Tuition Fees,Books,Living Expenses,
Day care & Transportation அனைத்தும் இலவசம்
QUICK BOOKS,SIMPLY ACCOUNTING & ACCPAC
Classes By Experienced Instructors
ஆலோசனைகளுக்கு
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

• வாழ்க்கையில் உங்களின் கனவை நனவாக்கவிரும்புவோர் ஆண் / பெண் அல்லது குடும்பமாக இருப்போர்
• Big Income (Huge Money) தேவை என இருப்போர்கள்
• சுதந்திரமாக Team Work ஆக இயங்கி பணம் சம்பாதிக்க விரும்புவோர்கள்.
• நம்பிக்கையுடன் எம்மைத் தொடர்பு கொண்டால் நாம் உதவி செய்ய முடியும். அவர்கள் மட்டுமே நாம் காட்டும் Planஇனால் முன்னேற்றம் காண்பதுடன் Stress இல்லாது ஒரு புதிய வாழ்வை வாழ்வார்கள்.
எங்கே அழையுங்கள் பார்க்கலாம்
416.669.2954 /6 416.352.8655
எங்களிடம் 2 plan உள்ளது. நீங்களே தெரிவு செய்து கொள்ளலாம். நீங்கள் கண்டிப்பாக ஏமாற்றம் அடையமாட்டீர்கள்.

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru BRAND®

எமது புதிய அறிமுகங்கள்




Improted & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

# குவாண்ரம் பிறந்த கதை

# நுண்ணுலகியல் 22

முதலில் ஒளி. இது மின்காந்த அலை என ஏற்கெனவே மக்ஸ்வெல்லினால் காட்டப்பட்டு விட்டது. ஒளி பயணப்படுவதற்கு மின் அதிர்வுகளும், தொடர்ந்து காந்த அதிர்வுகளும் காரணமாகிறது. எனவே இவையிரண்டும் மட்டும் இருந்தால் போதும். இந்த நிலையில் ஈதர் என்பது தேவை யில்லாத ஒன்று என்பது அயன்ஸ்ரைனின் முடிவாக இருந்தது. அதன்படி பேரண்டத்தினை ஈதர் என்ற கண்ணுக்குத் தெரியாத ஊடகம் நிரப்பியுள்ளது என்பது தேவையில்லாதது என்றார். அதனால்தான் மைக்கல்சனும் மோர்லியும் எதிர்பார்த்த ஈதர் காற்றின் விளைவுகள் தோற்றப்படவில்லை. இரண்டாவது முடிவுதான் வில்லங்கமானதாக வும் ஆச்சரியமானதாகவும் இருந்தது. செம்மைப் பொறிமுறையின் தொடர்பு வேகச் சிக்கலைக் கொண்டது. ஒளியானது எந்தவொரு சட்டம் தொடர்பாகவும் இயங்குவதில்லை. அது தனித்துவமானது எப்பவும் ஒரே கதியில்தான் செல்கின்றது. ஏனென்பது இப்போது எங்களுக்குத் தெரியும். ஒளி ஒரு மின்காந்த அலை என்பதனால் ஒளியினைப் பார்க்கும் பொருள் (அல்லது ஒருவர்) எத்திசையில் என்ன கதியில் சென்றாலும், ஒளியின் கதியின் பெறுமானம் மாற்றமடைவதில்லை.

அயன்ஸ்ரைனின் இந்த விளக்கத்தினைக் கேட்ட மாக்வெல் இற்கு பெரிய வியப்பாக இருந்தது. ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. நியூட்டனின் அபிமானியாக இருந்த மாக்ஸ்வெல்லினால் நியூட்டனின் ஈதர் கருத்து தவறானது எனக் காட்டப்பட்டதுடன் தனது மின்காந்த அலைச் சமன்பாட்டுக்குப் பின்னால் அயன்ஸ்ரைன் வைத்த சிறப்புச் சார்புத் தத்துவ விளக்கமும் கொண்டிருந்த உண்மைத் தன்மைகளை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. முதற் கருமேகத்தின் விளைவாக வந்த சிறப்புச் சார்புத் தத்துவத்தின் விந்தையான முடிவுகளையும் இப்பகுதியில் மெதுமையாகப் பார்ப்போம். வெறும் முடிவுகளை மாத்திரம். இயற்பியல் உலகத்திலே பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இம்முடிவுகள் பிரபல கணித மேதைகளின் கணிப்புகளால் சரிபார்க்கப் பட்டவை என்பது மிகவும் முக்கியமானது. முதலாவதாக, அயன்ஸ்ரைனின் உலகப் புகழ் பெற்ற சக்தியிற்கும் சடத்திற்கும் இடையேயான தொடர்பைக் கூறும் எளிய சமன்பாடு. சக்தியை E எனவும், சடத்தின் அளவினை m எனவும், ஒளியின் வேகத்தினை C எனவும் குறிப்பிட்ட அயன்ஸ்ரைனின் சமன்பாடு $E = mC^2$ என்பதாகும். இதனது விளக்கம் என்னவெனில், m திணிவுடைய சடமானது அழிவுறுகையில் பிறப்பிக்கப்படும் சக்தி E யின் அளவு $E = mC^2$ என்கின்ற பெறுமதி என்பதாகும். சக்தி வேறு சடம் வேறு என எண்ணிக் கொண்டிருந்த காலத்தில், இரண்டும் ஒன்றுதான், சக்தியின் உறைந்த நிலைதான் சடம் என விஞ்ஞான விளக்கத்தினை அயன்ஸ்ரைன் கொடுத்திருந்தார்.

அடுத்தது நேரம் பற்றிய உண்மை. பொதுவாகவே நாமெல்லோரும் நேரம் என்பது ஒருமையானது, எதிலுமே தங்கியிராதது என்கின்ற கிருத்திகை கொண்டிருக்கின்றோம். அப்படித்தான் 20ம் நூற்றாண்டின் முன்னர் விஞ்ஞானிகளும் எண்ணிக் கொண்டிருந்தார்கள் ஆனால் அயன்ஸ்ரைனின் சிறப்புச் சார்புத் தத்துவம் என்ன கூறுகின்றது (கணித நிறுவல்களுடன்) என்றால், நேரம் பொருள் வேகத்துடன் தொடர்புடையது என்பதாகும். இதனை எளிமையாக விளங்கப்படுத்துவதெனில், ஒருவர் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் 10 செக்கன்களில் ஓடி முடித்துள்ளார் என ஓட்டப் பந்தயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் எமது கடிகாரம் நேரம் கணித்துள்ளது என்போம். ஆனால் அவ்வோட்டத்தினை ஓடி முடித்தவரின் கடிகாரத்தில் 10 செக்கன்களையும் மிகக்

> உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பேரண்டம் - 98**

குறைவான நேரத்தினையே (எடுத்துக் காட்டாக விளக்கத்திற்கா ஒரு பெறுமானம் ஆக, 9.99999999999991) காட்டும். ஆனால் இச்சிறிய நேர வித்தியாசத்தினை அவரது கடிகாரம் வேறுபடுத்திக் காட்டாது. ஆக, அவரது கடிகாரமும் 10 செக்கன்கள் என்றே வாசிப்பைக் காட்டுவது போலிருக்கும். இந்த விளைவை நேர மெதுமையாக்கல் என்பார்கள். அதாவது வேகமாக ஓடும் போது நேரமானது மெதுவாக நகர்கின்றது. ஒளியின் வேகத்தில் செல்கையில் இந்த வேக மெதுவாக்கல் பெரிய அளவிற் காணப்பட, அந்நிலையில் இந்த வேறுபாடானது பெரிய அளவிற் தெரியும். இம்முடிவானது பரிசோதனை வாயிலாகவும் நிரூபித்துக் காட்டப்பட்டது. இதன் பிரயோகம் இந்நாளின் தொழில்நுட்பவியலில் பெரிதும் பயன்படுகின்றது. ஆனால் அன்றாட எமது வாழ்வியலில் இந்த நேர மெதுமையாக்கல் தெரிவதில்லை. அவ்வளவு சிறிய பெறுமானமாக இருக்கும்.

மூன்றாவதாக, வேகம் அதிகரிக்கும் போது ஓடுகின்ற பொருளின் நீளமானது சிறுக்கின்றது. இதுவும் நேரத்தினைப் போன்றதே. ஒளியின் வேகத்திலோ அல்லது மிகப் பெரிய பெறுமானமுடைய வேகத்திலோ சென்றால்தான் இந்த நீளக் குறுக்கத்தினைக் காணமுடியும். அன்றாட எமது சாதாரண இயக்கங்களில் இதனைக் கண்டுணர முடியாது. இதனை எப்படி விளங்கிக் கொள்ளலாமெனில், 12 அடி நீளமான கார் ஒன்று, ஒளியின் வேகத்தில் போய்க் கொண்டிருந்தால், அது 10 அடி நீளமான தடுப்பினைக் கடந்து செல்கையில் ஒரு கணத்தில் முற்றாகவே தடுப்பினால் மறைக்கப்பட்டு விடும். அதாவது நீளம் கூடியதான பொருள் ஒன்று, ஒளியினது வேகம் போன்று உயர் வேகத்தில் செல்கையில் நீளம் குறைந்த அசையாத பொருளினால் முற்றாகவே மறைக்கப்படக் கூடியதாக இருக்கும். என்ன விந்தையாக இருக்கின்றதா? இயற்பியலின் வளர்ச்சி யானது பல விசித்திரமான முடிவுகளைக் காட்டிக் கொண்டிருக்கின்ற, இன்னொரு விடயத்தினையும் கூறிக் கொண்டு குவாண்ரம் பிறந்த கதைக்குள் வருகின்றேன். நாலா வதாக, பொருட்கள் வேகமாக இயங்குகையில் அவற்றின் பாரம், அதாவது திணிவு அதிகரிக்கின்றது. இதைனயும் அயன்ஸ்ரைன் கணிதச்சமன்பாடுகளின் உதவியுன் காட்டியிருந்தார். மேலே கூறப்பட்ட ஆச்சரியங்கள் எல்லாம் சிறப்புச் சார்புத் தத்துவத்திற்கே உரியது. சில காலத்தின் பின்னராக அயன்ஸ்ரைனே மீண்டும் பொதுச் சார்புத் தத்துவத்தினை உலகிற்கு அறிமுகமாக்கினார். மிகவும் அழகான விஞ்ஞான விளக்கங்களை, பேருலகிலே பொதுச் சார்புத் தத்துவம் வெற்றிகரமாக கொடுத்தது. சார்பியல் குவாண்ரம் உலகினைப் போன்றே மிகவும் அரிய விஞ்ஞான விடயங்களை காட்டி நிற்பதாலும், அது ஒரு தனி இயலாகவும் இருப்பதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். ஆர்வமுள்ளவர்கள் அத்துறை யினைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். கெல்வின் கண்ட தூரதரிசனத்தில் ஒன்று மிகச் சரியாகவே வந்தது. அதேபோல அவரது கூற்றுப்படியே மற்றய கருமேகமும் பெரும் சலசலப்பையும், பெரிய பெரிய மாற்றங்களையும் தந்தது. அதனைத்தான் குவாண்ரத்தில் பார்க்கப் போகின்றோம். அவ்விரண்டுமே நியூட்டனின் செம்மைப் பௌதீகத்தினை இரண்டு பக்கங்களிலும் நின்றும் நெருக்கி, செம்மையை உண்டு இல்லை என்றாக்கி விட்டன. மீதியை அடுத்த பகுதியில் இருந்து தொடர்வோம், சரிதானே!



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
**Certified Food Handlers**
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



**Food Handler Training available for:**
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify*
**CALL TO REGISTER:**
**(416) 744 (HELP) 4357**
**Winter Food and Fund Drive** Started from Nov.15, 2010 Mar.15, 2011
"No One Should Go Hungry"
**HELP US TO HELP THE HELPLESS!**
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

**உங்கள் வீட்டிற்கு அருகாமையில் பரதநாட்டிய வகுப்புக்கள்**



*NIRUTHYA KALAKSHESTHIRA DANCE ACADEMY*
*Ajax (Taunton & Middlecote) *Middlefield & Finch
*Markham & Elson *Mclevin & Neilson
*14th Ave. & 9th Line *9th Line & HooverPark
* Staines & Season Dr.
ஸ்ரீமதி செல்வானந்தி சுகுமார், பரதநாட்டிய கலைமணி, பரதகலாவித்தகி
யாழ். நுண்கலைப்பீடம், வட இலங்கை சங்கீதசபை
416.278.5345 / 416.754.9047

# அமரர் பண்டிதர் கா. பொ. இரத்தினமும் திருக்குறள் மாநாடுகளும்

38-B

கடந்த இதழ் தொடர்ச்சி

ஒரு திருக்குறள் மாநாட்டிலே துண்டுக் கேள்வி ஒன்று மேடையில் நின்ற என்னிடம் வந்தது. அதற்குச் சொன்ன பதிலையே இங்கும் எழுதுகிறேன்.

ஒருவர் துன்பப்படுகிறார். அவருக்கு உதவலாமா? என்று இன்னொருவர் உன்னிடம் ஆலோசனை கேட்டால்? துன்பப்படுவதாக நிற்பவர் உண்மையிலேயே துன்பப்படவில்லை. அவர் வைத்துக் கொண்டு வறுமை யாளரைப் போல் கோலம் காட்டுகிறார் என்று நீ கேள்விப்பட்டிருப்பாய். ஆதலால் அவருக்கு உதவத் தேவையில்லை என்று கருதி கொடுக்க நினைப்பவரைத் தடுக்க நினைக்காதே! அது உங்கள் விருப்பம் என்று மட்டும் பதில் சொல்லிச் சும்மாயிரு. ஏனெனில் நீ கேள்விப்பட்டது பொய்யா கவும் இருக்கலாம். அல்லது நீ கேள்விப்பட்ட காலத்தில் வைத்திருந்தவர் இப்பொழுது அதை இழந்தும் இருக்கலாம். முழுமையான விளக்கம் இல்லாமல் கொடுப்பதைத் தடுப்பது குற்றமே. மீண்டும் நினைவு படுத்து கிறேன். 'சும்மாயிரு சொல்லற என்றலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே' நெடுந்தீவிலே நடந்த திருக்குறள் மாநாட்டிற்கு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் என்னைப் படிப்பித்த பேராசிரியர் ஆறு அழகப்பனாரை வரவழைத்துக் கலந்து கொள்ளவைத்தமை எனக்குத் திருப்தி தருகிறது. ஒரு திருக்கல் வண்டியிலும், இரண்டு மாடுபூட்டி இழுக்கும் கூடார வண்டிலும் இருந்த எனக்கு தனது மோட்டார் வாகனத்தைத் தந்து அழகப்பனாரைப் பிறஇடங்களுக்கும் நெடுந்தீவுக்கும் அழைத்துச் செல்ல உதவிய நமது பள்ளித் தோழன் ஆறு கிருஷ்ணபிள்ளையை நன்றியோடு நினைத்து கொள்கிறேன். நண்பர் கிருஷ்ணபிள்ளை இன்று கனடாவில் வாழ்கிறார்.

புங்குடுதீவில் நடந்த மாநாட்டிற்கு வருகை தந்த தென்மொழி ஆசிரியர் தமிழ் நாட்டுக்கு கடலூர் பெருஞ்சித்திரனார் பற்றி யாழ். ஈழநாடு இதழில் அறிமுகக் கட்டுரை எழுதியதும் நினைவில் வருகிறது. பெருஞ்சித்திரனார் என் பல்கலைக்கழக நண்பர். புலவர் இறைகுருவனாரின் மாமனார். இறை குருவனார் சிறிது காலம் குன்றக்குடி அடிகளார் நடத்திய 'தமிழகம்' இதழுக்கு ஆசிரியராய் இருந்தவர்.

ஈழத்துத் திருக்குறள் மாநாடுகளில் மட்டக்களப்பு செ. இராசதுரை, வட்டுக்கோட்டை அ. அமிர்தலிங்கம், மங்கையற்கரசி அமிர்தலிங்கம், வித்துவான்கள்: க. வேந்தனார், க. ந. வேலன், சி. ஆறுமுகம், சொக்கன், பொன். கனகசபை ஆகியோரும் ஈழவேந்தன், கோவை மகேசன் முதலியோரும் வேறு பல அறிஞர்களும் கலந்து கொண்டனர்.

கவிஞர்கள்: வி. கந்தவனம், தில்லைச் சிவன், தீ.வே. இராசலிங்கம், இ. நாகராஜன், பண்டிதர். பஞ்சாட்சரம், புதுவை இரத்தினதுரை, இ. முருகையன், சோ. பத்மநாதன் முதலியோரும் வேறுபல கவிஞர்களும் கவியரங்குகளில் கலந்து கொண்டனர். சில மாநாடுகளுக்கு இந்தியத் தமிழ் அறிஞர்களும் வரவழைக் கப்பட்டனர். இவர்களை ஈழத்துக்கு அனுப்பும் பணியை சிலம்புச் செல்வர். மா. பொ. சிவஞானம் ஏற்றியிருந்தார்.

வேலணை பங்களாவடி முருகன் ஆலய முன்றலில் நடந்த மாநாட்டில் 'வள்ளுவம்' என்ற நூலை எழுதிய இந்தியத் தமிழகப் பேராசிரியரும் பின்னாளில் மதுரைக்காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராய் இருந்த வ. சுப. மாணிக்கம் நம்மூர் பேராசிரியர்கள். க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, இந்திரபாலா முதலியோரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தும் என் நினைவில் நின்றபடியே இத்திருக்குறள் மாநாட்டை வருடந்தோறும் நடத்துவதற்கு பண்டிதருக்குப் பக்க பலமாய் இருந்த சில அன்பர்களும் எண்ணத்தில் வருகிறார்கள். வேலணை வீரசிங்கம் (புறவுண்சன் கொம்பனி), க. ஜனார்த்தனன், பண்டிதர் க. பொன்னுத்துரை, க. சீவரெத்தினம், செ. இராசரெத்தினம், வே. க. சோமசுந்தரம் சி. க. நடராசா, இரா. சின்னத்தம்பி, வை. இராஜேஸ்வரன், க. கைலாசபிள்ளை உட்படப்பலராவர்.

இந்தத் திருக்குறள் மாநாடுகளில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அரசியலுக்கு வந்த பிறகு மாற்றுக் கட்சி



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 38ஆம் பக்கம்




ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்

பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall)

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi, English, Telugu & Other indian languages

# Yumutra...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

செயற்பாட்டாளர்களாகவும், தீர்மானிப்பாளர்களாகவும் உள்ளனர். கிராமத்துப் பெண்களின் நிலைகளில் மாற்றங்கள் இல்லை. மூன்று படங்களிலும் யுசுப்பின் தாய் வெவ்வேறு நிலைகளில் வருகின்றார். முட்டையில் இறந்தவராகவும், பாலில் ஒரு விதவையாகவும், தேனில் ஒரு தாயாகவும், மனைவியாகவும் உள்ளார். தேனில் ஒரு உற்பத்தியாளராக கணவனுக்கும் மகனுக்கும் உழைப்பவராக உள்ளார். பாலில் ஒரு விதவையாக மகனுக்காக வாழ வேண்டியவராக உள்ளார். முட்டையில் தனது ஆசாபாசங்களை துறந்து இறந்து மகனுக்கு ஒரு புதிய உறவை தேடிக் கொடுத்து விட்டுச் செல்கின்றார். படங்களில் இவர் தோன்றும் நேரங்களும் அவ்வாறே காட்டப்பட்டுள்ளது. தேனில் கணவன் மகனுக்கே அதிக நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களே ஆதிக்க சக்திகள். பாலில் இவருக்கு அதிக காட்சிகள். முட்டையில் இவர் இறந்து விட்டதில் இருந்தே படம் தொடங்குகின்றது. இயக்குனர் ஒரு பேட்டியில் கிராமங்களில் பெண்களின் நிலையை வெளிப்படுத்தவே திரையில் பாத்திரங்கள் தோன்றும் நேரமும் மாற்றப்பட்டுள்ளது என்கின்றார். இதே மாதிரி கடந்த ரொறொன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட செப்பரேசன் என்ற ஈரானிய படத்தில் நீதி மன்றக் காட்சிகளில் கமரா நீதிபதியின் இருப்பிடத்தில் இருந்தே படமாக்கியுள்ளது. இது பார்வையாளர்களை நீதிபதியின் இடத்தில் இருத்துகின்றது. சாட்சிகள், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் ஒரேயளவு நேரமே திரையில் தோன்றுகின்றனர். பார்வையாளர்கள் அனைவரையும் சமமாக மதித்து தங்களது தீர்வைப் பெறவேண்டும். இவ்வாறு மிக நுணுக்கமாக காட்சிகளை அமைக்கின்றார்கள்.

யுசுப்பின் தாயின் பாத்திரம் அத்தகையது. கணவன் இறந்தவுடன் பிள்ளைக்காக வாழ்கின்றார். யுசுப்பின் தாயின் புதிய உறவை ஒரு ஆண் என்ற இடத்தில் இருந்தே பார்க்கின்றார். ஒரு இளம் கவிஞனாக இருந்தும் மரபு முறைகளில் இருந்தே தாயை பார்க்கின்றார். இது இன்றைய துருக்கிய இளைஞர்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடியது. நவீனமயமாக்கல், உலகமயமாதல் போன்ற அனைத்தும் பெண்களின் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தியதா? என்ற கேள்வியை இயக்குனர் இங்கு கேட்கின்றார்.




கிராமங்களின் பொருளாதார நிலையும் முன்னரைப் போல் நிலையானதாக இருக்கவில்லை. உற்பத்தி முறைகளில் பெரும் மாற்றங்கள் இல்லை. நவீன உற்பத்தி முறைகள் கிராமங்களை இன்னமும் முறையாக எட்டவில்லை. இதில் பெரும் லாபமிருந்தால் மட்டுமே முதலீட்டாளர்கள் முதலீடு செய்வார்கள். கிராமங்களில் விவாசாயத்துக்கு அப்பால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பால், முட்டை, தேன் போன்றவையே. இது இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலும் ஒன்றாகவேயுள்ளது.

கிராமவாசிகள் பல துயரங்களை இவ் உற்பத்திகளுக்காக சந்திக்கின்றனர். கடினமாகவும், பாதுகாப்பற்ற பிரதேசங்களிலும் உழைக்கின்றனர். தேன் எடுக்கப் போபவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் இங்கு அழகாக வெளிப்படுத்துகின்றார் இயக்குனர். இப்பகுதியில் உள்ள மூன்று பொருளாதார பொருட்கள் படங்களின் தலைப்பாகவுள்ளன. தேன், பால், முட்டை போன்றவற்றின் வருமானத்திலேயே இக்கிராமம் நகர்கின்றது. இவை மூன்றும் விலங்குகளில் இருந்து பெறப்பட்டு மனித வளர்ச்சிக்கு பயன்படுகின்றன. பெண்களும் இந்நிலையில் தான் கிராமங்களில் ஏன் நகரங்களில் கூட இன்றும் செயற்படுவதாக இயக்குனர் கருத்து தெரிவித்துள்ளார்.

இயக்குனர் ஒரு ஒளிப்பதிவாளராகவும் உள்ளதால் மூன்று படங்களிலும் சுமார் 60 வீதமான காட்சிகள் வசனங்கள் அற்று நகருகின்றன. தந்தையாரால் சிறு வயதிலேயே பிரென்ச் நியுவேவ் படங்கள் மற்றும் Godard, Bresson, Claire, Rohmer, Fassbinder, Herzog, Bunuel, A. R. Grillet போன்றவர்களின் படங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றை பார்த்து வளர்ந்துள்ளார் இயக்குனர். இதனால் இவரது படங்களின் காட்சிகள் பார்வையாளர்களின் சிந்தனையை வளர்க்கின்றன. நேரடிக் காட்சிகள் படத்தில் மிக மிகக் குறைவு. முட்டை படத்தின் இறுதிக் காட்சி யுசுப்பும், அய்லாவும் ஒன்றாக உணவு உண்பதுடன் முடிவடைகின்றது. இவர்கள் இணைந்தார்களா? என்ற கேள்வியெல்லாம் பார்வையாளர்களிடமே விடப்படுகின்றது. தாயுடன் கடந்த ஐந்து ஆண்டுகளாக இருக்கும் அய்லா பற்றி யுசுப்பிற்கு எதுவும் தெரியாது என்பது மற்றொரு விடயம். தாய்க்கும் மகனுக்குமான உறவின் நெருக்கத்தை பார்வையாளர்களே கணிக்க வேண்டும். இதே படத்தின் ஆரம்பத்தில் ஒரு வயது முதிர்ந்த பெண் பனிமூட்டம் உள்ள பிரதேசத்தில் இருந்து ஒரு ஒற்றையடிப் பாதையில் திரையை

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

Be JOB Ready in 5 - 12 months

citi COLLEGE OF CANADIAN CAREERS

Get the skills you need to get the job

IT:
Network Engineering
Enterprise Network Eng.
Internetwork Specialist
(A+ / Network + / MCSE / MCITP / CCNA / CCNP / Linux )

Health Care:
Medical Office Assistant
Personal Support Worker

Business:
Business Administration
Computerized Accounting

CPA ACP
OACC PROUD MEMBER
Microsoft | IT Academy Program

You may qualify for SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours per week
Call us now for details 416-840-9179

Call Today:
416-840-9179
www.CitiCollegeINFO.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005



Second Career clients welcome
Financial assistance may be available for those who qualify

234

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



"காக்க காக்க.."
புல்லாகி பூடாகி புழுவாய் மரமாகி'
பல் மிருகமாகி பறவையாய் பாம்பாகி.
- சிவபுராணம்.. (மாணிக்கவாசகர்)

ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் இப்போ கனிமொழியின்..பிணைக்காக..டில்லிக்கும் சென்னைக்கும் மாறி மாறித்திரியும் முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதியைவிட பிசியாகி விட்டார்கள்

நண்பர்கள் உறவினர்களின் மரணச்சடங்கு, அந்தியேட்டி, அது, இது என தேவையான, தேவையற்ற பிசி.

உலகரும் முருகேசரும் வழமைபோல்.. பழமையை அசைபோட்டுக்கொண்டிருந்தனர்.

சிலர் சிரிப்பார்.. சிலர் அழுவார்..நான் சிரித்துக்கொண்டே..அழுகின்றேன்.
கால மாற்றம் இலை உதிர்காலம்
இளம் உள்ளங்கள், எதிர்காலக் கனவுடன் காலம் கழிக்க
முதியவர்கள், பழமையை நினைத்து சிரித்தும் (மனதுக்குள்) அழுதும் காலத்தைக் கழிக்கின்றனர்.



உலகண்ணை பிறிம்லி மீனாவின்ரை பேரனின்ரை செத்தவீட்டை போட்டுவாறம். அவர் ஊரிலையிருந்த காணியெல்லாம் பக்கத்து பள்ளிக்குடத்துக்கு எழுதி வைச்சிட்டாராம். அவர் இறந்த பிறகுதான் தெரியுமாம். பிள்ளையள் அந்தக்காணியை நினைச்சு அழுதுகொண்டிருக்கினம் என்று சொல்லி முடிக்கமுதலே அது பிழைதானேயென்று பாய்ந்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

செல்லம்மா! நீ எங்கை படிச்சனி? என வெடக்கெனக்கேட்டா ஆட்டிலறி அன்னம்மா.



ராமநாதன் கொலிச்சிலையென முணுமுணுத்தா செக்கண்புளோர் செல்லம்மா.



அந்தக் காலத்திலை தனது காணியிலை சேர். பொன். ராமநாதன் ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இந்துப்பள்ளிக்குடங்களைக் கட்டினவர்.

பள்ளிக்குடத்திலை படிச்சால் மட்டும் காணாது. அந்தப் பள்ளிக்குடங்களின்ரை சரித்திரமும் தெரிஞ்சிருக்கவேணும் என்று அமைதியாகச் சொல்லிமுடித்தார் உலகர்.

அதுதானே....
பள்ளிக்குடத்துக்குக் காணி குடத்ததுக்கு பிள்ளையள் அழுதினமாம், என பெருமூச்சுவிட்டபடி சொன்னா ஆட்டிலறி அன்னம்மா..

அவர் அப்பிடிச் செய்த படியாத்தான் உலக நாடுகள்ளை அவற்றை தினத்தை இண்டைக்கும் கொண்டாடினம். பிள்ளையளுக்கு அவர் காணி எழுதேல்லை யெண்டு ஆக்கள் பேசினவையெணடு சொல்லிக் கொண்டிருக்கிறியள். அவர் கடைசி நேரத்திலை பாக்க மேய்க்க ஆளில்லாமல் முதியோரில்லத்திலை இருந்தது தெரியாதாக்கும் என்று சொல்லிமுடித்தா ஆட்டிலறி அன்னம்மா.



அது சரி அன்னம்மா உனக்கு சீதனமா..உங்கடை அப்பு தந்த பலாலி சீதனக் காணிக்குள்ளை ரஸ்யன் மேட் ராங்கர் 4 5 பாக் பண்ணிக்கிடக்காம் எண்டுசொல்லிச்சிரிச்சா

ஆட்டிலறி அன்னம்மா..அந்தக்காணி பாதுகாப்பு வலயமாக்கி 10 வருசமாச்சு. இப்பவும் நீ அந்தக்காணி வருமெண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறாய்.

அதுசரி உலகண்ணை... ரேடியோ கேட்டனீங்களே...
எலிசபேத் மகாராணியவர்கள் தான் இறந்தபின் மரணச் செய்தி எப்படி வாசிக்கவேண்டும், நிகழ்வுகள், சோக கீதம், துக்கதினம் எப்படியிருக்க வேண்டுமென்று திட்டங்களைப் போட்டுவைத்திருக்கிறா.



எல்லோரும் குறிப்பிட்ட காலம் கழிந்தபின் தங்களின் அடுத்தபிறவி எப்படியிருக்கும் என ஏங்குகிறார்கள்.

சிலர் தமது எஞ்சியுள்ள வாழ்வை எப்படிக் களிக்கவேண்டுமென்று திட்டமிடுகின்றனர் அல்லது கற்பனை செய்கின்றனர். (ஆளுக்கொரு தேதி வைத்து ஆண்டவன் அழைப்பான்)

ஆசையே..துன்பத்திற்கு..காரணம்-----புத்தர்
சிலர் சிரிப்பார். சிலர் அழுவார். நான் சிரித்துக்கொண்டே. அழுகின்றேன்.

கால மாற்றம் இலை உதிர்காலம்.
இளம் உள்ளங்கள், எதிர்காலக் கனவுடன் காலம் கழிக்க

முதியவர்கள் பழமையை நினைத்து சிரித்தும் (மனதுக்குள்) அழுதும் காலத்தைக் கழிக்கின்றனர்.



இத்தனை அமளிதுமளிக்குள்ளும் ராசம்மாக்கா..
சினேகா-பிரசன்னாவை திருமணம் செய்யப்போறாவாம் தெரியுமோ என்று கேட்க..உலகரும் முருகேசரும் ஆட்டிலறி..அன்னம்மாவும் முறைத்துப் பார்க்க..

காலுளையுது நடந்துபோட்டுவாறன் என்றபடி வெளியேறினா செக்கண்ட்புளோர் செல்லம்மா..

## ஞாபகம்..வருகிறதா - நவம்பர்



1. கப்பலோட்டிய தமிழன் சுப்பிரமணியம் சிவா.
17. ஐயப்பன் மாலை அணிதல்
26. சேர்.பொன் ராமநாதன் நினைவு தினம்
27. மாவீரர் தினம்

உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு பிறந்தநாள் வரவிருக்கிறதா?
வாழ்த்துச்சொல்ல மறந்துவிடாதீர்கள்.
உறிரோடிருக்கும்போதே வாழ்த்துங்கள் பாராட்டுங்கள்




இறந்தபின் கல்லறையின் முன் அல்லது சுடுகாட்டில் நின்று கண் கலங்குவதைவிட....
வாழ்ந்தவர் கோடி மடிந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார்?

# அமரர் பண்டிதர்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆதரவாளர்களும் ஒரே மேடையில் நின்று பேசும் சூழ்நிலை உருவாகியது. அரசியலில் தொடர்பு கொள்ளாத காலத்தில் மாநாடுகளில் கலந்து கொண்டவர்களை அரசியல் தொடர்பு காரணமாய் விலக்கிவைக்கக்கூடாது என்னும் பண்டிதரின் பண்பு மெச்சத்தக்கதே. அரசியல் கருத்தால் வேறுபாடுடையவர்கள் தமக்குச் சார்பான திருக்குறள்களைக் கூறி 'தம்மதம்' நிறுவியமையும் சபையோர்க்கு விருந்தாய் அமைந்தது. இலக்கிய இங்கிதத்தின், இன விழுமியத்தின், தொல்சீர்பெருமை மீட்டலின் திருவள்ளுவர் சொன்னது போன்று 'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் என்னும் 'புலமை' உணர்வின் மாண்பினையும் வெளிக்காட்டிய விழைவு மாநாடுகளில் வெளிச்சமாகியது.

நண்பா! அமரத்துவமான பண்டிதரின் நினைவாகத் திருக்குறள் பற்றுடையோர் பயன் உள்ளகாரியம் ஒன்றைச் செய்வது நல்லதல்லவா? பண்டிதர் புலம் பெயர்ந்து சென்னையில் வாழ்ந்த காலத்திலே திருக்குறள் மாநாட்டினை நடத்துவோமா? என்று கேட்டார். அப்போதிருந்த என் மனநிலையும் சூழ்நிலையும் இறுக்கங்க ளும் பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்ற பதிலையே அவருக்குச் சொல்ல வைத்தது. இன்று வயதாகி உடல் முதுமையானாலும் இனிவருங்காலச் தமிழ் சந்ததிக்காய் திருக்குறள் காட்டும் வாழ்க்கை விளக்கத்தைப் பரவலாக்க வேண்டும் என்னும் விருப்பம் உண்டு. டாக்டர். மு. வரதராசனார் எழுதிய 'திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்ற நூலின் உனக்கு நினைவுக்கு வரும் என்று நினைக்கிறேன்.

நண்பர்களோடு இது பற்றிக் கலந்து ஆலோசித்து விட்டு எழுது.

'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணியர் ஆகப் பெறின்' (திருக்குறள்)

வேறு என்ன?
பிறபின்பு.


**வெளிவந்துவிட்டது!**



பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற
Dr. கோபால் அவர்களின்
**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**
**மருத்துவ கைநூல்.**
கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**, *5215 Finch Ave. E, #201*

# Yamutra...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

நோக்கி வந்து பின்னர் எங்களையும் தனது வழியில் நடத்திச் செல்கின்றார். இது போன்ற பல காட்சிகளை மற்றைய இரண்டு படங்களிலும் காணலாம். சிறுவயது யுசுப் பாடசாலையில் பல பிரச்சினைகளை சந்திக்கின்றான். வாசிக்க முடியாமல்



தினறும் யுசுப் தந்தையிடமே வாசித்துக் காட்டுகின்றான். பாடசாலையில் பல மாணவர்கள் இருந்தும் கமாரா யுசுப்பின் மேலேயே நகருகின்றது. இறுதிக் காட்சியிலும் தனித்தே சிறுவன் யுசுப் தந்தையை தேடிச் செல்கின்றான். அங்கு தனியே மரத்தடியில் நித்திரை கொள்கின்றான். சிறுவர்களின் தனிமை அவர்களது பிரச்சினைகள் கேட்பாரற்று போவதை இங்கு இயக்குனர் வெளிப்படுத்துகின்றார். தனது வாழ்பனுவங்களும் இப்படங்களில் காட்சிகளாகவுள்ளன என இயக்குனர் ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய மூன்று படங்களும் துருக்கிய பொருளாதார சமூக கலாச்சார மாற்றங்களை வெகு அழகாக ஆய்வு செய்கின்றன. பல முவ்வியல் படங்கள் வெளிவந்த போதும் இந்த மூன்று படங்களும் இன்றைய காலகட்டத்தின் முக்கிய விடயங்களை சமூக பொருளாதார கலாச்சார காரண-களை ஆய்வு செய்கின்றன. இப்படங்கள் அனைத்தும் வோன் நகர நூல் நிலையத்தில் உள்ளன. காலம் செல்வத்திடமும் பெற்றுக் கொள்ளலாம் 416-731-1752.

# இரத்த சோகையும்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

பயறு, பருப்பு, கோதுமை, பசளி கீரைவகை போன்றவற்றையும் உணவுடன் சேர்த்துக் கொள்வது நன்று. உயிர்ச்சத்து மாத்திரைகளையும் எடுக்கலாம்.

கெற்பம் தரித்தவர்களும் பாலூட்டும் தாய்மாரும் அதிகளவு குளிசைகளையும் தவறாது எடுத்து வருவது உத்தமமாகும். (Polic Acid) போலிக்சிட் எடுக்கலாம். இதன் குறைபாட்டாலும் இரத்த சோகை ஏற்பட இடம் உண்டு என அறிய முடிகின்றது. மேலும் சில குழந்தைகள், பெண்கள் அரிசி, மண் போன்ற பொருட்களை பாவிப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. இதனாலும் இரத்தம் கெட்டு சோகை நிலை வரலாம். இதனைத் தவிப்பதற்கு தாங்களே, தங்களையும், தங்கள் குழந்தைகளையும்




தடை செய்து கொள்ள வேண்டும்.

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361



# சிநேகா...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

அது, என் படத்தில் நடிப்பதற்கு முன்புவரைக்கும் பிரசன்னாவும் சிநேகாவும் ஒருவரையொருவர் நேரில் பார்த்ததுகூட இல்லை என்பது.



'அச்சமுண்டு அச்சமுண்டு' மொத்தம் 28 நாட்கள்ல படப்பிடிப்பு. அதுவும் முழுப் படமும் அமெரிக்காவுல தயாரானது. 12 மணிநேர கோல்ஷீட். எல்லோரும் பறந்துகிட்டே இருப்போம். அந்த நாட்களில் அவர்களுக்குள் ஆரோக்கியமான நட்பு உருவாகியது என்பது உண்மை. நல்ல நண்பர்களாக மாறிப் போனார்கள். இருவரும் அழகான ஜோடிதான். ஆனால், திருமணத்துக்குப் பிறகு சிநேகா நடிக்க மாட்டார் என்பது நிச்சயம் கவலைக்குரிய செய்திதான். நல்லதொரு நடிகையை நாம் இழக்கிறோம்!" என்கிறார் அருண் வைத்தியநாதன்.

கல்யாண ஜோடிக்கு வாழ்த்துகள்!

# கண்ணதாசன்...

போன் செய்தபோது, அப்பாவின் உதவியாளர் உ. அஞ்செமுத்து, "முதலமைச்சர் வீட்டிலிருந்து இரண்டு நாட்களாக உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். உடனே பேசுங்கள்" என்றார். அப்பா, "சென்னைக்கு வந்தபிறகு பேசுகிறேன்" என்றார். ஆனால், சிறிது நேரத்தில் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலைக் கண்டுபிடித்து லோக்கல் போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் வந்துவிட்டார். "உடனே உங்களை முதலமைச்சர் வரச்சொன்னார்" என்றார். அப்பா என்னிடம், "என்னை ஏண்டா முதலமைச்சர் தேடணும்" என்று கேட்டார்.

அப்புறம் போனில் எம்.ஜி.ஆருடன் அப்பா பேசினார். எம்.ஜி.ஆர், "உடனே சென்னை வாருங்கள். விரிவாகப் பேச வேண்டும்" என்று சொல்லிவிட்டார். எனவே, உடனே புறப்பட்டு சென்னை வந்தோம். சென்னையில், "உங்களை அரசவைக் கவிஞராக நியமிப்பது என்று முடிவெடுத்திருக்கிறோம்" என்றார் எம்.ஜி.ஆர். அந்த நேரம் அப்பா, எம்.ஜி.ஆரை அதிகம் திட்டிக் கொண்டிருந்த நேரம். எனவே அப்பா, "வேண்டாம்பா, உன்னை நான் தொடர்ந்து திட்டிக்கொண்டு வருகிறேன். எனவே, என் வாயை அடைக்கத்தான் அரசவைக் கவிஞர் பதவி தருகிறாய் என்று மக்கள் பேசுவார்கள்" என்று மறுத்துவிட்டார். ஆனால், எம்.ஜி.ஆர் உறுதியாக இருந்துவிட்டார். "மக்கள் பேசுவதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நீங்கள் தான் அரசவைக் கவிஞர்" என்று சொல்லிவிட்டார். வீட்டில் எல்லோரும் மருமகள் வந்த நேரம் பதவி வந்திருக்கிறது என்று என் மனைவியைப் புகழ்ந்தார்கள். கல்யாண மேடையில், "நீ வந்த நேரம்தான் எனக்கு பதவி வந்திருக்கிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள் அம்மா" என்று சொன்னார் அப்பா. கல்யாணம் கீழ் திருப்பதியில் நடந்தது. எம்.ஜி.ஆர். கல்யாணத்துக்கு வந்து கல்யாண மேடையிலேயே அப்பாவை அரசவைக் கவிஞராகத் தேர்ந்தெடுத்தி ருக்கும் விஷயத்தைச் சொன்னார்.

அப்பாவுக்கு மிகவும் பிடித்தமன விஷயங்கள் உணவு. மிகவும் விரும்பி விரும்பிச் சாப்பிடுவார். "பறப்பதில் எரோப்பிளேனும் ஓடுவதில் ரயிலும் மட்டும்தான் நான் சாப்பிடாதது" என்று அப்பா சொல்லுவார். நாங்கள் எல்லாம் கல்யாணமாகி குழந்தைகள் பெற்ற பிறகும் சாப்பிடும்போது எங்களுக்கு ஊட்டிவிடுவார். அவருக்கு மிகவும் பிடித்த உணவுகளை, அவர் ஊட்டி நாங்கள் சாப்பிட வேண்டும் என்று அவருக்கு ஆசை. "நீங்கள் குழந்தைகள் பெற்றால் என்ன, இப்போதும் எனக்கு நீங்கள் குழந்தைகள்தான்பா" என்று சொல்லுவார். அப்புறம் பிடித்தது பட்டு வேஷ்டி, பட்டுச் சட்டை, துண்டு. அப்பாவுக்கு பிடிக்கு மென்பதால் ஒவ்வொரு வருடமும் பொங்கல் அன்று அப்பாவுக்குப் பட்டு வேஷ்டி, சட்டை, துண்டு, கொடுத்து அனுப்புவார் எம்.ஜி.ஆர்.

அப்புறம் அப்பாவுக்கு பிடித்தது பேச்சு. நண்பர்களுடன் உட்கார்ந்து மணிக்கணக் காகப் பேசுவார். இரவு வீட்டுக்கு வந்தபிறகும் தொலைபேசியில் பேசிக் கொண்டேயிருப்பார். எம்.ஜி.ஆர், கலைஞர், சிவாஜி, எம்.எஸ்.விஸ்வநாதன்... என்று அதிகாலை வரை அரட்டை தொடரும். இப்பொழுது சில நாட்களில் இரவு முழுவதும் தொலைபேசி மணி அடிக்காமல் சும்மாயிருப்பதைப் பார்க்கும் போது அப்பா நம்முடன் இல்லை என்பது தோன்றும். மற்றபடி அப்பா எப்போதும் எங்களுடனேயே இருக்கிறார்."

ஒரு சிறிய மௌனத்துக்குப் பிறகு, "பேட்டியை முடித்துக்கொள்ளலாம் என நினைக்கிறேன்" என்ற காந்தி கண்ணதாசன் கண்கள் கலங்கியிருந்தன. பையிலிருந்து கர்ச்சீப்பை வெளியில் எடுத்தார்.



RE/MAX Vision Realty Inc. Brokerage.
Each Office Is Independently Owned and Operated
Office: (416) 321-2228
Email: anton.jeeva@gmail.com
Web: AntonJeeva.com
2210 Markham Rd., Suite 1, Toronto, ON M1B 5V6
2007 - 2010
Anton Jeeva Arulappu B.Eng
Real Estate / Principal Mortgage Broker
(416) 575-5055
AWARD WINNING REALTOR
Specialized in bank sale homes
Preconstruction condos in downtown from $239,000
Mortgage can be arranged as low as 2.2 % ( variable)


275,900
20 Brookmill Blvd. Unit 105 End Unit, like semi
Warden/Finch
Bedrooms: 2+1
Washrooms: 2


$449,800
Bur Oak/Markham
Bedrooms: 3
Washrooms: 3


$459,900
Dixie/Sandalwood
Bedrooms: 4
Washrooms: 3
Brand New Basement


599,000
325 Port Union Rd.
Port Union/401
Bedrooms: 4
Washrooms: 3
Basement: Finished
2 years old


$134,900
Midland & Danforth
Bedrooms: 1
Washrooms: 1


starting from $299,000
Want to own a new condo unit in Bathurst/Lakeshore Donmills / Yorkmills
Commercial & Investment properties

Kantha Property Management Group Inc.
KPM Group Inc.
Personal and Business Loans
Line of Credits
Business Setup Consultancy
1st and 2nd Mortgages
Residential and Commercial Leasing
Investment Properties
Property Management Services
Bad Credit Solutions
Bankruptcy
Consumer Proposals
T: 416-214-6161
F: 416-465-3535
3015 Kennedy Road, Suite 205, Toronto, ON M1V 1E7
www.KPMInvestment.com, kantha@KPMInvestment.com

HARD WOOD
$250 Use for the stairs
Oak Hardwoods Select & Better $3.99
Laminate 12.3 - $1.29
Hardwood Installation - $1.50
123 - 4800 Sheppared Ave. East.
Scarborough

Contact: 416.830.3932
We do custom stairs

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES